இலக்கண விளக்கம்

சொல்லியல்

இலக்கண விளக்கம்

(சொல்லியல்)

கலாநிலயம்

கே. ராஜகோபாலாச்சாரியார்

ஸ்டார் பிரசுரம்

66, பெரிய தெரு

திருவல்லிக்கேணி சென்னை-5

இலக்கண விளக்கம்—2
முதற் பதிப்பு: ஆகஸ்ட்—1962
இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி—1968
(C) Star Publications

விலை ரூ. 2-50

STAR PUBLICATIONS
66, BIG STREET
TRIPLICANE :: MADRAS-5

அச்சிட்டோர்:
நண்பர்கள் அச்சகம்,
ஆள்வார்பேட்டை, சென்னை-18

முன்னுரை

இலக்கண விளக்கம் என்ற தலைப்பில் வெளிவரும் முதல் புத்தகத்தில் எழுத்திற்குரிய இலக்கணத்தைப் பார்த்தோம். எழுத்துக்களின் தன்மை, எண், பிறப்பு, அளவு முதலியவை எழுத்தியலில் விளக்கப் பெற்றது.

எழுத்துக்களால் ஆவது சொல். சொல்லும், பெயர், வினை, இடை, உரி என்று நான்கு வகைப்படும். இந் நால்வகைச் சொற்களுக்குரிய இலக்கணம் சொல்லியல் என்ற தலைப்புடைய இவ்விரண்டாவது புத்தகத்தில் விளக்கப் பெறுகின்றது.

செய்யுள்களின் பொருள் அறிந்து அனுபவிப்பதற்கும், புணரிலக்கணங் கற்பதற்கும், பெயர்ச்சொல் அடையும் வேற்றுமைகளையும், அவைகளுக்குரிய பொருள்களையும் நேயர்கள் நன்கு அறிதல் அவசியமாதலால், அப் பகுதியை இந்நூலில் விரிவாக விளக்கியுள்ளோம்.

சொல்லின் உறுப்புக்களைப்பற்றிய இலக்கணத்தைப் பவணந்தி முனிவர், அவராக்கிய நன்னூலில், பதவியல் என்ற தலைப்பில், எழுத்திலக்கணத்தின் ஒரு பகுதியாக அமைத்து விளக்கியுள்ளார். இவ்வியலுக்குப் பெரும் பாலும் ஆதாரம் வடமொழி யாதலால், அதுதோன்ற நன்னூலாசிரியர், மொழியியல் அல்லது சொல்லுறுப் பியல் எண்ணுமல் பதவியல் என்று தலைப்பு ஈந்தனர் போலும்.

வடமொழியில், இப்பதவிலக்கணம் மிக விரிவானதாகும். நம் தமிழ் நாட்டுப் பெரியோர் இதற்கு இலக்கணத்தில் விரிவான இடங் கொடுக்காமை கருதத்தக்கது. இவ்விலக்கணம், புலமையின் இன்றியமையா அம்சமாக எமக்குத் தோன்றவில்லை. நூல்ரஸனைக்கு இது துணையமையும் பான்மைய தன்று. விவகாரத்திற்கே வழி கோலும்.

எனினும், இது இலக்கணத்தின் ஒரு பகுதியாக இடம் பெற்றிருத்தல் பற்றி, இதன் இலக்கணத்தையும் அநுபந்தத்தில் அளவொடு கூறியுள்ளோம்.

எல்லா இலக்கணங்களுக்கும் ஆதாரமான எழுத்து, சொல் இலக்கணங்களை முதல் மூன்று புத்தகங்களில், எழுத்தியல், சொல்லியல், புணரியல், என்ற தலைப்புக்களில், எல்லோரும் விதிகளை எளிதே உணர்ந்து கொள்ளும் முறையில் வகுத்துரைத்துள்ளோம். இம் மூன்று நூல்களையும் பயில்வோர், இலக்கணத்தில் நல்ல புலமை பெறல் இயல்வதே. மாணவர்களும், இலக்கியம் பயின்று வருவோரும், இலக்கணப் பயிற்சியின்றி எழுத்துத் துறையில் ஈடுபட்டிருப்போரும் இந்நூல்களைப் பயன்படுத்திக் கொள்ளல் நலமுடையதாகும்.

பொருள், யாப்பு, அணி இலக்கணங்களும் தொடர்ந்து விரைவில் வெளிவரும்.

கே. ராஜகோபாலாச்சாரியார்,
கலாநிலயம்

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	சொல்வகை	... 1
2.	பெயர்ச்சொல்	... 12
3.	வினைச்சொல்	... 50
4.	இடைச்சொல்	... 89
5.	உரிச்சொல்	... 101
6.	அநுபந்தம்	... 106

இலக்கண விளக்கம்

சொல்லியல்

1. சொல் வகை

மொழிமுதற் காரணமாகும் ஒலியின் வரி வடிவம் எழுத்து என்பதையும், அவ்வெழுத்துக்களின் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், அளவு முதலியவை களைப் பற்றியும் எழுத்தியலில் அறிந்தோம். இனி, நாம் சொல் லிலக்கணத்தைப் பார்ப்போம்.

எழுத்துக்களின் சேர்க்கையால் ஆவது சொல். "சொல், மொழி, பதம், வார்த்தை" என்பவை ஒரு பொருளுடைய பல சொற்கள். தமிழ் இலக்கண முறைகளுக்கு அடங்கி நடக்கும் சொற்கள் தமிழ்ச் சொற்களாகும். அத்தமிழ்ச் சொற்கள் இயற்சொல் என்றும் திரிசொல் என்றும் இருவகைப்படும். இவ்விரு வகைச் சொற்களும் நமது தாய்மொழியாகிய தமிழிற்கே உரிய சொற்கள்.

இயற்சொல்

செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொல்லாகி, எளிதில் கற்றோர் கல்லாதார் அனைவரும் பொருள் தெரிந்து கொள்ளும்படி அமைந்த சொல், இயற்சொல் எனப்படும். அதாவது, எளிதில் பொருளை உணர்த்தும் இயல்பின தான தமிழரின் தாய் மொழிச் சொல் இயற்சொல்.

இயற்சொல் என்னுந் தொடர், இயல்பாய் யாவர்க்கும் பொருள் விளங்குந் தன்மை வாய்ந்த சொல் என்னும் பொருளது.

மண், பொன், கால், கோவில், காடு, மரம், என்பவை இயற்சொல்லுக்கு உதாரணங்கள். இவை எல்லோரும் எளிதே பொருள் தெரிந்துகொள்ளக் கூடிய பெயர்ச் சொற்கள். ஆகவே, இவற்றைப் பெயர் இயற்சொல் என்று அழைப்பர்.

நடந்தான், நின்றுன், வந்தான், போனுன், என்பவை, எளிதே பொருள் உணர்த்தும் வினைச் சொற்கள். எனவே, இவற்றை வினை இயற்சொல் என்று அழைப்பர்.

அவனை, அவனுல், அவனுக்கு என்பவைகளிலுள்ள ஐ, ஆல், கு என்னும் வேற்றுமை உருபுகள் இடைச் சொற்களாகும். இவைகளுக்குத் தமக்கென்ற ஒரு பொருள் இல்லை. பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல் லோடு சேர்ந்தே பொருள் பெறும் தன்மையின அவை. அவைகளின் பொருளைக் கல்லாதாரும் எளிதே அறிந்து கொள்ளலாம். எனவே, அவைகளை இடை இயற்சொல் என்றழைப்பர்.

உரிச் சொல் என்பது பண்பினைக் குறிக்கும் ஒரு சொல். பெயர் வினையுடன் விட்டு நீங்காததாய் நின்று, அவைகளின் குண தொழில்களாகிய பண்பினைச் சிறப் பிக்கும் இயல்பினது. யாவர்க்கும் எளிதே பொருள் விளங்கும் தன்மையது அன்று உரிச்சொல்.

கற்ருேர் அல்லாதாரும் எளிதே பொருள் தெரிந்து கொள்ளக் கூடியதாய் வழங்கிவரும் தமிழ்ச் சொல்லே இயற்சொல் ஆகும்.

இதற்குரிய நன்னூல் சூத்திரம் வருமாறு:—

"செந்தமி ழாகித் திரியாது யார்க்கும்
தம்பொருள் விளக்குந் தன்மைய
இயற்சொல்"

[செந்தமிழ் ஆகி-செந்தமிழ் நாட்டில் வழங்கிவரும் மொழியாகி, திரியாது - திரிசொல்போல் ஆகாமல், யார்க்கும்-படித்தவர் படியாதவர் என்ற பேதமில்லாமல் எல்லோருக்கும், தம்பொருள்- தமது பொருளை, விளக்கும் —தெரிவிக்கின்ற தன்மைய - தன்மையை உடைய வழக்கச் சொற்கள், இயற்சொல் - இயற்சொற்கள் ஆகின்றன,—என்பது இச்சூத்திரத்தின் பொருள்.]

திரிசொல்

கல்லாதாரால் பொருள் உணர முடியாததும், கற்றவர்க்கே விளங்கக் கூடியதுமான சொல் திரிசொல் எனப் படும்.

"ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும்
பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல்லாகும்"

என்பது நன்னூல் சூத்திரம்.

[ஒருபொருள் குறித்த- ஒருபொருளையே குறித்து நிற்கின்ற, பல சொல் ஆகியும்-பல சொற்களாகியும், பல பொருள் குறித்த—பலபொருள்களைக் குறித்து நிற்கின்ற, ஒரு சொல் ஆகியும்-ஒரே சொல்லாகியும், அரிது உணர் பொருளன-(படித்தவர்களால்) அரிதாக அறியவேண்டிய பொருள்களை உடையவை, திரிசொல் ஆகும்-திரிசொற்களாகும்—என்பது சூத்திரப் பொருள்.]

திரிசொல் என்ற தொடர் இயற் சொல்லினின்று திரிந்த அல்லது வேறுபட்ட சொல் என்னும் பொருளது. அரிதின் பொருளுணர வேண்டியதாய் இருப்பதால் திரிசொல் என்ற பெயரினது ஆயிற்று.

உதாரணம்:—

காசு—குற்றம், பொன், மணி முதலிய பல பொருள் களை உடையது.

நாகம்—பாம்பு, மலை, சுவர்க்கம், புன்னை, யானை முதலிய பல பொருள்களை உடையது. எனவே, காசு, நாகம் என்பவை, பலபொருள் உணர்த்தும் ஒரு பெயர்த் திரிசொல் ஆகின்றன.

விலங்கல்,
மாதிரம்,

வெற்பு—மலை என்னும் ஒரு பொருளுடைய பல சொற்கள் இவை.

கிள்ளை,
தத்தை,
சுகம்,

அரி—கிளி என்னும் ஒரு பொருளை யுடைய பல சொற்கள் இவை. எனவே, மேலே காட்டிய சொற்கள் ஒரு பொருள் உணர்த்தும் பல பெயர்த் திரிசொல் ஆகின்றன.

பெயர்ச் சொல்லேபோல், வினைச் சொற்களும் அரிதுணர் பொருளனவாய்த் திரிந்து வருவதுண்டு. அவைகளைப் பார்ப்போம்,

உதாரணம்:—

படர்ந்தான்,

ஏகினன்—போனன் என்ற ஒரு பொருள் உடைய பல சொற்கள்.

புடைத்தான்,

மோதினன்—அடித்தான் என்ற ஒரு பொருளுடைய பல சொற்கள், எனவே, அவை ஒரு பொருள் உணர்த்தும் பலவினைத் திரிசொல் ஆகின்றன.

வரைந்தான்—மணந்தான், எழுதினன், நீங்கினன் என்ற பல பொருள்களை உடைய ஒரு சொல்.

மறுகினன் :—சோர்ந்தான், மயங்கினன், துன்பமுற்றான் என்ற பல பொருள்களை உடைய ஒரு சொல். எனவே, அவை பல பொருள் உணர்த்தும் ஒரு வினைத்திரிசொல் ஆகின்றன.

இனி, அரிதின் பொருளுணர வேண்டியன வாய் நிற்கும் சில இடைச் சொற்களையும், உரிச் சொற்களையும் பார்ப்போம்.

சேறும் (செல் - றும்),

வருதும் (வா - தும்)—இச் சொற்களிலுள்ள றும், தும் என்னும் விகுதிகள், தன்மைப் பன்மை எதிர்காலம் என்னும் ஒரு பொருளை உணர்த்தும் பல இடைச் சொற்கள். எனவே, அவை, ஒரு பொருள் உணர்த்தும் பல இடைத்திரி சொற்கள் ஆகின்றன.

கொல்—ஐயம், வினா முதலிய பொருள்களை உணர்த்தும் ஓர் இடைச் சொல். "மாதர் கொல்!"

என்னுங்கால் ஐயத்தையும், "உண்டுகொல்?" என்னுங்கால் வினவையும், கொல் என்னும் இடைச் சொல் உணர்த்துகின்றது. எனவே இது பல பொருள் உணர்த்தும் ஓரிடைத் திரிசொல்.

சால, உறு, தவ, நனி, கழி, கூர் என்பவை பெயர் வினையோடு சேர்ந்து மிகுதிப் பொருளை உணர்த்தி நிற்கும் உரிச் சொற்களாகும். எனவே, இவை ஒரு பொருள் உணர்த்தும் பலவுரித்திரி சொல் ஆகும்.

கடி என்பதும் ஓர் உரிச்சொல். இது, "சிறப்பு, வரசனை, காப்பு, கூர்மை, விளக்கம்" முதலிய பொருள்களை உணர்த்தும் ஒரு சொல், எனவே, இது பலபொருள் உணர்த்தும் ஒருரித்திரி சொல் ஆகும்.

இடைச் சொல், உரிச் சொல் இலக்கணத்தை உரிய இடத்தில் விளக்குவோம்.

வடசொல்

ஆதியில் இமயமலைப் பிரதேசங்களிலும், கங்கைக் கரையிலுள்ள காசி முதலிய விடங்களிலும் வசித்து வந்தவர்கள், தமிழகம் போந்து தமிழ் மக்களோடு கலந்து விட்டனர். அவர்களுடைய பாஷை சமஸ்கிருதம். வடக்கிலிருந்து வந்தவர்களின் பாஷையாதலால், அதை வடமொழி என்றும் அழைப்பதுண்டு. அப்பாஷைச் சொற்கள் பல தமிழில் இடங்கொண்டன. தமிழொடு கலந்த பிற மொழிச் சொற்களில், வடமொழிச் சொற்களே பெரும் பாலானவை ஆகும்.

வடமொழியில் உயிரெழுத்துப் பதினாறு; மெய் முப்பத்தேழு. உயிர் எழுத்தில், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ,

ஐ, ஓ, ஔ என்னும் பத்து எழுத்துக்களும், மெய்யெழுத்தில், க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ள என்ற பதினைந்து எழுத்துக்களும் வடமொழிக்கும் தமிழிற்கும் பொதுவான எழுத்துக்கள். இவை ஒழிந்த இருபத்தெட்டு எழுத்துக்களும் வடமொழிக் குரிய சிறப்பெழுத்துக்கள். ற, ன, ழ, எ, ஒ என்னும் எழுத்துக்கள் வடமொழியில் இல்லை. எனவே, இவை தமிழிற்கே உரிய சிறப்பெழுத்துக்கள் ஆகின்றன.

வடமொழிச் சிறப்பெழுத்துக்களான வடமொழிப் பதங்களை நம்முன்னையோர் தமிழ் முறைக்கு ஏற்றபடி திரித்துக் கொண்டனர். பொது எழுத்துக்களாலான வடமொழிப்பதங்களை அப்படியே ஏற்றுக் கொண்டனர். எனவே, இரு பாஷைக்கும் பொதுவான எழுத்துக் களாலான வடமொழிச் சொல், தமிழில் வந்து வழங்கும் பொழுது, அதைத் தற்சமம் என்று அழைப்பர். வட மொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்களாலும், அல்லது பொதுவும் சிறப்புமாகிய எழுத்துக்களாலும் ஆகித் திரிதல் முதலிய விகாரங்களை அடைந்து தமிழில் வழங்கும் வடமொழிச் சொல்லை தற்பவம் என்பர்.

தற்சமம் (தத்சமம்)—தமிழ்ச் சொல்லுக்குச் சமமான வடமொழிச் சொல்.

தற்பவம் (தத்பவம்)—வடமொழியிலிருந்து திரிந்து தமிழில் வழங்கும் சொல்.

உதாரணம்:—

அமலம்
கமலம்
காரணம்

மேரு—இவை, தமிழிற்கும் வடமொழிக்கும் பொது வான எழுத்துக்களாலான சொற்கள். இவ்வட மொழிச் சொற்கள் எவ்வித விகாரமும் அடையாமல் தமிழில் வழங்கி வருகின்றன. எனவே இவை தற்சமம் ஆகும்.

பங்கயம் (பங்கஜம்)
அரி (ஹரி)
வருடம் (வருஷம்)

சபை (ஸபா)—இவை, வடமொழியின் சிறப் பெழுத்துக்களாலும், பொதுவும் சிறப்புமாகிய எழுத்துக்களாலும் ஆகித் திரிதல் முதலிய விகாரங்களை அடைந்து தமிழில் வழங்கி வரும் வடமொழிச் சொற்கள். எனவே, இவை தற்பவம் ஆகும்.

வடமொழியில், ரு, ரூ, லு, லூ என்ற உயிர் எழுத் துக்கள் இருக்கின்றன். இவைகளை இரு, இரூ, இலு, இலூ, என்று இகர ஒலி சிறிது கொடுத்து உச்சரிக்க வேண்டும். இவை, வடமொழிக்குரிய உயிர்வர்க்கச் சிறப் பெழுத் துக்கள், ஜ, ஷ, க்ஷ, ஸ, ஹ போன்ற மெய்கள் தமிழில் இல்லை. எனவே, இவை வடமொழிக்குரிய மெய்வர்க்கச் சிறப்பெழுத்துக்கள்.

திசைச் சொல்

செந்தமிழ் நாட்டிற்கு அப்பாலான பல திசைகளி லிருந்தும் வந்து தமிழ் மொழியில் இடம் பெற்ற சொற்கள் திசைச் சொற்கள் ஆகும்.

வடக்கே திருவேங்கட மலையையும், தெற்கே தென் குமரி யாற்றையும், கிழக்கிலும் மேற்கிலும் கடலையும்

எல்லையாகவுடையது தமிழ்நாடு என்று தொல்காப்பியத் திற்குப் பாயிரம் கூறிய பனம்பாரனுர் என்பவர் தெரி விக்கின்ருர்.

தமிழ் நாட்டின் தெற்கெல்லையாகும் குமரியாறும், முதல் சங்கம் இருந்த மதுரையும் கடல் கோளால் அழிந் தன என்று நூல்கள் கூறுகின்றன. இக்கடல்கோளைப் பற்றிய செய்தி, சிலப்பதிகாரம் வேனிற்காதை உரை யிலும், இறையனுர் அகப்பொருள் உரையிலும், நச்சி ஞர்க்கினியரும், இளம்பூரணரும் செய்த தொல்காப்பிய உரைகளிலும் இடம் பெற்றுளது.

தமிழ் நாட்டின் தென்புற எல்லையைச் சார்ந்தும், தமிழ் பேசப்பட்டும் இருந்த பன்னிரண்டு நாடுகள் கொடுந் தமிழ் நாடு என்று அழைக்கப் பெற்றன. அவைக ளாவன:—தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, கற்கா நாடு, வேணுடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவா நாடு, அருவாவடதலை நாடு, சீதா நாடு, மலையமான் நாடு, புனல் நாடு. இப்பன்னிரண்டு நாடுகளிலும் பேசப்படுந் தமிழை ஆன்ருேர் கொடுந்தமிழ் என்று அழைத்தனர். இக்கொடுந்தமிழ் நாடுகளிலிருந்து வந்து தமிழில் கலந்துவிட்ட சொற்களைத் திசைச் சொற்கள் என்பர்.

தமிழில் வழங்கும் கொடுந்தமிழ் நாட்டுத் திசைச் சொற்கள் வருமாறு :—

பசு—பெற்றம்—தென்பாண்டி நாடு.
சோறு—சொன்றி ,, ,,
தாய்—தள்ளை—குட்டநாடு
தந்தை—அச்சன்—குடநாடு
வஞ்சகர்—கையர்—கற்கா நாடு,

தோட்டம்—கிழார்—வேணாடு
சிறுகுளம்—பாழி—பூழி நாடு
வயல்—செய்—பன்றி நாடு
கிணறு—கேணி—அருவா நாடு
புளி—எகின்—அருவாவடதலை நாடு
தோழன்—எலுவன்—சீதா நாடு
தோழி—இகுளி — ,, ,,
நல்லநீர்—வெள்ளம்—மலையமான் நாடு.
தாய்—ஆய்—புனல் நாடு

தமிழ் நாட்டின் கலைவளமும் பொருள் வளமும் கொடுந்தமிழ் நாடுகள் ஒழிந்த பிறநாடுகளையும் கவர்ந்தன. அந்நாட்டார் தமிழ் நாட்டோடு வியாபாரத் தொடர்பு கொண்டனர். அத்தொடர்பினால், அயல் மொழிச் சொற்கள் சில தமிழில் இடங்கொண்டன. அச் சொற்களும் திசைச் சொற்களாகும். தமிழ் நாட்டோடு வியாபாரசம்பந்தங் கொண்ட நாடுகள் பதினேழு என்று நூல்கள் கூறுகின்றன. அவைகளாவன :—"சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கவுடம், குசலம்."

அந்நாடுகளிலிருந்து வந்து தமிழில் வழங்கிவரும் திசைச் சொற்கள் வருமாறு :—

மாமரம்—கொக்கு—துளுவ நாடு
அகப்படுதல்—சிக்குதல்—கன்னடம்

கருத்தாய் இருத்தல்—எச்சரிக்கை சொல்லுதல்—செப்புதல் விழா—பண்டிகை	தெலுங்கு நாடு.

இவைபோல் வேறுசில சொற்களும் உள. அவை களை நூல்களில் வருங்கால் கண்டு கொள்க. முகமதியர் களும், ஆங்கிலேயர்களும் நம் நாட்டில் ஆட்சி செலுத் தியதின் பயனுகவும், ஐரோப்பிய நாட்டாரின் வர்த்தகத் தொடர்பினுலும், ஜன்னல், ஜில்லா, டாக்டர், சால்வை, ஜாப்தா, பங்கா, ஜமீன்தார் முதலிய சொற்களும் பிற்காலத்தில் தமிழில் இடம் பெற்றன. இச்சொற்கள் இலக்கிய வழக்கு அற்றவை. இவ்வாறு தமிழில் வந்து வழங்கும் வடமொழி யொழிந்த மற்றெல்லாச் சொற் களும் திசைச் சொற்களின்பாற் படும்.

இயற்சொல் திரிசொல்லோடு, வடமொழிச் சொற் களையும், இலக்கிய வழக்குடைய திசைச் சொற்களையுங் கொண்டது தமிழ் மொழி. இத்தமிழ் மொழி, பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நான்கு பெரும் பிரிவுகளை உடையது. இனி, நாம் அவைகளை ஒவ்வொன்ருய் எடுத்துக் கொண்டு அவைகளின் இலக்கணத்தைக் கருதுவோம்.

2. பெயர்ச் சொல்

சிருஷ்டியில் காணப்படும் பொருள்கள் பல. தோற்றம், தொழில், குணங்களால் வேறுபட்டு நிற்கும் பொருள்களை நாம் அறியப் பெயர் அவசியமாகின்றது. எனவே, ஒன்றினைக் குறித்து நிற்கும் சொல் பெயராகின்றது. அப்பெயரும் இடு குறிப் பெயர் என்றும், காரணப் பெயர் என்றும் இருவிதப்படும்.

காரணம் ஒன்றும் இல்லாமல் தொன்று தொட்டு இட்டகுறியாக வழங்கிவரும் பெயர் இடு குறிப் பெயர். மண், மரம், கல் முதலியன இடுகுறிக்கு உதாரணங்கள்,

ஒரு காரணம் பற்றி ஒரு பொருளைக் குறித்து நிற்கும் பெயர் காரணப் பெயர். அணி என்பது அணியப்படும் ஆபரணங்களின் பெயர். அணியப் படுங் காரணத்தால் அணி என்பது காரணப் பெயர் ஆகின்றது. பழம் என்பது பழுத்தலாகிய காரணத்தால் காரணப் பெயர். அவ்வாறே, பறவை, சிறுவன், கணக்கன் முதலியவை காரணப் பெயர்களுக்கு உதாரணம்.

காரண, இடுகுறிப் பெயர்கள், பொதுப் பெயர் என்றும் சிறப்புப் பெயர் என்றும் இருவிதப்படும்.

மரம் என்பது இடுகுறிப் பெயர். இது, தென்னை, பலா, மா, முதலிய எல்லாமரங்களுக்கும் பொதுப் பெயர். எனவே, மரம் என்பது இடுகுறிப் பொதுப் பெயர் ஆகும்.

பலாமரம் என்போமாயின், அது, தென்னை, மா, கமுகு முதலிய மரங்களை விலக்கி, ஒருவகை மரத்தைக்

குறிப்பதாகின்றது. எனவே, பலா என்பது இடு குறிச் சிறப்புப் பெயர் ஆகும்.

அவ்வாறே, காரணப் பெயரும், காரணப் பொது, காரணச் சிறப்பு என்று இரு விதப்படுகின்றது. அணி, என்பது, அணிந்து கொள்ளும் எல்லா ஆபரணங் களையும் குறிப்பதால், காரணப் பொதுப் பெயர் ஆகும். சிலம்பு, வளை, குண்டலம் முதலியவைகள் தனித்தனி ஒரு வகை ஆபரணத்தைக் குறிப்பதால், காரணச் சிறப்புப் பெயர் ஆகின்றன.

காரணப் பெயர், இடுகுறிப் பெயர் என்ற பாகுபாடு உடைய தமிழ்ச் சொற்கள், பொருள் இடம் காலம் தொழில் தன்மைகளால், பல்வேறு வகைப்படுகின்றன. ஒருசொல், மனிதன், மாடு, பறவை, பொன் என்பன போல் பலபொருள்களின் பெயரைக் குறிக்கலாம்.

அல்லது, ஒரு பொருளின் குணத்தை, ஒரு சொல் குறிக்கலாம். குணம், தன்மை, பண்பு என்பவை ஒரே பொருளுடைய பல சொற்கள். அழகு, சிவப்பு, உயரம், அகலம் முதலிய சொற்கள், பொருள்களின் பெயர்கள் அல்ல. பொருள்களின் தன்மையைக் குறிக்கும் சொற்கள்.

ஓதல், ஓட்டம், பேச்சு, கொலை முதலிய சொற்கள், பொருளின் பெயரையோ, குணத்தையோ குறிக்கவில்லை. ஒரு தொழிலைக் குறிப்பவை அவை.

சிலசொற்கள், இடத்தையும் குறித்து நிற்கலாம். ஆதலால், சொற்கள், பொருட் பெயர், இடப்பெயர், காலப் பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்று ஆறுவகைப்படுகின்றன.

பொருட்பெயர்:—மனிதன், பறவை, மாடு, பொன் முதலியன.

இடப்பெயர்:—வானம், பூமி, ஊர், நாடு முதலியன.

காலப்பெயர்:—வருடம், மாதம், வாரம், நாள் முதலியன.

சினைப்பெயர்:—கை, கால், சிறகு, கிளை முதலியன.

குணப்பெயர்:—சிவப்பு, கருப்பு, நீளம், ஒளி, அழகு முதலியன.

தொழிற்பெயர்:—ஓட்டம், சிரிப்பு, ஆட்டம், பேச்சு, ஈதல் முதலியன.

நிற்க, அ, இ, உ, எ, ஏ, யா என்னும் சுட்டு வினு அடியாகவும், மற்று, பிற என்னும் இடைச் சொற்கள் அடியாகவும் பெயர்கள் பிறக்கலாம். அவைகளை இடைச் சொல் அடியாகப் பிறந்த பெயர்கள் என்பர். அவன், அவள், இவன், இவள்; உவன், உவள்; எவன், எவள்; ஏவன், ஏவள்; யாவன், யாவள்; பிறன், மற்றவன், என்பவை இடைச் சொல்லடியாகப் பிறந்த பெயர் களுக்கு உதாரணம்.

இனி, மேலே கூறிய பெயர்ச் சொற்களின் எண், இடம், திணை, பால், வேற்றுமைகளைப் பற்றிய இலக் கணத்தை அறிவோம்.

எண்

எண் என்ருல் எண்ணிக்கை, இது ஒருமை பன்மை என்று இருவிதப்படும். இதை ஆங்கிலத்தில் Number என்பர். ஒரு பெயர்ச்சொல் ஒரு பொருளைக் குறிக்கு மாளுல் ஒருமை. ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்குமாளுல் பன்மை.

மனிதன், மரம், கிளி—ஒருமை.

மனிதர்கள், மரங்கள், கிளிகள்—பன்மை.

அவன், அவள். அது—ஒருமை.

அவர், அவை, அவைகள்—பன்மை.

இடம்

இடம் என்ருல் ஸ்தானம். அது, தன்மை, முன்னிலே, படர்க்கை என்று மூன்று வகைப்படும். பேசுவோனைக் குறித்து நிற்குஞ் சொல், தன்மை இடத்தது. கேட்போனைக் குறித்து நிற்குஞ் சொல் முன்னிலே இடத்தது. கேட்போனும், பேசுவோனும் அல்லாத பிறவெல்லாம் படர்க்கையின் பாற்படும். இதை ஆங்கிலத்தில் முறையே, First Person, Second Person, Third Person என்று அழைப்பர்.

தன்மை—யான், நான், யாம், நாங்கள் என்பவை தன்மை இடத்த. ஆங்கிலத்தில் First Person எனப்படும்.

முன்னிலே—நீ, நீர், நீவிர், நீயிர் என்பவை முன்னிலே இடத்த. ஆங்கிலத்தில் Second Person எனப்படும்.

படர்க்கை—அவன், அவர், அது, அவை, அரசன், காடு, வீடு முதலியன படர்க்கை இடத்த. ஆங்கிலத்தில் Third Person எனப்படும்.

எல்லாம் என்னும் பன்மைப் பெயர் தன்மை, முன்னிலே, படர்க்கையாகிய மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். எனவே, இதை இடப் பொதுப் பெயர் என்று அழைப்பர்.

நாம் எல்லாம், யாம் எல்லாம்—தன்மை.
நீவிர் எல்லாம், நீங்கள் எல்லாம்—முன்னிலை.
அவை எல்லாம், அவர் எல்லாம்—படர்க்கை.

திணை

திணை என்பது குலம் அல்லது சாதி என்னும் பொருளது. இது உயர்திணை என்றும், அஃறிணை என்றும் இருவகைப்படும். அறிவினால் உயர்ந்த மக்களும் தேவரும் உயர்திணையைச் சேர்ந்தவராவர். அறிவுணர்ச்சி இல்லாதவைகள் எல்லாம் அஃறிணையின் பாற்படும். அல்திணை என்பதுதான் புணர்ச்சி விகாரத்தால் அஃறிணை ஆகின்றது. ஆடு, மாடு, பொன், மரம், பாம்பு முதலியவை அஃறிணைக்கு உதாரணம்.

பால்

திணையின் உட்பிரிவு பால். பால் என்றால் பகுப்பு. இப்பால், ஐந்துவகைப்படும். அவையாவன:—ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால். உயர் திணையே, ஆண், பெண் என்ற பால் வேற்றுமை உடையது. அஃறிணையில் பால் வேற்றுமை இல்லை.

அன், ஆன், மன், மான், ன் என்பவை உயர்திணை ஆண்பால் விகுதிகள். வெற்பன், சீனத்தான், வடமன், கோமான், பிறன் என்பவை உதாரணங்கள்.

அள், ஆள், ள், இ என்பவை உயர்திணைப் பெண் பால் விகுதிகள். குழையள், மண்ணகத்தாள், பிறள், வானத்தி என்பவை உதாரணங்கள்.

அர், ஆர், மார், ர் என்பவை உயர்திணைப் பலர்பால் விகுதிகள். தமர், புறத்தார், தேவிமார், பிறர் என்பவை உதாரணங்கள்.

து, என்பது அஃறிணை ஒன்றன் பால் விகுதி. அது, இது, எது, யாது, நிலத்தது, கொம்பினது, பிறிது, மற்றையது முதலியன துவ்விகுதி பெற்ற ஒன்றன்பால் பெயர்க்கு உதாரணம்.

அ, வை, கள் அஃறிணை பலவின் பால் விகுதிகள். குழையன, அவை, எவை, யாவை, அவைகள், முதலிய உதாரணங்கள்.

குறிப்பு: - ஒன்று என்னும் எண்ணுப் பெயர் துவ் விகுதி பெறாத ஒன்றன் பால் பெயர். இரண்டு, மூன்று, நூறு, ஆயிரம் முதலியன ஒன்றல்லாத எண்ணுப் பெயர்கள் பலவின்பால் பெயர்கள்.

தேவிமார் - கள் தேவிமார்கள் என்றும், அவை - கள் அவைகள் என்றும், அவர் - கள் அவர்கள் என்றும், கள் என்பது விகுதிமேல் விகுதியாக வருவதுண்டு.

திணைப்பொதுப் பெயர்.

உயர்திணை, அஃறிணை இரண்டிற்கும் பொதுவான பெயர்கள் திணைப்பொதுப் பெயர் எனப்படும்.

யான், நான், நீ என்னும் ஒருமைப் பெயர்கள், உயர் திணையைச் சேர்ந்த ஆண், பெண்ணாகிய இருபால் களுக்கும், அஃறிணையில் ஒன்றன் பாலுக்கும் பொதுப் பெயராகும்.

யான் அழகன்,
யான் அழகி,
யான் கிளி:—என்பவை உதாரணம். நான், நீ என்பவற்றிற்கு அவ்வாறே உதாரணங் கொள்க.

யாம், நாம், நீர், நீவிர், நீயிர், நீங்கள், எல்லீரும் என்னும் பன்மைப் பெயர்கள். உயர்திணைப் பலர்பாலுக்கும், அஃறிணையில் பலவின் பாலுக்கும் பொதுப் பெயராகும்.

யாம் மனிதர்,

யாம் விலங்குகள்:—என்பவை உதாரணம். மற்றப் பெயர்களுக்கும் அவ்வாறே உதாரணங்கொள்க.

தான், தாம் என்பவைகளும் இருதிணைக்கும் பொதுவாகும் பெயர்கள். தான் என்பது ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஒருமைக்கும், தாம் என்பது பலர்பால், பலவின்பால்களுக்கும் பொதுப் பெயர்.

அவன் தான்,
அவள் தான்,
அதுதான்:—இருதிணைக்கும் தான் பொதுவாயிற்று.
அவர்தாம்,
அவை தாம்,—இருதிணைக்கும் தாம் பொதுவாயிற்று.

குறிப்பு:—தாம், யாம் என்னும் பன்மைப் பெயர்கள், தாங்கள், யாங்கள் என்று, கள் என்னும் விகுதியேற்றும் வரும்.

சொல்லிலக்கணத்தில், எண், இடம், திணை, பால் பற்றி யாம் கூறியன, நேயர்கள் அறிந்தவையே ஆகும். எனவே, அவைகளுக்குரிய இலக்கணத்தைச் சுருக்கமாய்க் கூறினோம். இனி, நாம் அறியவேண்டுவது வேற்றுமை புணரிலக்கணங் கற்பதற்கும், செய்யுள்களை உரை செய்து கொள்வதற்கும் வேற்றுமை இலக்கணம் மிக அவசியமாகும். எனவே, வேற்றுமை இலக்கணத்தைச் சிறிது விரிவாகக் கூற நினைத்துள்ளோம்.

வேற்றுமை

வேற்றுமை என்பது வேறுபடுதல், அல்லது மாறுபடுதல் என்னும் பொருளது. சொல்ல வருகின்ற விஷயத்திற்கு ஏற்றபடி, பெயர்ச் சொற்கள், வெவ்வேறு விதமாக மாறிப் பொருளைப் பேதப்படுத்த வேண்டுவது வாக்கிய அமைப்பிற்கு அவசியமாகும்.

மரம் என்பது ஒரு பெயர்ச் சொல், மரம் வளரலாம், மரத்தை ஒருவன் அழிக்கலாம். மரத்தால் பெட்டி முதலியன செய்யலாம். மரத்திற்கு ஒருவன் நீர் வார்க்கலாம், மரத்தினின்று பழம் கீழே விழலாம், மரத்தினுடைய அழகைக் கண்டு களிக்கலாம், மரத்தில் பறவைகள் கூடுகட்டி வசிக்கலாம். மரமே! என்று அதை அழைக்கலாம்.

ஆதலால் மரம் என்பது, தானே வளர்கின்ற காரியத்தையும், பிறரால் அழிக்கப்படுவதாயும், வேருென்று செய்யப் படுவதற்குக் கருவியாகவும், அளிக்கும் ஒன்றை ஏற்கும் பாத்திரமாகவும், அதனிலிருந்து ஒன்று நீங்குவதாகவும், ஒன்றை உடைத்தாய் இருப்பதாயும், அதனிடம் ஒன்று தங்குவதற்கு இடமாயும், மரமே என்று அழைப்பதற்குரியதாயும், எட்டு விதமாய்ப் பொருள் மாறுவதாகின்றது. இப்படிப் பொருள் மாறும் போது, ஒரு சொல்லானது வேற்றுமை அடைகின்றது.

தமிழில் இருப்பவை எட்டு வேற்றுமை. அவை, முறையே, முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்ரும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆரும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்று அழைக்கப்படுகின்றன. தொடரிலக்கணமும், புணரிலக்

கணமும் கற்பதற்கு, வேற்றுமை இலக்கணத்தை, நேயர்கள் நன்ருகத் தெரிந்து கொள்ளல் அவசியம்.

முதல் வேற்றுமை

ஒருவாக்கியத்தின் எழுவாயாகும் சொல் முதல் வேற்றுமைச் சொல்லாகின்றது. "தச்சன் பெட்டி செய்தான்" என்ற வாக்கியத்தில் தச்சன் என்ற சொல் எழுவாய். "ஒரு காரியத்தைச் செய்பவன் இவன். அல்லது ஒரு காரியத்தைச் செய்வது இது," என்று குறிக்கவருஞ் சொல் எழுவாய். எழுவாயின் வேற்றுமை முதல் வேற்றுமை. எழுவாயை வினைமுதல் என்றும் அழைப்பர். வடமொழியில் எழுவாய் பிரதமாவிபக்தி என்றும், ஆங்கிலத்தில் Nominativecase என்றும் அழைக்கப்படும்.

"நாய் குரைத்ததால் சிறுவன் பயந்தான்," என்ற வாக்கியத்தில், குரைக்கின்ற காரியத்தைச் செய்த நாயும் பயப்படுகின்ற காரியத்தைச் செய்த சிறுவனும் முதல் வேற்றுமைச் சொற்கள். ஒரு சொல், அதாவது மரம் என்ற ஒரு சொல் தனியாய் நிற்கும் பொழுது எந்தவித வேற்றுமையும் அடையாத பெயர்ச் சொல். அதுவே, "மரம் வளர்ந்தது" என்ற வாக்கியத்தில், வினை முதலாகும் வேறு பாட்டை அடைகின்றது. எனவே, எழுவாயாகும் எல்லாச் சொற்களும் முதல் வேற்றுமைச் சொற்கள்.

நாய் கடித்தது,

குழந்தை சிரித்தது,

சிறுமி ஆடினாள்: - நாய், குழந்தை, சிறுமி என்னும் சொற்கள் வாக்கியத்தின் எழுவாயாய் நின்று முதல் வேற்றுமை அடைந்துள்ளன.

இரண்டாம் வேற்றுமை

ஒரு காரியத்தைச் செய்யும் பொருளைக் குறிப்பது முதல் வேற்றுமை என்று கூறினோம். செய்யப்படும் பொருளைக் குறிக்குஞ் சொல் இரண்டாம் வேற்றுமைச் சொல்.

"தச்சன் பெட்டியைச் செய்தான்." என்பது ஒரு வாக்கியம். இவ்வாக்கியத்தில் பெட்டியைச் செய்கின்ற காரியத்தைச் செய்தவன் தச்சன். தச்சன் என்ற சொல் வாக்கியத்தின் எழுவாய். எனவே, அச்சொல் முதல் வேற்றுமைச் சொல் ஆகின்றது. தச்சனால் செய்யப் பட்ட பொருள் பெட்டி. எனவே, செய்யப்படு பொரு ளாகிய பெட்டி என்னுஞ் சொல் இரண்டாம் வேற்றுமைச் சொல் ஆகின்றது.

முதல்வேற்றுமைச் சொற்கள், மரம், நாய், மயில், பெண் என்பனபோல் உருவமாறுபாடு அடையாமல் நிற்கும். "தச்சன் பெட்டியைச் செய்தான்," என்ற வாக்கியத்தில், பெட்டி செய்தவனைக் குறிக்கும் சொல்லின் இயற்கை உருவம் தச்சன். ஆனால் அவனால் செய்யப்பட்ட பெட்டி என்னும் சொல்லோ, செய்யப் பட்ட பொருள் என்பதற்கு அடையாளமாகப் பெட்டியை என்று மாறி விட்டது. பெட்டி என்ற சொல்லோடு, ஐ என்ற எழுத்துச் சேர்ந்து, சொல்லின் பொருளையும் உருவத்தையும் வேறுபடுத்தி விட்டது. இவ்வாறு, சொல்லை வேற்றுமைப் படுத்தவரும், எழுத்துக்களும் சொற்களும், உருபு என்று அழைக்கப்படுகின்றன.

செய்யப்படும் பொருளைக் குறிக்கும் இரண்டாம் வேற்றுமைக்கு அடையாளமாக வரும் உருபு ஐ ஆகும்.

ஐ என்னும் உருபை ஏற்று நிற்கும் சொற்கள் இரண்டாம் வேற்றுமைச் சொற்கள்.

"மான் காட்டில் மேய்ந்தது," என்ற வாக்கியத்தில் மேய்வதாகிய காரியத்தைச் செய்த மான் என்னும் பெயர்ச் சொல், முதல் வேற்றுமைச் சொல். அச் சொல்லின் உருவம் வேறுபட வில்லை. எழுவாய் எல்லாம் முதல் வேற்றுமை என்று முன்னரே கூறியுள்ளோம். முதல் வேற்றுமைச் சொற்கள் உருவ் வேறுபாடு அடையா.

"வேடன் மானைப் பிடித்தான்," என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இவ்வாக்கியத்தில் பிடிப்பதாகிய காரியம் செய்யப் படுவதற்கு இலக்காவது மான். எனவே, செயப்படு பொருளாகிய மான் என்னும் சொல், ஐ உருபு ஏற்று மானை என்ற உருவவேறுபாடு அடைந்துளது. மானை என்பது இரண்டாம் வேற்றுமைச்சொல்.

இந்த வாக்கியத்தை, "வேடன் மான் பிடித்தான்," என்றும் அமைக்கலாம். இந்த வாக்கிய அமைப்பில் மான் என்னுஞ் சொல், இரண்டாம் வேற்றுமைக்கு அடையாளமான ஐ என்னும் உருபை ஏற்று நிற்க வில்லை. எனினும், வாக்கியப் பொருளை நோக்கும் பொழுது, மான் என்பது இரண்டாம் வேற்றுமைச் சொல்லே ஆகின்றது. ஐஎன்னும் இரண்டாம்வேற்றுமை உருபு மறைந்திருக்கும்பொழுது, அதை வேற்றுமைத் தொகை என்பர். மறையாமல் இருந்தால் வேற்றுமை விரி என்று அழைக்கப்படும்.

இவள் முகம் சந்திரனை ஒக்கும்—சந்திரனை என் பது இரண்டாம் வேற்றுமை விரி.

இவள் முகம் சந்திரன் ஒக்கும்.—சந்திரன் என்ற சொல்லில் ஐ உருபு மறைந்திருக்கின்றது; எனவே, இரண்டாம் வேற்றுமைத் தொகை.

மான் பிடிக்கச் சொன்ன மயில்.—மான் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

பொன் புள்ளைப் பற்றித் தா.—புள்ளை என்பது இரண்டாம் வேற்றுமை விரி.

இனி, ஒவ்வொரு வேற்றுமைக்கும் உரிய உருபு களையும், அவ்வுருபுகள் சொல்லோடு சேர்வதால் ஏற்படும் அர்த்த வேறுபாடுகளையும் அறிவோம்.

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்று கூறினோம். இந்த இரண்டாம் வேற்றுமை ஆறுவிதமான பொருளைத் தரவல்லது. ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை, என்பவை இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள்கள்.

இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருளைக் காட்டுகின்றபடியால், என்னவென்ன செய்யப்பட்டது என்பதை அப்பொருள் தெரிவிக்கவேண்டுவதாகின்றது. சாதாரணமாய், ஒன்று ஒன்றினிடம் செய்யக்கூடிய காரியங்கள் எவையெவை என்று பார்ப்போம்.

ஒன்றை உண்டாக்கலாம். அல்லது இல்லாமற் செய்யலாம். ஒன்றைப் பெறலாம். அல்லது விட்டு விடலாம். ஒன்றை ஒத்திருக்கலாம். அல்லது ஒன்றை உடையதாய் இருக்கலாம். ஆகவே, வேற்றுமை உருபாகிய ஐ வந்தாலும் வராமற்போனாலும், ஒரு சொல், மேலே கூறிய பொருள்களில் எதைக் கொண்டிருந்தாலும், அது இரண்டாம் வேற்றுமை அடைந்ததாகும்.

இரண்டாம் வேற்றுமை விரி :

1.	தச்சன் பெட்டியைச் செய்தான் இராமன் வீட்டைக் கட்டினான் உழவன் பயிரை நட்டான்	ஆக்கல் பொருள்
2.	அவன் பெட்டியை உடைத்தான் இவன் வீட்டை இடித்தான் உழவன் பயிரை அழித்தான்	அழித்தல் பொருள்
3.	அவன் வீட்டைச் சேர்ந்தான் இவள் பிள்ளையைப் பெற்றாள் இவன் பிணியை உற்றான்	அடைதல் பொருள்
4.	அவன் செல்வத்தை இழந்தான் இவன் அரசைத் துறந்தான் அவன் மனைவியைப் பிரிந்தான்	நீத்தல் பொருள்
5.	அவள் முகம் மதியை ஒக்கும் இவள் கிளியைப்போல் பேசினாள் முத்தைப் போன்ற பல்வரிசை	ஒத்தல்பொருள்
6.	அவள் அழகை உடையவள் இவன் புகழை உடையவன் கற்றோர் கண்ணை உடையவர்	உடைமைப் பொருள்

இரண்டாம் வேற்றுமைத் தொகை :—

1.	தச்சன் பெட்டி செய்தான் அவன் வீடு கட்டினான் உழவன் பயிர் நட்டான்	ஆக்கல்
2.	அவன் பெட்டி உடைத்தான் இவன் வீடு இடித்தான் அவன் பயிர் அழித்தான்	அழித்தல்

3. அவன் வீடு சேர்ந்தான்
அவள் பிள்ளை பெற்ருள்
இவன் பிணி உற்ருன்
} அடைதல்

4. அவன் செல்வம் இழந்தான்
அவன் நாடு துறந்தான்
இவன் மனைவி பிரிந்தான்
} நீத்தல்

5. இவள் முகம் மதி ஒக்கும்
அவள் கிளிபோல் பேசினுள்
முத்துப் போன்ற பல்வரிசை
} ஒத்தல்

6. அவள் அழகு உடையவள்
இவன் புகழ் உடையவன்
கற்ருேர் கண் உடையவர்
} உடைமை

மேலே காட்டிய ஆறுவிதப் பொருள்களை உடையவை இரண்டாம் வேற்றுமை. ஐ உருபை ஏற்ற இரண்டாம் வேற்றுமைச் சொல்லை, இரண்டாம் வேற்றுமை விரி என்றும், உருபை ஏற்காமல் நிற்கும்பொழுது அதை இரண்டாம் வேற்றுமைத் தொகை என்றும் அழைப்பது வழக்கம்.

மூன்ரும் வேற்றுமை

ஒரு சொல் வேறுபாடு அடையாமல் வினைமுதலாய் நிற்கும்பொழுது முதல் வேற்றுமை என்றும், வேற்றுமை உருபை ஏற்ருே ஏற்காமலோ செயப்படு பொருளாய் நின்ருல் இரண்டாம் வேற்றுமை என்றும் கண்டோம். இனி மூன்ரும் வேற்றுமையைப் பார்ப்போம்.

ஒரு காரியம், அல்லது ஒரு பொருள் யாரால் அல்லது எதனுல் செய்யப்பட்டது என்பதைக் காட்ட

வருவது மூன்ரும் வேற்றுமை. இரண்டாம் வேற்றுமைக்கு ஐ உருபாவதுபோல், மூன்ரும் வேற்றுமைக்கு, ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் என்பவை உருபுகளாகும்.

இவ்வுருபுகளில், ஆல், ஆன் என்பவை கருவிப் பொருளேயும், கர்த்தாப் பொருளேயும் குறிக்க வரும். ஒடு, ஓடு, உடன் என்பவை உடன் நிகழ்ச்சிப் பொருளேக் குறிக்க வரும். ஒன்ருேடு மற்ருென்று சேர்ந்து நிகழ்வது உடன் நிகழ்ச்சி.

ஆல், ஆன் என்னும் உருபுகளே முதலில் எடுத்துக் கொள்வோம். ''மரத்தால் செய்த பெட்டி,'' என்பது ஒரு வாக்கியம். இந்த வாக்கியத்தின்படி, பெட்டிக்கு மரம் மூலப்பொருள் ஆகின்றது. மரம் இல்லேயேல் பெட்டியும் இல்லே. எனவே, பெட்டிக்கு முதற்கருவி மரம்.

மரம், தானே பெட்டியாய் மாறிவிட முடியாது மரத்தை அறுத்தும், துண்டு செய்தும், இழைத்தும் பெட்டியாக்குவதற்கு உளி முதலிய சாதனப் பொருள்கள் அவசியம். எனவே. உளி முதலியவை துணேக்கருவிகள் ஆகின்றன. ஆகவே, ஒன்றைச் செய்வதற்கு முதற் கருவியும், துணேக் கருவியும் இன்றியமையாதவை.

பொன்ஞல் செய்த குடம்.

மண்ணுல் செய்த குடம்—இவ்வுதாரணங்களில் பொன்னும், மண்ணும் முதற்கருவி ஆகின்றன.

வாளால் அறுத்த மரம்.

கண்ணுல் கண்ட காட்சி—இவ்வுதாரணங்களில் வாளும், கண்ணும் துணேக்கருவி ஆகின்றன.

ஒன்றைச் செய்வதற்குத் துணைக்கருவியும், முதற் கருவியும் போதா. மரமாகிய முதற்கருவியையும், உளியாகிய துணைக்கருவியையும் கொண்டு பெட்டி செய்வதற்குத் தச்சன் ஒருத்தன் அவசியமாகின்ருன். அத்தச்சன்தான் கர்த்தா.

"தச்சனுல் செய்யப்பெற்ற பெட்டி," என்ற வாக்கியத்தில், ஆல் என்னும் மூன்ரும் வேற்றுமை உருபு கர்த்தாப் பொருளது. கர்த்தாவும், ஏவுதற்கர்த்தா, என்றும் இயற்றுதற்கர்த்தா என்றும் இருவகையினர் ஆவர்.

அரசனுல் கட்டடப்பட்ட கோயில்,

சிற்பியால் கட்டடப்பட்ட கோயில்.—என்ற உதாரணங்களில், அரசன் ஏவுதற்கர்த்தா; சிற்பி இயற்றுதற்கர்த்தா. அரசனது ஏவலின்படி சிற்பி கோயிலைக் கட்டுகின்ருன்.

ஒன்று செய்வதற்கு துணை, முதல் கருவிகளும், இயற்றுதல், ஏவுதல், கர்த்தாக்களும் அவசியமாதல் காண்க. மூன்ரும் வேற்றுமை உருபுகளில் ஆல், ஆன் என்னும் உருபுகள் கருவி, கர்த்தாப் பொருளன.

ஒடு, ஓடு, உடன் என்னும் உருபுகள் உடன் நிகழ்ச்சிப் பொருளன.

அரசனெடு மந்திரி வந்தான்.

முனியோடு மைந்தன் போனுன்.

அண்ணனுடன் தம்பி சென்ருன்.—இவை உடன் நிகழ்ச்சிக்கு உதாரணங்கள். அரசனேடு கூடவே மந்திரி வந்ததையும், முனிவனேடு

கூடவே மைந்தன் போனதையும், அண்ண ஞேடு கூட இணைபிரியாமல் தம்பி சென்ற தையும் உருபுகள் தெரிவிக்கின்றன.

எனவே, மூன்ரும் வேற்றுமையின் பொருள் கருவி, கர்த்தா, உடன் நிகழ்ச்சி ஆகும்.

உதாரணம்:—

பொன்னுல் செய்த ஆபரணம்.

மண்ணுல் செய்த பானை.—கருவிப் பொருள். மண்ணும் பொன்னும் முதற்கருவி.

உளியால் செய்த பெட்டி.

கண்ணுல் கண்ட அழகு.—கருவிப் பொருள். உளியும், கண்ணும் துணைக்கருவி.

அரசனுல் கட்டப் பெற்ற மாளிகை.—கர்த்தாப் பொருள். அரசன் ஏவுதற்கர்த்தா.

தச்சனுல் செய்யப்பட்ட பெட்டி.—கர்த்தாப் பொருள் தச்சன் இயற்றுதற் கர்த்தா.

சீதையொடு வந்த ஐயன்.

கோபத்தோடு பேசிய முனிவன்.

முனியுடன் வந்த கொண்டல்.—இவை உடன் நிகழ்ச்சிக்கு உதாரணங்கள்.

இரண்டாம்வேற்றுமையைப்போல்மூன்ரும் வேற்று மையும், உருபு ஏற்றும் ஏற்காமலும் வரலாம். தலை வணங்கினுன்.'' என்னும் வாக்கியத்தை எடுத்துக்கொள் வோம். இந்த வாக்கியத்தை விரித்தால், ''தலையால் வணங்கினுன்.'' என்ருகும். ''தலை வணங்கினுன்'' என்று

உருபு மறைந்து வந்தால் மூன்றும் வேற்றுமைத் தொகை. "தலையால் வணங்கினான்," என்று உருபைப் பெற்று வந்தால் மூன்றும் வேற்றுமை விரி.

குறிப்பு:—இதுவரை மூன்றும் வேற்றுமை உருபு. ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் என்பதையும், அது, கருவி, கர்த்தா, உடன் நிகழ்ச்சிப் பொருளது என்பதையும் பார்த்தோம். கருவி, முதல் கருவி, துணைக் கருவி என்று பிரியும் என்பதையும், கர்த்தா, இயற்றுதற் கர்த்தா, ஏவுதற் கர்த்தா என்று வேறுபடும் என்பதையும் அறிந்தோம். எனினும், இவ்வேற்றுமைக்குரிய சிறந்த பொருள் கருவிப் பொருளே ஆகும். ஏனென்றால், மூன்றனுருபு களாகிய ஆல், ஆன், என்பவற்றின் உதவியில்லாமலே கர்த்தாவைக் குறித்து விடலாம்.

"தச்சன் செய்த பெட்டி.

அரசன் கட்டிய மாளிகை,

சிற்பி கட்டிய கோவில்,"—என்று வாக்கியங்களை அமைத்தால், அப்பொழுது, கர்த்தாவைக் குறிக்கும் தச்சன், அரசன், சிற்பி ஆகிய சொற்கள் மூன்றும் வேற்றுமை அடையாமல் முதல் வேற்றுமையில் இருக்கக் காண்கின்றோம்.

"தச்சனால் செய்யப்பட்ட பெட்டி,

அரசனால் கட்டப்பட்ட மாளிகை,

சிற்பியால் கட்டப்பட்ட கோவில்," என்று தமிழ் மரபில் வாக்கியங்கள் அமைவதில்லை. இவ்வாறு வாக்கியங்கள் அமைவதை ஆங்கில பாஷை மரபிலே தான் காண்கின்றோம். இதை ஆங்கிலத்தில் Passive

Voice என்பர். தமிழில் Passive Voice—இல் ஆன்ஞேர் வாக்கியங்களே அமைக்கக் காண்கிலம். எனவேதான், மூன்ரும் வேற்றுமைச்குச் சிறந்தபொருள் கருவிப் பொருள் என்று கூறிஞேம்.

ஒடு, ஓடு, உடன் என்னும் உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளன என்று கூறிஞேம். இவ்வுடன் நிகழ்ச்சியும், ஒரு சொல் மூன்ரும் வேற்றுமை அடையாமலே நிகழலாம்.

"இராமனெடு சீதை வனம் சென்ருள்." என்ற வாக்கியத்தில், இராமன் என்னும் சொல் ஓடு என்ற உருபை ஏற்று உடன் நிகழ்ச்சியைக் குறிக்கின்றது. இராமன் என்ற சொல், மூன்ரும் வேற்றுமை அடையாமலே, உடன் நிகழ்ச்சி நிகழுமாறு வாக்கியத்தை அமைத்து விடலாம். அதாவது,

"இராமனும் சீதையும் வனம் சென்றனர்," என்று வாக்கியத்தை மாற்றியமைத்தும், உடன் நிகழ்ச்சியைக் குறித்துவிடலாம். எனவே, மூன்ரும் வேற்றுமைக்குச் சிறப்பான பொருள் கருவிப்பொருள். கர்த்தாவைக் குறிக்கவேண்டிய இடங்களில், சொல் மூன்ரும் வேற்றுமை அடையாதபடி வாக்கியங்களே அமைத்தலே சிறப்புடைய முறை. தமிழ் இலக்கியமரபும் அதுவே.

"அரசனல் கட்டப்பட்ட கோவில்," என்ற வாக்கியத்தைக் காட்டிலும், "அரசன் கட்டிய கோவில்," என்று அமையும் வாக்கியமே காதிற்கும் இனிமையைத் தரும். கூடியவரையில், தமிழில் வாக்கியங்கள் Passive Voice—இல் அமையாமையே சிறப்புடையதாகும்.

உடன் நிகழ்ச்சியானது சொல் மூன்றும் வேற்றுமை அடையாமலே நிகழலாம் என்று கூறினோம். அதனால். மூன்றும் வேற்றுமை அடையாதபடி வாக்கியங்களை அமைக்கவேண்டும் என்று நேயர்கள் கொள்ளக்கூடாது, உடன் நிகழ்ச்சியைக் குறிக்கச் சொற்கள் மூன்றும் வேற்றுமை அடையலாம். ஆன்றோர் வழக்கும் உளது.

ஆனால், கர்த்தாவை முதல் வேற்றுமையில் அமைத்தலும், Passive Voice—இல் வாக்கியங்கள் கூடியவரை அமையாமல் காத்தலும் தமிழ் மரபோடு ஒத்ததாகும்.

மூன்றும் வேற்றுமை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியன இவ்வளவே.

நான்காம் வேற்றுமை

இதுவரை, முதல் மூன்று வேற்றுமைகளைப் பற்றி அறிந்தோம். முதல் வேற்றுமை ஒரு காரியம் செய்பவனைக் காட்டும். இரண்டாம் வேற்றுமை, செய்யப்படு பொருளைக் காட்டும். எதைக் கருவியாகக் கொண்டு ஒன்று செய்யப்பட்டது என்பதைக் காட்டுவது மூன்றும் வேற்றுமையின் காரியம். இனி நான்காம் வேற்றுமையைப் பார்ப்போம்.

நான்காம் வேற்றுமை உருபு கு. ஒரு சொல் கு என்னும் உருபை ஏற்று ஏழு விதமான பொருள் வேறுபாட்டை அடைகின்றது. அப்பொருள்களாவன:— கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை. (அதுவாதல்-ஒன்றே மற்றொன்று ஆதல்: முறை-உறவு; நேர்ச்சி-நட்பு.)

1. ஏழைக்கு அன்னம் இட்டான்.
   ஆசிரியன் அறிவு தந்தான்.—கொடை.

2. நோய்க்கு இது மருந்து,
பாம்புக்குக் கீரி வளர்த்தான்.—பகை.

3. கண்ணுக்கு மை.
பூவிற்கு மணம்.—நேர்ச்சி.

4. மந்திரிக்கு அழகு வருபொருள் உரைத்தல்,
பெண்டிர்க்கு அழகு புருஷன் பேணல் - தகுதி.

5. குடத்திற்கு மண்,
தாலிக்குப் பொன். - அது வாதல். (மண்ணே குடமாகவும், பொன்னே தாலியாகவும் ஆதலால் அதுவாதல் ஆகின்றது.)

6. கூலிக்கு வேலே,
சுவைக்குச் சர்க்கரை. - பொருட்டு.

7. இராமனுக்குத் தம்பி பரதன்.
தசரதனுக்கு மகன் இராமன். - முறை.

குறிப்பு:—முறையை நான்காம் வேற்றுமைக்குரிய பொருளாக்கிய தமிழரின் பெருமை பெரியது. எனக்கு மகன்; அவனுக்கு மனேவி; அவளுக்குப் புருஷன்,'' என்றே தமிழ் இலக்கணம் முறை அல்லது உறவை வகுத்துளது. சாதாரணமாய்; ''என்னுடைய மகன்; அவனுடைய மனேவி,'' என்றே பேசவும் எழுதவும் செய்கின்ருேம். உறவு என்னும் சம்பந்தத்தை, வீடு, சொத்து கைகால் முதலியவைகளேப்போல் உடைமைப் பொருளாக்குதல் குற்றமுடையதே ஆகும். உடைமைப் பொருளே நாம் இஷ்டப்படி விற்கலாம், வாங்கலாம், அகற்றலாம், ஏவல்கொள்ளலாம் நமது அன்பிற்குரியரான உறவினர் உடைமை அல்லர். உறவினில் பயில்வது அன்பு. அளிப்பதே அன்பினது காரியம். அன்பின் இயக்கத்திற்குத்

துணையமையும் மனைவி மக்களாகிய சுற்றத்தை, உடைமையில் படுத்தல் பிழையே பிழை. ஆதலால், தமிழர், மேனாட்டாரைப்போல் உடைமைப் பொருளதாய ஆறும் வேற்றுமையில் உறவினை அடக்க நினைத்திலர். உறவை உடைமையில் அடக்கிய பழி மேனாட்டு நாகரிகத்தைச் சேர்ந்ததாகும். உடைமைக் கருத்தில் பகையே தலையெடுக்கும். சென்ற நூற்றாண்டின் இறுதியில், இங்கிலாந்தில் எழுந்த மாதர் இயக்கம், முறையை உடைமையாக்கிய ஆறும் வேற்றுமை வளர்த்த பயிர்.

மற்ற வேற்றுமைகளைப்போல் நான்காம் வேற்றுமையும் உருபு பெற்றும் பெறாமலும் வரலாம்.

"பாண்டவர் மனைவி பாஞ்சாலி,"

என்ற வாக்கியத்தில், பாண்டவர் என்ற சொல், முறை அல்லது உறவுப் பொருளில் வந்த நான்காம் வேற்றுமைச் சொல். கு என்னும் உருபைப் பெறாமல் அது நிற்கின்றது. அதை விரித்தால், 'பாண்டவர்க்கு மனைவி பாஞ்சாலி,' என்றாகும், உருபு மறைந்திருந்தால் தொகையாகும் என்று முன்னரே கூறியுள்ளோம்.

பாண்டவர் மனைவி—நான்காம் வேற்றுமைத் தொகை;

பாண்டவர்க்கு மனைவி—நான்காம் வேற்றுமைவிரி.

இனி, மேலே செல்லுமுன், சாரியை என்பது பற்றிச் சிறிது அறிதல் நலம். சில சொற்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது, சொல்லிற்கும் வேற்றுமை உருபுக்கும் இடையிலே, ஒரு எழுத்தோ, அல்லது சில எழுத்துக்களோ வருவதுண்டு. அவைகளைச் சாரியை என்பர். இன், அத்து, உ முதலிய இடைச் சொற்களைச் சாரியை என்பர். மனம் என்ற சொல் இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்கும்போது, அத்துச் சாரியை

பெற்று மனத்தை என்றாகும். மூன்றாம் வேற்றுமை உருபை ஏற்கும்போது, மனத்தால் என்றாகும். மகர மெய்யை ஈற்றிலுடைய சொற்கள் வேற்றுமை உருபை ஏற்கும்பொழுது அத்துச் சாரியை பெற்றே நடக்கும்.

நான்காம் வேற்றுமை உருபாகிய கு என்பதும் சாரியை பெற்றும் பெறாமலும் சொல்லோடு சேரலாம். இரண்டு மூன்று சாரியைகளைச் சொற்கள் ஒரே சமயத்தில் பெற்றும் நடப்பதுண்டு.

உதாரணம் :—

"நாய்க்கு :—நாய்-கு-நாய்க்கு.
தலைக்கு :—தலை-கு-தலைக்கு.
கிளிக்கு :—கிளி-கு-கிளிக்கு."

இவ்வுதாரணங்களில் கு உருபு சாரியை பெறாமல் சொற்களோடு சேர்ந்துளது.

"பாலுக்கு :—பால்-உ-கு-பாலுக்கு,
கண்ணுக்கு :—கண்-உ-கு-கண்ணுக்கு,
மண்ணுக்கு :—மண்-உ-கு-மண்ணுக்கு,"

இவ்வுதாரணங்களில் கு உருபு உகரச் சாரியை பெற்றுச் சொற்களோடு சேர்ந்துளது.

"பெண்ணிற்கு :—பெண்-இன்-கு-பெண்ணிற்கு
காலிற்கு :—கால்-இன்-கு-காலிற்கு,
பொன்னிற்கு :—பொன்-இன்-கு-பொன்னிற்கு,"

இவ்வுதாரணங்களில் இன் சாரியையாய் வந்துளது. (இன்—கு—இற்கு என்று விகாரப்பட்டுளது. இப் புணர்ச்சி விகார விதியைப் புணரிலக்கணத்தில் காண்க.)

''மரத்துக்கு :—மரம்-அத்து-கு-மரத்துக்கு,
முகத்துக்கு :—முகம்-அத்து-கு-முகத்துக்கு,
வரத்துக்கு :—வரம்-அத்து-கு-வரத்துக்கு,''

இவ்வுதாரணங்களில் அத்து சாரியையாய் வந்துளது. (மரம்) முகம், வரம், என்பவைகளிலுள்ள ஈற்று மகரம் புணர்ச்சி விகாரத்தால் கெட்டுளது.)

''பெண்ணினுக்கு :—பெண்-இன்-உ-கு-பெண்ணினுக்கு
மண்ணினுக்கு :—மண்-இன்-உ-கு-மண்ணினுக்கு
பொன்னினுக்கு :—பொன்-இன்-உ-கு-பொன்னினுக்கு''

இவ்வுதாரணங்களில், இன், உ, சாரியைகளாய் வந்திருக்கின்றன.

''மரத்திற்கு :—மரம்-அத்து-இன்-கு-மரத்திற்கு,
முகத்திற்கு:—முகம்-அத்து-இன்-கு-முகத்திற்கு,
அறத்திற்கு:—அறம்-அத்து-இன்-கு-அறத்திற்கு,''

இவ்வுதாரணங்களில் அத்து, இன், சாரியைகளாய் வந்திருக்கின்றன.

''மரத்தினுக்கு :-மரம்-அத்து-இன்-உ-கு-மரத்தினுக்கு,
முகத்தினுக்கு :-முகம்-அத்து-இன்-உ-கு-முகத்தினுக்கு,
அறத்தினுக்கு:-அறம்-அத்து-இன்-உ-கு-அறத்தினுக்கு,''

இவ்வுதாரணங்களில் அத்து, இன், உ சாரியைகளாய் வந்திருக்கின்றன.

இன்னபடி, நான்காம் வேற்றுமை உருபு, சாரியை பெற்றும், பெருமலும், இரண்டு மூன்று சாரியைகள் பெற்றும் சொல்லோடு சேர்ந்து மேலே கூறிய, கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல் பொருட்டு, முறை என்ற ஏழு விதப்பொருள்களையும் தரும்,

கு என்னும் எழுத்தை ஈற்றிலுடைய சொற்களை யெல்லாம் நேயர்கள் நான்காம் வேற்றுமைச் சொற் களாகக் கொள்ளக்கூடாது. படகு, நாக்கு, பாக்கு, கொக்கு, என்பன போன்ற சொற்கள், கு என்னும் எழுத்தை ஈற்றில் பெற்றிருந்தாலும், அவை நான்காம் வேற்றுமைச் சொற்கள் அல்ல. அவைகளிலுள்ள கு, வேற்றுமை உருபு அன்று. கு வை ஈற்றிலுடைய பெயர்ச் சொற்கள் அவை. அவை நான்காம் வேற்றுமை அடைய வேண்டுமானால், படகிற்கு, நாக்கிற்கு, பாக்கிற்கு, கொக்கிற்கு என்று ஆகவேண்டும். படகுக்கு, நாக்குக்கு, பாக்குக்கு, கொக்குக்கு என்று சாரியை பெறாமலும் அவை நான்காம் வேற்றுமை அடைந்து நிற்கலாம்.

நான்காம் வேற்றுமையில் சொல்லானது, உருபு ஏற்று வேற்றுமை விரியாக நிற்பதே வழக்கு. உருபு ஏற்காமல் தொகையாகப் பெரும்பாலும் நிற்பதில்லை.

ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும் என்ன சம்பந்தம் என்பதைத் தெரிவிக்கும் தன்மையது. பின்வரும் விதம் ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும் சம்பந்தம் ஏற்படலாம் :—

1. ஒன்றைவிட்டு ஒன்று நீங்குவதால் சம்பந்தம் ஏற்படலாம்.

2. ஒன்று மற்றொன்றைப்போல் இருப்பதால் சம்பந்தம் ஏற்படலாம்.

3. ஒன்றிற்கு மற்றொன்று எல்லையாய் அமைவதால் சம்பந்தம் ஏற்படலாம்,

4. ஒன்றிற்கு மற்றொன்று காரணமாய் இருப்பதால் சந்பந்தம் ஏற்படலாம்.

ஆகவே, ஐந்தாம் வேற்றுமை, நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது (காரணம்) என்னும் பொருள்களை உடையதாகின்றது. அதன் உருபு, இல், இன், என்பவை. நின்று, இருந்து என்பவைகளை அவ்வேற்றுமையின் சொல்லுருபு என்பர்.

1. "மலையின் இழிந்த அருவி,
கையின் அகன்ற பொருள்,
புண்ணின் வழிந்த குருதி,"

இவை நீங்கல் பொருளுக்கு உதாரணம். இங்கே சொற்கள் இன் உருபேற்று வேற்றுமை விரியாக இருக்கின்றன. 'மலை இழிந்த அருவி; கை அகன்ற பொருள்; புண் வழிந்த குருதி" என்று வாக்கியங்கள் அமையுமாயின் ஐந்தாம் வேற்றுமைத் தொகை ஆகும்.

2. "மதியின் குளிர்ந்த முகம்,
புலியின் பாய்ந்த வீரன்,
குழவியின் மொழிந்த நங்கை,"

ஒப்புப் பொருளுக்கு இவை உதாரணம். "சந்திரனைப் போன்ற குளிர்ந்த முகம்; புலிபோல் பாய்ந்த வீரன்; குழந்தை போல் பேசிய நங்கை," என்பது பொருள். ஒப்புப் பொருளில் சொல், வேற்றுமை உருபு ஏற்று வரலே சிறப்பு.

3. "தஞ்சையின் கிழக்கு நாகை;
பாவத்தின் முடிவு பாழ்நகரம்;
புண்ணியத்தின் முடிவு துரக்கம்,"

எல்லைப் பொருளுக்கு இவை உதாரணம். துரக்கம் என்றால் சுவர்க்கம். இப்பொருளில் சொல், உருபு ஏற்று விரியாக வரலே சிறப்பு.

4. "சினத்தின் இழிந்த முனிவன்;
ஈகையின் உயர்ந்த கர்ணன்;
கல்வியில் பெரியன் கம்பன்,"

இவ்வுதாரணங்கள் ஈகைப் பொருளன. ஏது என்றால் காரணம். "சினங்காரணமாக இழிந்தவன் முனிவன், ஈகை காரணமாக உயர்ந்தவன் கர்ணன், கல்வி காரண மாகப் பெருமையுற்றவன் கம்பன்," என்பது உதாரணங் களின் பொருள்.

குறிப்பு:—சாதாரணமாக நீங்கல் பொருளைத் தெரி விக்க நின்று, இருந்து என்னும் சொல்லுருபுகளை உபயோகித்தலே வழக்கமாய் இருக்கின்றது. "மலையி லிருந்து இழிந்த அருவி, கையிலிருந்து அகன்ற பொருள், புண்ணிலிருந்து வழிந்த குருதி," என்று கூறும் வழக்கத்தை அறிவோம். மலை-நின்று இழிந்த அருவி, கை-நின்று அகன்ற பொருள், புண்-நின்று வழிந்த குருதி என்றும் சொல்லலாம்.

ஐந்தாம் வேற்றுமைக்குரியதான எல்லைப் பொருளைக் காட்ட நான்காம் வேற்றுமை உருபான கு வருவதும் உண்டு.

"தஞ்சைக்குக் கிழக்கே நாகை;
பாவத்திற்கு முடிவு பாழ்நரகம்;
புண்ணியத்திற்கு முடிவு துரக்கம்."

என்றும் கூறும் வழக்கம் உளது. ஆனால், எல்லையை ஐந்தாம் வேற்றுமையால் குறிப்பதே சிறப்பு.

ஐந்தாம் வேற்றுமைக்குரியதான ஏது அல்லது காரணப் பொருளை மூன்ரும் வேற்றுமையாலும் குறித்து விடலாம்.

"கல்வியால் உயர்ந்த கம்பன்,
ஈகையால் உயர்ந்த கர்ணன்,
கோபத்தால் இழிந்த கோசிகன்,"

என்று, ஏதுப் பொருளை மூன்ரும் வேற்றுமை உருபினுல் தெரிவிப்பதே வழக்கமாய் இருக்கின்றது. எனினும், ஏது, எல்லைப் பொருள்களை, ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள்களாகவே இலக்கணம் கருதுகின்றது.

ஒன்றைப்போல் மற்ருென்று இருந்தால் ஒப்பு என்று கூறினேம். ஒன்றைவிட மற்ருென்று உயர்ந்தது, அல்லது தாழ்ந்தது என்பதை எந்தப் பொருள் குறிக்கும் என்று பார்ப்போம். அது ஒப்புப் பொருளில் அடங்குவதற்கில்லை என்றே நினைக்கிருேம்

"அரசனில் உயர்ந்தவர் அறவோர்"

என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். அரசனைக் காட்டிலும் அறவோர் உயர்ந்தவர், என்னும் பொருளது இவ்வாக்கியம். எனவே, இது ஒப்புப்பொருள் ஆதற்கில்லை. இந்த வாக்கியத்தின்படி அரசன் பெருமை குறைந்தவன் ஆகின்ருன். அதாவது, அறவோரோடு அரசனைச் சேர்த்துக் கருதுங்கால், அரசன் பெருமை நீங்கினவனுகின்ருன். எனவே, நீங்கல் பொருளே பொருத்தமுடைய பொருளாகும்.

ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது, அல்லது தாழ்ந்தது என்று தெரிவிக்கும் கருத்தினது நீங்கல் பொருள் என்பதை நேயர்கள் மறத்தலாகாது.

கம்பனின் பெரியவர் நம்மாழ்வார்
புலவரில் சிறந்தவர் பொய்யாமொழியார்,
பரதனின் மூத்தவன் இராமன்,
புன்மையின் இழிந்தது புறஞ்சொலல்,''

என்பவை நீங்கல் பொருளுக்கு உதாரணங்கள்.

சாதாரணமாக, ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது என்பதைக் குறிக்க,

''மன்னனினும் பெரியர் மாதவர்,''

என்று, உம்மையைச் சேர்த்து வாக்கியத்தை அமைப்பதே வழக்கம். மன்னனினும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்பு உம்மை. ''பொய்யினும் இழிந்தது தேர்தல் (Election) அறிக்கை,'' என்ற வாக்கியத்திலுள்ள உம்மை இழிவு சிறப்பின் பாற்படும். இடைச் சொல் இலக்கணம் கற்கையில் உம்மையைப் பற்றி விளக்குவோம்.

ஆறும் வேற்றுமை

உடைமைப் பொருளில் ஒரு சொல் வேறுபட்டு நிற்பது ஆறும் வேற்றுமை. இவ்வேற்றுமையின் உருபுகள், அது, ஆது, அ என்பன. உடைமை ஒன்றே இவ்வேற்றுமைக்குரிய பொருள். ஒரு சொல் குறிக்கும் பொருள் உடைமையாய் இருந்தால், அது வேற்றுமை உருபை பெற்றிருந்தாலும் பெருதிருந்தாலும், ஆறும் வேற்றுமைச் சொல்லாகும். இப்பொருளைக் கிழமைப் பொருள் என்றும் அழைப்பர்.

இந்த வேற்றுமையும் இன் முதலிய சாரியைகளைப் பெற்றும் பெருமலும் உருபு ஏற்கலாம். உருபு பெருமல்

தொகையாகவும் வரலாம். நாம் பேசும் பொழுதும் எழுதும் பொழுதும் சாதாரணமாய் ஆறும் வேற்றுமை உருபைச் சொல்லோடு சேர்க்கும் வழக்கம் இல்லை.

"என் வீடு; என் கை,"

என்று வேற்றுமை உருபைச் சேர்க்காமலும்,

"கிளியின் கூடு; மரத்தின் கிளை,"

என்று இன் சாரியையைச் சேர்த்தும். ஆறும் வேற்றுமைப் பொருள் வரும்படி பேசுவதே வழக்கமாய் இருக்கின்றது. மேலே காட்டிய உதாரணங்களை விரித்தால்,

"எனது வீடு; எனது கை,
கிளியினது கூடு; மரத்தினது கிளை,"

என்றாகும். உடைய என்ற சொல்லையும் சொல்லோடு சேர்ப்பதுண்டு. உடைய என்பது இவ்வேற்றுமையின் சொல்லுருபு. "என்னுடைய வீடு, அவனுடைய பொருள்." என்பன உதாரணம்.

உடைமை, அல்லது கிழமைப் பொருளது ஆறும் வேற்றுமை என்று சொன்னோம். இக்கிழமைப் பொருள் தற்கிழமை என்றும் பிறிதின் கிழமை என்றும் இரு விதப்படும்.

ஒரு பொருளும் அதற்கு உரிமையாயிருப்பதும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க முடியாதபடி சம்பந்தங் கொண்டிருப்பது தற்கிழமை. "இராமனது அழகு," என்பது உதாரணம். இராமனை விட்டு அவனது அழகைப் பிரிக்க முடியாதாகையால் தற்கிழமைப் பொருளதாகின்றது.

"பாலினது வெண்மை,
கண்ணினது பார்வை
எனது முகம் முதலியன..."

தற்கிழமைப் பொருளுக்கு உதாரணம்.

ஒன்றிேைடு உடைமை என்னும் வகையில் சம்பந்தங்கொண்டு, ஆனல் அதிலிருந்து வேருய்ப் பிரிக்கக் கூடியதாய் இருப்பது பிறிதின்கிழமை.

"அரசனது தேர்
எனது ஊர்
கிளியினது கூடு முதலியன..."

பிறிதின்கிழமைப் பொருளுக்கு உதாரணம். தேர், ஊர், கூடு முதலியன பிரியக்கூடியவை என்பது வெளிப்படை.

தற்கிழமை:-பண்புத் தற்கிழமை, உறுப்புத் தற்கிழமை, ஒன்றன் கூட்டத் தற்கிழமை, பலவினீட்டத் தற்கிழமை, திரிபினுக்கத் தற்கிழமை என்று ஐவகைப்படும்.

பிறிதின்கிழமை:-பொருட் பிறிதின்கிழமை, இடப் பிறிதின் கிழமை, காலப் பிறிதின் கிழமை என்று மூவகைப்படும்.

உதாரணம்:—

இராமனது கருமை,
கண்ணனது வருகை. - பண்புத் தற்கிழமை.
(குணமும், தொழிலும் பண்பில் அடக்கப் பட்டன.)
எனது முகம்,
நாயினது வால். - உறுப்புத் தற்கிழமை
மக்களது கூட்டம்,
புலவரது சபை - ஒன்றன் கூட்டத் தற்கிழமை.

பறவைகளது ஈட்டம்.

கால்நடைகளது கூட்டம்-பலவினீட்டத் தற்கிழமை. பலவகைப்பட்ட பறவைகளின் கூட்டத்தையும், ஆடு மாடு முதலிய கால் நடைகளின் கூட்டத் தையும் தெரிவிப்பதால் பலவின் ஈட்டத் தற்கிழமை ஆகும்.

நெல்லினது பொரி,

அரிசியினது மாவு - திரிபினாக்கத் தற்கிழமை. நெல்லே பொரியும், அரிசியே மாவும் ஆவது காண்க.

எனது மாடு - பொருட் பிறிதின்கிழமை
எனது வீடு - இடப் பிறிதின்கிழமை
எனது நாள் - காலப் பிறிதின்கிழமை

ஆறும் வேற்றுமை பற்றி அறிய வேண்டியன இவ்வளவே.

ஏழாம் வேற்றுமை

இடப் பொருளுக்குரியது ஏழாம் வேற்றுமை. இவ்வேற்றுமைக்கு இருபத்தெட்டு உருபுகள் இருக் கின்றன. அவையாவன:—

"கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின்முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல்." இவ்வுருபுகள் எல்லாம் சொல்லோடு சேர்ந்து இடப்பொருளைக் குறிக்கும்.

பக்கல், பாங்கர், முகம், மாடு, பால், இன் என்பவை களும் ஏழாம் வேற்றுமை உருபுகளாக வரும். இந்த வேற்றுமையும், மற்ற வேற்றுமைகளைப் போல் விரியாக

வும், தொகையாகவும் வரலாம். சாரியை பெற்றும் பெருமலும், வேற்றுமை உருபு சொல்லோடு சேரலாம்.

வீட்டில் இருந்தான் - சாரியை பெறவில்லை.
வீட்டினில் இருந்தான் - இன்சாரியை.
வானத்தில் பறந்தான் - அத்துச் சாரியை.

கண், அகம், புறம், மேல்...முதலியவை, ஏழனுருபுகளாகாமல், இடவேறுபாடுகளை உணர்த்தும் சொற்களாகவும் வரலாம்.

"கண்ணகல் உலகம்;
அகத்தில் இருந்தான்;
புறத்தில் போனுன்;
மேல் நின்ருன்;
கீழ் அடைந்தான்..."

என்பவை உதாரணம்.

எட்டாம் வேற்றுமை

ஒன்றை அழைப்பதற்குச் சொல் எட்டாம் வேற்றுமை அடையும். அதாவது, படர்க்கையிடத்துப் பொருளை முன்னிலையில் அழைத்தலுக்கு இவ்வேற்றுமை உதவுகின்றது. எனவே, விளித்தல் இதன் பொருள். இதை விளி வேற்றுமை என்றும் அழைப்பர். சொற்கள் அரசே, அண்ணு, தந்தையே, குழந்தாய் என்று அழைப்பதற்கு வேண்டியபடி, இவ்வேற்றுமையில் வேறுபாடு அடையும். தம்பி, தோழி என்று இயல்பாய் இருப்பதும் உண்டு.

ஆகவே, விளியில் சொற்கள் இயல்பாயும், ஈறு திரிதல், மிகுதல், கெடல், ஈற்றயல் திரிதலாகிய விகாரங்

களை அடைந்தும் நிற்கலாம். அல்லது, இரண்டு மூன்று விகாரங்களை அடைந்து விளியாதலும் உண்டு.

உதாரணம்:...

"தம்பி வா,
நம்பி கேள்,
நங்கை நில்,"—இவை இயல்பாய் நிற்றலுக்கு உதாரணம்.

தந்தை—தந்தாய்
நல்லாள்—நல்லாய்—ஈறு திரிந்தது.
அரசன்—அரச
நண்பன்—நண்ப—ஈறு கெட்டது.
தந்தை—தந்தையே
மகன்—மகனே—ஈறு மிகுந்தது.
மக்கள்—மக்காள்
புலவர்—புலவீர்—ஈற்றயல் திரிந்தது.
அண்ணன் - அண்ணா - ஈறு கெட்டு, அயலும் திரிந்தது.
அப்பன் - அப்பாவோ - ஈறுகெட்டு அயல் திரிந்ததோடு ஈறும் மிகுந்தது.

எட்டாம் வேற்றுமை பற்றி நேயர்கள் இவ்வளவு அறிந்து கொண்டால் போதும்.

உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

இதுவரை எட்டு வேற்றுமைகளையும், அவைகளுக்குரிய பொருள்களையும் அறிந்தோம். சொற்கள் வேற்றுமை உருபை ஏற்று நிற்கையில் வேற்றுமை விரி என்றும், உருபு மறைந்திருக்கையில் வேற்றுமைத் தொகை

என்றும் கூறினோம். உருபொடு வேறு சில சொற்களும் சில சமயம் மறைந்திருப்பதுண்டு. அப்பொழுது அதனை உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்பர்.

"அவன் கல் நெஞ்சன்."

என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இதில் கல் என்பது இரண்டாம் வேற்றுமைச் சொல். ஐ உருபு இதில் மறைந்திருக்கின்றது. இதை விரித்தால் வாக்கியம், "அவன் கல்லை நெஞ்சன்," என்றாகும். இவ்வாறு ஆவதால் அவ்வாக்கியம் பொருள் நிறைவு உடையதாகாது. அவ்வாக்கியம், அர்த்தமுடையது ஆவதற்கு, "அவன் கல்லைப் போன்ற நெஞ்சன்," என்று விரியவேண்டும். ஐ உருபோடு போன்ற என்ற சொல்லும் சேர்ந்தால்தான் வாக்கியம் பொருளுடையது ஆகும். ஆகவே, உருபோடு, வேறொரு சொல்லும் தொகையாய் இருப்பதால், கல் என்பது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகின்றது. ஆறும் வேற்றுமை தவிர, மற்ற வேற்றுமைகளில், அதாவது - இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஏழு வேற்றுமைகளில் - உருபொடு பயனும் மறைந்திருக்கலாம்.

உதாரணம்:—

தேனைக் குடித்த வண்டு - இரண்டாம் வேற்றுமை விரி.

தேன் குடித்த வண்டு - இரண்டாம் வேற்றுமைத் தொகை.

தேன் மலர் - தேனை உடைய மலர் என்று விரியுமாதலால் இரண்டாம் வேற்றுமை

உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

தலையால் வணங்கினான் - மூன்றாம் வேற்றுமை விரி.
தலை வணங்கினான் - மூன்றாம் வேற்றுமைத் தொகை.

வெள்ளித் தட்டு - வெள்ளியால் செய்யப்பட்டதட்டு என்று விரியுமாதலால் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

உன்குலத்திற்கு அழிவில்லை - நான்காம்வேற்றுமை விரி.

உன் குலம் அழிவில்லை - நான்காம் வேற்றுமைத் தொகை.

உன் குல நலம் - உன் குலத்திற்கு உரியதான நலம் என்று விரியுமாதலால் நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

மலைநின்று வீழ் அருவி - ஐந்தாம் வேற்றுமை விரி.
மலை வீழ் அருவி - ஐந்தாம் வேற்றுமைத் தொகை.
மலை அருவி - மலையிலிருந்து விழும் அருவி என்று விரியுமாதலால், ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

நகரில் இருந்தான் - ஏழாம் வேற்றுமை விரி.
நகர் இருந்தான் - ஏழாம் வேற்றுமைத் தொகை.

நகரமக்கள் – நகரத்தில் வசிக்கும் மக்கள் என்று விரியுமாதலால் ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

எட்டு வேற்றுமைகளில், இரண்டு, மூன்று, நான்கு ஐந்து, ஏழு வேற்றுமைகள் தான் உருபும் பயனும் உடன் தொக்க தொகையாக வரும். ஆறும் வேற்றுமையில் உருபும் பயனும் தொக்கிருப்பதில்லை.

உருபு மயக்கம்

மயக்கம் என்றால் மாறுதல். உருபு மயக்கம் என்றால் பொருளோடு பொருந்தாமல் வேற்றுமை உருபு மாறி வரல்.

ஒரு வேற்றுமையின் பொருள் வேறோர் வேற்றுமை உருபால் தெரிவிக்கப்படின், உருபு மயக்கம் ஆகும். இதை வேற்றுமை மயக்கம் என்றும் அழைப்பதுண்டு.

"கண்ணால் கண்டேன்," என்பது "கண்ணில் கண்டேன்" என்று ஏழனுருபு பெற்றும்,

"இந்நகரிலே வாழ்கின்றோம்," என்பது "இந்நகர்க்கே வாழ்கின்றோம்," என்று நான்கனுருபு பெற்றும்,

"காலத்தில் செய்த உதவி," என்பது "காலத்தால் செய்த உதவி," என்று மூன்றனுருபு பெற்றும்,

"புலியை ஒத்தான்," என்பது "புலியொடு ஒத்தான்," என்று மூன்றனுருபு பெற்றும் செய்யுள்களில் வாக்கியங்கள் அமைவதுண்டு.

இவ்வாறு வரின் உருபு மயக்கம். உருபு சென்ற வழி பொருள் கொள்ளாமல், பொருள் சென்ற வழி உருபை மாற்றிக் கொள்ளவேண்டும்.

வேற்றுமையைப் பற்றி நேயர்கள் அறியவேண்டியன இவ்வளவே.

3. வினைச் சொல்

ஒன்றின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல். அதன் தொழிலைக் குறிப்பது வினைச்சொல். நட, வா, போ, நில், கிட, புரளு என்பனபோன்ற பதங்கள் வினைப் பதங்கள். ஒரு காரியத்தைச் செய்விக்கும் குறிப்பினை இப்பதங்களில் காணலாம். ஒன்றைச் செய்தல் அல்லது செய்வித்தலைக் குறித்து நிற்பது வினைச்சொல். அது தெரிநிலை வினை என்றும் குறிப்பு வினை என்றும் இருவிதப்படும்.

தெரிநிலை வினை

செய்யும் கர்த்தா, செய்தொழில், காலம் முதலியவை களைத் தெரியக் காட்டுவது தெரிநிலை வினை. வா என்னும் பதத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அது,

வந்தான், வருகின்றான், வருவான் என்றும்,
வந்தாள், வருகின்றாள், வருவாள் என்றும்,
வந்தார், வருகின்றார், வருவார் என்றும்,

அல்லது,

வந்தேன், வருகின்றேன், வருவேன் என்றும்,
வந்தோம், வருகின்றோம், வருவோம் என்றும்,

அல்லது,

வந்தாய், வருகின்றாய், வருவாய் என்றும்,
வந்தீர், வருகின்றீர், வருவீர் என்றும்,

அல்லது,

வந்தது, வருகின்றது, வரும் என்றும்,
வந்தன, வருகின்றன, வரும் என்றும்,

பலவிதமாக வரலாம். மேலும், அதை நோக்கினல்,

"வருதலாகிய தொழிலைச் செய்தது யார்?—
அவனு, அவளா, அவரா?
அதுவா, அவையா?
நானு, நாங்களா?
நீயா, நீங்களா?"

என்றும்.

"செய்தகாலம் யாது?—
முன்னு, இப்பொழுதா, இனிமேலா?"

என்றும் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு, கர்த்தா, காலம், செயல் முதலியவைகளைத் தெரியக்காட்டும் வினையைப் பொருள் முற்றிய தெரிநிலை வினை என்பர். தெரிநிலை வினைமுற்று என்றும் அதை அழைப்ப துண்டு. வினைமுற்றை ஆங்கிலத்தில் Predicate என்பர்.

"செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய் பொருள் ஆறும் தருவது வினையே."

என்பது நன்னூல் சூத்திரம்.

உண்டான் என்னும் சொல்லை எடுத்துக் கொள்வோம். இச்சொல், உண்ணும் செயல், உண்டவன், வாயாகிய கருவி, உண்ட காலம் ஆகியவைகளைத் தெரிவிக்கின்றது. இதனல் தெரிவிக்கப் படாதது இடமும், உண்ணப்பட்ட பொருளுமாகும். "எதை உண்டான்? எங்கே உண் டான்?" என்று வினவினல், அவைகளையும் பெறலாம்

வனைந்தான் என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இதில், வனைந்த குயவன், வனையும் தொழில், கருவியாகிய மண், வனைந்த இடம், காலம் ஆகியவை வெளிப்படை. ஆனால், செய்யப்பட்ட பொருளாகிய குடம் வினவிப் பெறவேண்டியதாகின்றது.

இவ்வாறு கர்த்தா, கருவி, இடம், காலம், தொழில் முதலியவைகளைத் தெரிவிக்கும் வினை தெரிநிலை வினை ஆகின்றது.

"பானை செய்தான்; பழம் தின்கின்றான்; ஓவியம் எழுதுவான்," என்பவை தெரிநிலைவினைக்கு உதாரணம். இவ்வுதாரணங்களில், வினை பொருள் முற்றியிருப்பதால் தெரிநிலை வினை முற்று ஆகும்.

குறிப்பு வினை

தெரிநிலை வினையைப் போலல்லாமல், காலம் தொழில் முதலியவைகளைக் குறிப்பால் உணர்த்தி நிற்பது குறிப்பு வினை எனப்படும்.

> "பொருள் முதல் ஆறினும் தோற்றி
> முன்னாறனுள்
> வினைமுதல் மாத்திரை விளக்கல்
> வினைக் குறிப்பே"

என்பது நன்னூல் சூத்திரம். "பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பவற்றில் ஒன்றினடியாகப் பிறந்து, கர்த்தாவை மாத்திரம் தெரிவிப்பது குறிப்பு வினை," என்பது சூத்திரப் பொருள்.

"(கேசவன்) பரணியில் பிறந்தான்," என்பது ஒரு வாக்கியம். இதில், பிறந்தான் என்பது தெரிநிலை வினை முற்று. இந்த வாக்கியத்தையே பொருள்வேறு படாத

படி, "(கேசவன்) பரணியான் என்றும் அமைத்துவிடலாம். அப்பொழுது பரணியான் என்பது குறிப்புவினைமுற்று" ஆகின்றது.

உதாரணம் :—

பொன்னன்—இது பொன்னையுடையவன் என்று பொருள்படும்போது பெயர்ச் சொல்லாகும். மற்று, இது, பொன்னையுடையவனாய் இருந்தான், இருக்கிறான், இருப்பான் என்று பொருள்படும்போது குறிப்பு வினை முற்றாகும் இது, பொன் என்னும் பொருளடியாகப் பிறந்த குறிப்புவினை.

திருநாடன்—நாடனாய் இருந்தான், அல்லது இருக்கிறான் என்று பொருள்படுமாதலால் இது, இடத்தினடியாகப் பிறந்த குறிப்பு வினை.

ஓணத்தான்—காலத்தினடியாகப் பிறந்த குறிப்பு வினை. (ஓணம்—காலம்.)

(தாமரைக்) கண்ணன்—சினை அடியாகப் பிறந்த குறிப்புவினை (சினை-உறுப்பு)

கரியன்—குணத்தினடியாகப் பிறந்த குறிப்புவினை. (கருமை—ஒரு பண்பு.)

ஆடலான்—தொழிலடியாகப் பிறந்த குறிப்புவினை.

குறிப்புவினை, விகுதியால் கர்த்தாவையும், அதாவது தொழிலைச் செய்பவனையும், அவனது தொழிலைக் குறிப்பினாலும் தெரிவிக்கும் இயல்பினது.

எச்ச வினை

பொருள் முற்றிய வினையை வினைமுற்று என்று கூறினோம். பொருள் முற்றாமல் வினைப்பதம் நிற்பதும் உண்டு. அதாவது,

வந்த, வருகின்ற, வரும்

என்றாவது, அல்லது,

வந்து, வர, வரின்

என்றாவது வினைப்பதங்கள் நிற்கலாம். அவ்வாறு நிற்கையில், பதங்கள் செய்த காரியத்தையும், காலத்தையும் குறிக்கலாம். ஆனால், காரியத்தைச் செய்த கர்த்தாவை அவைகளால் தெரிவிக்க முடியாது. எனவே, அவை பொருள் முற்றாத வினைப்பதங்களாகின்றன. அவை முற்றிய பொருளைத் தருவதற்கு வேறோர் சொல்லின் துணை அவசியமாகின்றது, எனவே, தன்வரையில் முற்றிய பொருளைத் தருவதற்கு இயலாத வினைப்பதம் எச்சவினை என்று அழைக்கப்படும். எச்சம் என்றால் குறைவு. பொருட் குறைவையுடைய வினை எச்சவினை ஆகின்றது.

எச்சமாய் நிற்கும் வினை, முற்றிய பொருள் பெறுவதற்கு ஒரு பெயர்ச் சொல்லையோ, அல்லது ஒரு வினைச் சொல்லையோ துணையாகக் கொள்வது அவசியம். வந்த, வருகின்ற, வரும் என்ற எச்சவினைகள் ஒரு பெயர்ச் சொல்லைச் சேராமல் பொருள் நிறைவு பெறுவதற்கில்லை. ஒரு பெயர்ச் சொல்லோடு சேர்ந்து பொருள் நிறைவை அடைகின்ற எச்சவினை, பெயர் எச்சம் என்ற பெயர் பெறுகின்றது.

வர, வந்து, வரின், செல்ல, என்ற உருவத்தில் நிற்கும் எச்சவினைகள், ஒருவினைச் சொல்லைச் சேர்ந்தா

லன்றி முற்றிய பொருள் பெறு. எனவே வினைச்சொல் லொடு சேர்ந்து பொருள்நிறைவு கொள்ளும் எச்சவினை, வினையெச்சம் என்ற பெயர் பெறுகின்றது.

வந்த பையன்,
வருகின்ற பையன்,
வரும் பையன்,—என்பவை பெயர் எச்சத்திற்கு உதாரணம்.

வர இருந்தான்,
செல்ல நினைக்கிறுன்,
வந்து சேர்வான்- என்பவை வினையெச்சத்திற்கு உதாரணம்.

குறிப்பு :-

பெயரெச்சமும், வினையெச்சமும் வினைச்சொற்களே. பெயரெச்சம் என்றழைப்பதால், அது பெயர்ச்சொல்லாய் இருக்குமோ என்று நேயர்கள் மயங்கலாகாது.

பொருள் முற்ருத வினைதான் பெயரைக் கொண்டு முடிகையில் பெயரெச்சமும், வினையைக் கொண்டு முடிகையில் வினையெச்சமும் ஆகின்றது.

வரும், பேசும் நிற்கும் என்ற உருவத்திலும் எச்ச வினைகள் நிற்கலாம். அவை வரும் பையன், பேசும் கிளி, நிற்கும் தேர் என நின்று, பையன், கிளி, தேர் என்னும் பெயர்களோடு சேர்ந்து பெயரெச்சங்கள் ஆகின்றன. அவைகளையே, மழை வரும், கிளி பேசும், தேர் நிற்கும் என்று மாற்றி அமைத்தால், அப்பொழுது வரும், பேசும், நிற்கும் என்பவை வினைமுற்ருகும் என்பது காண்க.

பெயரெச்சம்

முற்றிய பொருளுடைய வினையை வினை முற்று என்றும், பொருள் முற்ருமல் உண்ண, பார்க்க, நடக்கும் என்று நிற்பவை எச்சம் என்றும் கூறினேம். எச்ச வினையின் குறைவு பெயர்ச்சொல்லால் நிறையுமாயின் பெயரெச்சம். வினைச்சொல்லால் நிறையுமாயின் வினை யெச்சம்.

"மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற அன்னம்"

என்பது புகழேந்தியாரின் ஒரு செய்யுளடி. இவ்வடியி லுள்ள விடுத்த திகழ்கின்ற என்பவை பெயரெச்சங்கள்.

விடுத்த என்னும் பதம் அனுப்புவதாகிய காரி யத்தைக் குறிக்கின்றபடியால் வினை. ஆனுல் இது காரிய முடிவைக் காட்டாமல் நிற்கின்றது. எனவே இது எச்சவினை.

இதை அடுத்து நிற்பது வடிவில் என்னும் சொல், வடிவு என்ருல் அழகு. விடுத்த என்ற எச்சவினை வடிவு என்பதோடு சேர்ந்து நிறைவு பெறுவதற்கில்லை. மன்னன் அனுப்பியது வடிவு அன்று. வடிவு ஒருதன்மை யாதலால், அது அனுப்பப்படும் பொருளாகாது. எனவே, மன்னன் அனுப்பியது அன்னம். விடுத்த என்ற எச்சவினை அன்னம் என்ற பெயர்ச் சொல்லோடு சேர்ந்து பொருள் படுவதாகின்றது. எனவே, பெய ரெச்சம்.

திகழ்கின்ற என்பதும் எச்சவினை, அதுவும் அன்னம் என்னும் சொல்லைச் சேர்ந்து பொருள் படுவதா கின்றது. எனவே பெயரெச்சம், விடுத்த, திகழ்கின்ற என்ற

இரண்டு எச்சவினைகளும் அன்னம் என்ற ஒரு சொல்லைக் கொண்டு முடிந்து பெயரெச்சங்கள் ஆகின்றன. "மன்னன் அனுப்பியதும் அழகொடு விளங்குகின்றதுமான அன்னம்," என்பது செய்யுளடியின் பொருள்.

பெயரெச்சங்கள், செய்தபையன், செய்கின்ற பையன், செய்யும் பையன் என்று முக்காலங்களையும் காட்ட வல்லவை. காலங்காட்டாமலும் பெயரெச்சங்கள் நிற்பதுண்டு. அவ்வாறு நிற்கும் பெயரெச்சங்களை வினைத் தொகை என்பர்.

கொல்யானை—இத்தொடரிலுள்ள கொல் என்னும் எச்சவினை காலங்காட்ட வில்லை. "கொன்ற யானையா? கொல்கின்ற யானையா? கொல்லும் யானையா?" என்று தெளிய முடியாமல் நிற்பதால் வினைத்தொகை.

விளைநிலம்—"விளைந்த நிலமா, விளைகின்ற நிலமா, விளையும் நிலமா?" என்று காலம் தெரிவிக்காமல் நிற்பதால் வினைத்தொகை.

தொடுகழல்.
விரிகதிர்.
கனைகடல்.
செய் வயல்,—முதலியன வினைத்தொகைக்கு உதாரணம்.

பெயரெச்சம், தெரிநிலை, குறிப்பு என்று இருவிதப்படும். தெரிநிலைப் பெயரெச்சம் காலமும் செயலும் தோன்ற நிற்கும். மற்றுக் குறிப்புப் பெயரெச்சமோ, பெரும்பாலும் பண்புப் பெயரடியாகப் பிறந்து காலத்தை

வெளிப்படையாகக் காட்டாமல், அகர விகுதியால் முடிந்து, பெயர்ச் சொல்லின் சேர்க்கையால் பொருள் நிறைவு பெறுவதாகும்.

உதாரணம்:—

உண்ட பையன்
உண்கிற பையன்
உண்ணும் பையன்—காலந் தோன்ற நிற்பதால் இவை தெரிநிலைப் பெயரெச்சங்கள்.

சிறிய பையன்
பெரிய மரம்
புதிய புத்தகம்
இலைய வேல்—என்பவை குறிப்புப் பெயரெச்சங்களுக்கு உதாரணம், சிறியன், பெரியன், புதியது, இலையது என்று நின்ருல் குறிப்புவினை முற்ருகும்.

மேலும், பெயரெச்சம் ~~எதிர் மறைத் தெரிநிலைப் பெய~~ரெச்சம் என்றும், எதிர் மறைக் குறிப்புப் பெயரெச்சம் என்றும் இருவிதப்படும். உண்ணுத, செய்யாத, ஆடாத என்ற பெயரெச்சங்கள் எதிர்மறைத் தெரிநிலைக்கு உதாரணம். உண்ணுத, செய்யாத...என்பவை காலங் காட்டாதனவாயினும், அவற்றின் உடன்பாடாகிய உண்ட, செய்த என்பவை காலங்காட்டலால், அவை தெரிநிலையே என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

அன்மை, இன்மை என்னும் சொற்களைப் பகுதியாகக் கொண்டு பிறக்கும் அல்லாத, இல்லாத என்பவை எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சங்கள்.

எதிர்மறைப் பெயரெச்சங்கள், உண்ணு, செய்யா, ஆடா, இல்லா, அல்லா என்று ஈறுகெட்டும் நிற்பதுண்டு.

சில பெயரெச்சங்கள் காரணகாரியப் பொருள் களிலும் வரக் காண்கின்றோம்.

சங்குசுட்ட சுண்ணம்பு—சுட்டகாரணத்தினுல் ஆகிய சுண்ணம்பு என்பது பொருள். எனவே, சுட்ட என்னும் பெயரெச்சம் காரணப் பொருளது.

உண்ட களைப்பு—உண்ட காரணத்தினுல் ஏற்பட்ட களைப்பு என்று பொருள் படுவதால், உண்ட என்னும் பெயரெச்சம் காரணப் பொருளது.

நோய் தீர்த்த மருந்து—நோய் தீர்த்தலைச் செய்த மருந்து என்று பொருள் படுவதால், தீர்த்த என்னும் பெயரெச்சம் காரியப் பொருளது.

நின்னைக் காண அவா—நின்னைக் காணும் காரியத்தைச் செய்வதற்கு அவா என்று பொருள் படுவதால், காண என்பது காரியப் பொருளது.

தாவும், ஆகும், போகும், வாவும் என்ற உருவத்தில் நிற்கும் எதிர்காலப் பெயரெச்சங்களை செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் என்பர். இப்பெயரெச்சங்கள் ஈற்றயலோடு ஈற்று மெய்யுங் கெட்டு நிற்பதுண்டு.

உதாரணம்:—

ஆகும் பொருள்—ஆம் பொருள்—ஈற்றயல் கெட்டது.
வாவும் பரி—வாவு பரி—ஈறுகெட்டது.
போகும் போது—போம்போது—ஈற்றயல் கெட்டது.
தாவும் மரை—தாமரை—ஈற்றயலோடு, ஈற்று மெய்யுங் கெட்டது. (மரை என்றால் மான்).

குறிப்பு:—செய்யுள்களில் செய்யும், பாயும் என்னும் எதிர் காலப் பெயரெச்சங்கள் செய்யுந்து, பாயுந்து என்றும் நிற்ப துண்டு. **உம்** இங்கே **உந்து** என்று திரிந்துளது. இவ்வாறு திரிதல் செய்யுள் வழக்கு. வசன நடையில் இவ்வாறு திரிதலுக்கு இடமில்லை.

வினைஎச்சம்

ஒரு வினையைக் கொண்டு முடிந்து பொருள் முற்றும் எச்சவினையை வினையெச்சம் என்று கூறினோம். ஆடிப் பாடினான், என்பதில் ஆடி என்னும் எச்சவினை பாடினான் என்னும் வினை முற்றைக் கொண்டு முடிந்து, முற்றிய பொருளுடையதாகின்றது. எனவே ஆடி, என்பது வினைஎச்சம்.

ஒரு வினையெச்சம் வினைமுற்றைத் தான் கொண்டு முடியவேண்டும் என்பதில்லை. ஒருவினையெச்சம் மற்றோர் வினையெச்சத்தையுங் கொண்டு முடியலாம்; அல்லது ஒரு பெயரெச்சத்தையுங் கொண்டு முடியலாம்.

"ஆடிப்பாடி அகங்கரைந்தான்." என்னும் வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். இந்த வாக்கியத்தில், ஆடி, பாடி என்பவை வினையெச்சங்கள். ஆடி என்னும்

வினையெச்சம் பாடி என்னும் மற்றோர் வினையெச்சத்தைக் கொண்டு முடிகின்றது. பாடி என்பது கரைந்தான் என்னும் வினை முற்றைக் கொண்டு முடிகின்றது.

"ஆடிப்பாடிய பாணன்," என்னும் வாக்கியத்தில், ஆடி என்னும் வினையெச்சம் பாடிய என்னும் பெயரெச்சத்தைக் கொண்டு முடிகின்றது.

"ஓடிவந்த சிறுவன் இடறி விழுந்தான்," என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம், இதில் ஓடி என்னும் வினை யெச்சம் வந்த என்னும் பெயரெச்சத்தையும், இடறி என்னும் வினை யெச்சம் விழுந்தான் என்னும் வினைமுற்றையுங் கொண்டு முடிவது காண்க.

இனி, வினை யெச்சங்கள் எவ் வெந்தப்பொருள்களில் வரக்கூடும் என்று பார்ப்போம். அடிக்க, வர, உண்ண, பாட என்பன போன்ற வினையெச்சங்களைச் செய என்னும் வாய் பாட்டு வினையெச்சம் என்பர். இவை, காரணம், காரியம், உடன் நிகழ்ச்சி என்ற மூன்றுவிதப் பொருள்களில் வரலாம்.

"நெல் விளைய மழை பெய்தது"

என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். விளைய என்பது எச்சவினை. அது, 'பெய்தது என்னும் வினை முற்றைக் கொண்டு முடிவதால் வினையெச்சம்'. இந்த வாக்கியத்தின்படி, மழைபெய்தது காரணம்; நெல் விளைந்தது காரியம். நெல்விளையும் காரியம் நிகழுமாறு மழை பெய்தது என்பது வாக்கியத்தின் பொருள். எனவே, விளைய என்பது காரியப் பொருளில் வந்த வினை யெச்சம்.

"மழை பெய்ய நெல் விளைந்தது."

என்றும் முன்னைய வாக்கியத்தை மாற்றி அமைக்கலாம். இவ்வாறு வாக்கியம் அமையின், காரிய காரணம் மாறி விடுகின்றது. பெய்ய என்னும் எச்சவினை விளைந்தது என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிவதால் வினையெச்சம். இந்த வினையெச்சம் காரணப் பொருளது ஆகின்றது. இந்த வாக்கியத்தின்படி, மழை பெய்தது காரணம்; நெல் விளைந்தது காரியம். மழை பெய்த காரணத்தால் நெல் விளையும் காரியம் நிகழ்ந்தது. மழையில்லையேல் நெல்விளைவும் இல்லை. பெய்தல் காரணம்; விளைதல் காரியம். நெல் விளைவதற்காகத் தான் மழை பெய்தது. எனவே, பெய்ய என்பது காரணப் பொருளில் வந்த வினை எச்சம்.

காரிய காரணங்களைக் காட்டாமலும் வினையெச்சங்கள் வரலாம். அவ்வாறு வரின், அது உடன் நிகழ்ச்சிப்பொருளில் வந்த வினையெச்சமாகும்.

"சூரியன் உதிக்க நண்பன் வந்தான்,"

என்னும் வாக்கியத்தில், உதிக்க என்னும் வினையெச்சம் உடன் நிகழ்ச்சிப் பொருளதாகும். சூரியன் உதிப்பதற்காக நண்பன் வரவில்லை. நண்பன் வாராமல் போனாலும் சூரியன் உதிக்கும். எனவே காரியப் பொருள் அன்று. சூரியன் உதித்தபடியினால் நண்பன் வந்தான் என்பதற்கும் இல்லை. எனவே, காரணப் பொருளும் அன்று. நண்பன் வந்ததும், சூரியன் உதித்ததும் ஒன்றாய் நிகழலாயின. இவ்வாறு இரண்டு நிகழ்ச்சிகள் ஒன்றாய் நிகழ்ந்தன என்பதைக் காட்டும் வினையெச்சங்கள், உடன் நிகழ்ச்சிப் பொருளில் வந்த வினையெச்சங்களாகும்.

செய்யுள்களின் பொருளுணர்ந்து அனுபவிப்பதற்கு, இப்பொருள் வேறுபாடுகளை மாணவர் அறிதல் இன்றியமையாததாகும்.

“சீத மதிக் குடைக்கீழ் செம்மை அறங்
கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்-மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு,”

என்பது புகழேந்தியார் பாடிய செய்யுள். “தாது அவிழ் பூந்தாரன், மாதர் அருகு ஊட்டும் பைங்கிளியும் ஆடல் பருந்தும் ஒரு கூட்டில்வாழ, சீதமதிக் குடைக்கீழ் செம்மை அறம் கிடப்ப, உலகு தனிக் காத்தான்.” என்பது செய்யுளின் அன்வயம். இச்செய்யுளில் கிடப்ப, வாழ என்ற இரண்டு வினையெச்சங்கள் இருக்கின்றன. இவற்றில், கிடப்ப என்பதற்குக் கிடந்த காரணத்தால் என்று பொருள் கொள்ள வேண்டும். காரணப் பொருளதான அவ் வினையெச்சம் வாழ என்ற மற்றோர் வினையெச்சத்தைக் கொண்டு முடிகின்றது. ஒரு வினையெச்சம் வேறோர் வினையெச்சத்தையோ, அல்லது பெயரெச்சத்தையோ கொண்டு முடியலாம் என்று முன்னரே கூறியுள்ளோம்.

வாழ என்னும் வினையெச்சம் காத்தான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகின்றது. வாழ என்பது காரியப்பொருளில் வந்துளது. தர்மம் கிடந்த காரணத்தால் வாழ்தல் என்னும் காரியம் நிகழ்ந்தது என்னும் பொருள் தருவதால், வாழ என்பது காரியப்பொருளதாகின்றது.

இனிச் செய்யுளை நெருங்கி நோக்குவோம். "நளனுடைய குடையின் கீழ் தர்மம் கிடந்த (தங்கியிருந்த) காரணத்தால் பருந்தும் கிளியும் பகை மறந்து ஒரு கூட்டில் வாழ்தல் என்னுங் காரியம் நிகழ, அவன் உலகு காத்தான்," என்னும் பொருளது செய்யுள்.

அறம் கிடந்தது காரணம். அதன் காரியம் பருந்தும் கிளியும் ஒரு கூட்டில் வாழ்தல். "நளன் தர்மபரிபாலனம் செய்தான். தர்மத்தின் பயனாகப் பகையற்ற வாழ்க்கை இயல்வதாயிற்று" என்பதே செய்யுளின் கருத்து. வினையெச்ச இலக்கணம் தெரியாமற் போனால், கிடப்ப, வாழ, என்னும் வினையெச்சங்களைக் காரியப் பொருளில் கொண்டு, "அறங்கிடக்கவும், பருந்தும் கிளியும் ஒரு கூட்டில் வாழவும் (நளன்) உலகம் காத்தான்." என்று பொருள் கொள்ள நேரும். "அறங்கிடப்பக் காத்தான்," என்றும், "ஒரு கூட்டில் வாழக்காத்தான்," என்றுங், கொண்டு கருத்தின் நயத்தை இழந்தவர்களாவோம்.

தர்ம பரிபாலனமே அரசனது காரியம் என்பதும், தர்மவளர்ச்சியே மக்களது நல்வாழ்க்கையின் வித்து என்பதும், புலவர் கருத்து என்பதைத் தெரிவிக்கும் கருத்தினது இச்செய்யுள். தர்மப் பிரக்ஞை சிறிதுமின்றிச் செய்யப்படுஞ் சட்டதிட்ட முயற்சிகள் எல்லாம் நல்வாழ்வின் வித்தாகா," என்பது செய்யுளின் குறிப்பு.

வினையெச்ச வாய்பாடு

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஒன்பது வாய்பாடுகளால் வருவனவும், வான், பான், பாக்கு என்னும் விகுதிகள் பெற்று வருவனவும் வினையெச்சங்களாகும்.

(1) இருந்து, நடந்து, ஆடி, ஓடி, என்பவை செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். இறந்த காலங் காட்டுபவை.

(2) உண்குபு, நக்குபு, காண்குபு, என்பவை செய்பு என்னும் வாய்பாட்டின. காலம் இறந்தகாலம். (உண்டு, நக்கி, கண்டு என்பன பொருள்.)

(3) நடவா, ஓடா, பெய்யா, கல்லா என்பவை இறந்தகாலங் காட்டும் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். (நடந்து, ஓடி, பெய்து, கற்று என்னும் உடன்பாட்டுப் பொருளன.)

(4) உண்ணூ, காணூ என்பவை இறந்தகாலம் காட்டும் செய்யூ என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். உண்டு கண்டு என்னும் பொருளன. (உண்ணூஉ காணூஉ என்று அவை அளபேற்றும் நிற்கும்.)

(5) கண்டென, நடந்தென, உண்டென என்பவை இறந்தகாலம் காட்டுஞ் செய்தென என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். (கண்டதால் நடந்ததால் உண்டதால் என்னும் பொருளன.)

(6) நடக்க, படிக்க, உண்க, ஓட, பாட என்பவை செய என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். இவ்வாய் பாட்டு வினையெச்சங்கள் நிகழ்காலம் காட்டும்.

(7) வரின், புகின், பாடின், உண்ணின் என்பவை எதிர்காலங் காட்டும், செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்.

(8) ஆடிய, சொல்லிய, காணிய, உண்ணிய என்பவை எதிர்காலங் காட்டும் செய்யிய என்னும் வாய்பாட்டு

வினையெச்சங்கள். (ஆடுவதற்கு, சொல்வதற்கு, காண்பதற்கு, உண்பதற்கு என்னும் பொருளன.)

(9) உண்ணியர், செய்யியர், சென்மியர் என்பவை எதிர்காலங் காட்டும் செய்யியர் என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். (உண்ணும்படி, செய்யும்படி, செல்லும்படி என்னும் பொருளன.)

செய்து செய்பு, செய்யா செய்யூ, செய்தென, என்னும் வாய்பாட்டின இறந்தகாலத்தையும், செய என்னும் வாய்பாட்டினது நிகழ்காலத்தையும், செயின் செய்யிய, செய்யியர் என்னும் வாய்பாட்டின எதிர்காலத்தையும் காட்டுவனவாகும்.

உதாரணம்:—

1. இராமன் நடந்து வந்தான்—செய்து
2. நாய் நக்குபு சென்றது—செய்பு
3. மழை பெய்யாக் கெடுக்கும்—செய்யா
4. மான் நீர் காணூ மகிழ்ந்தது—செய்யூ
5. அவன் நடந்தெனக் களைத்தான்—செய்தென
   இவை ஐந்தும் இறந்தகாலம் காட்டுபவை.
6. மாணவன் படிக்க வந்தான்—செய என்னும் வாய்பாட்டின. இவ்வாய் பாட்டு வினையெச்சம் ஒன்றே நிகழ்காலம் காட்டும்.
7. அவன் வரின் தருவேன்—செயின்
8. அவன் காணிய வருவான்— செய்யிய
9. அவன் உண்ணியர் வருவான்— செய்யியர்
   இவை நான்கும் எதிர் காலங்காட்டுபவை.

குறிப்பு:—

செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம் நிகழ் காலத்திற்குரியது என்று கூறினோம். சிறுபான்மை அது முக்காலத்திற்கும் பொதுவாய் வருதலும் உண்டு. செய எனும் வாய்பாட்டு வினையெச்சம் காரணப்பொருள தாகும் பொழுது இறந்தகாலத்திலும், உடன் நிகழ்ச்சியில் தனக்குரிய நிகழ்காலத்திலும், காரியப் பொருளதாகும் பொழுது எதிர்காலத்திலும் வரக் காண்கின்றோம்.

உதாரணம்:—

மழை பெய்ய நெல் விளைந்தது—"பெய்த காரணத்தினால்," என்று பொருள் படுவதால் இறந்த காலத்தது ஆகின்றது.

சூரியன் உதிக்க நங்கை வந்தாள்— சூரியன் உதித்தலும் நங்கை வருதலும் ஒன்றாய் நிகழ்வதால், இது உடன் நிகழ்ச்சிப் பொருளது. காலம், அவ்வாய் பாட்டிற்குரிய நிகழ்காலம்.

நெல் விளைய மழை பெய்தது—மழை பெய்தது காரணம்; அதன் பயனாய் நிகழ்ந்தது நெல் விளைதல். எனவே, விளைய என்பது காரியப் பொருளில் வந்த செய வெனும் வாய்பாட்டு வினையெச்சம். மழை காரணமாக, வருங்காலத்தில் விளைவது நெல். எனவே எதிர் காலத்தது.

வான், பான், பாக்கு என்பவை வினையெச்சவிகுதிகள். இவ்விகுதிகளை ஏற்ற வினையெச்சங்கள் எதிர்காலத்தை காட்டி நிற்கும். "கொள்வான் வந்தான்; காண்பான்

சென்றேன், உண்பாக்கு வந்தேன்'' என்பவை உதாரணங்கள். கொள்வதற்கு, காண்பதற்கு, உண்பதற்கு என்னும் பொருளன அவை.

> ''காமன் படைகற்பான் வந்தடைந்தான்;
> பைந்தொடியாள் பாத நடைகற்பான்
> வந்தடைந்தேம்......''

என்பது புகழ்மேந்திப் புலவரது செய்யுளின் ஒருபகுதி. அன்னம், தமயந்தியின் அழகைப் பாராட்டும் கருத்தினது இச்செய்யுளடி. இதில் காணப்படும், படைகற்பான், நடைகற்பான் என்னும் வினையெச்சங்கள் படைகற்பதற்கு, நடைகற்பதற்கு என்ற பொருள் தந்து, வந்து என்ற வேறோர் வினையெச்சத்தைக் கொண்டு முடிகின்றன.

வான், பான் என்ற விகுதிகளை ஏற்ற எச்ச வினைகள், வினையாலணையும் பெயராகவும் வரலாம். ''செய்வான் வந்தான்'' என்பது, ''செய்பவன் வந்தான்.'' என்னும் பொருளதாயின், வினையாலணையும் பெயரதாகும். ''செய்வதற்கு வந்தான்,'' என்னும் பொருளதாயின் வினையெச்சம். காண்பான், உண்பான், என்பவற்றையும் அவ்வாறே கொள்க.

புகு, நகு, இடு, சுடு, உறு, பெறு போன்ற வினைப் பதங்கள் புக்கு, நக்கு, இட்டு, சுட்டு, உற்று, பெற்று என்று விகாரப்பட்டு நிற்கையில், இறந்தகாலங் காட்டும் வினையெச்சங்களாகும். க், ட், ற் என்ற மெய்களின் மேல் ஏறிய உகர ஈற்றுச் சொல்லின் அயல் தனிக்குறிலாயின், அது இவ்வாறு விகாரப்படுகின்றது. (அதாவது, கு, டு, று, என்னும் உயிர் மெய்களை ஈற்றிலுடைய

இருகுறில்களாலான இரண்டெழுத்துச் சொற்கள் இவ்வாறு விகாரப்பட்டு நிற்கக் காண்கின்றோம்.)

புகு, நகு, சுடு, பெறு என்பவைகளிலுள்ள, க், ட், ற் என்ற வல்லின மெய்கள், புக்கு, நக்கு, சுட்டு, பெற்று என்று இரட்டியிருப்பது காண்க. புக்கான், நக்கான், சுட்டான், பெற்றான் என்பவை இறந்த காலங்காட்டும் முற்றிய வினைகள். எச்ச வினைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியன இவ்வளவே.

உடன்பாடு எதிர்மறை

ஒரு காரியம் தன்னளவில் முடிவதையும், அவ்வாறன்றி வேறொரு சொல்லின் துணையால் பொருள் முற்ற வேண்டியிருப்பதையுங் கருதி, ஒரு சொல், வினைமுற்று என்றும், வினையெச்சம் என்றும் இருவிதப் படுவதைக் கண்டோம். வேறு காரணங்களைக்கொண்டும் வினைச்சொற்கள் பலவிதப் படலாம்.

ஒரு காரியத்தைப் பற்றிச் சொல்வது வினைச்சொல், என்று கூறினோம். ஒரு வினைச்சொல் ஒரு காரியம் செய்ததைப் பற்றியும் கூறலாம்; செய்யாததைப் பற்றியுங் கூறலாம். ஒரு காரியம் செய்ததையோ, அல்லது செய்வதையோ பற்றிச் சொல்வது உடன்பாட்டு வினை. செய்யாததைப் பற்றிச் சொல்வது எதிர் மறை வினை. எதிர் மறை வினையை மறைவினை என்றும் அழைப்பதுண்டு.

எதிர்மறை, உடன்பாட்டு வினைகள் வினைமுற்றாக இருக்கலாம்; வினையெச்சமாக இருக்கலாம்; அல்லது பெயரெச்சமாகவும் இருக்கலாம்.

உதாரணம்:—

அன்னைசொல் கேட்பேன்,

அன்பொடு தரின் உண்பேன்—இவை உடன்பாட்டு வினைமுற்றுக்கு உதாரணம்.

உன் சொல் கேளேன்,

ஊன் உணவு உண்ணேன்—இவை எதிர்மறை வினைமுற்றுக்கு உதாரணம்.

நல்லிசை கேட்டு மகிழ்ந்தேன்,

நல்லிசை கேளா மகிழ்ந்தேன்,

அறுசுவை உண்டு மகிழ்ந்தேன்,

அறுசுவை உண்ணு மகிழ்ந்தேன்—இவை, உடன்பாட்டு வினையெச்சங்கள். கேளா, உண்ணு என்பவை, கேட்டு உண்டு என்ற பொருளுடையவை.

நல்லுரை கேளாது கெட்டேன்,

நல்லுரை கேளாக் கெட்டேன்,

உணவு உண்ணுது அயர்ந்தேன்,

உணவு உண்ணு அயர்ந்தேன்—இவை எதிர்மறை வினையெச்சங்களுக்கு உதாரணம். கேளா, உண்ணு என்பவை கேளாமல், உண்ணுமல் என்ற பொருளுடையவை.

தாய்சொல் கேட்ட பிள்ளை,

பால் உண்ட பிள்ளை—இவை உடன்பாட்டுப் பெயரெச்சங்களுக்கு உதாரணம்.

தாய்சொல் கேளாத பிள்ளை,

தாய்சொல் கேளாப் பிள்ளை,

ஊன் உண்ணாத மாந்தர்,

ஊன் உண்ணா மாந்தர்—இவை எதிர் மறைப் பெயரெச்சங்களுக்கு உதாரணம்.

மேலே காட்டிய உதாரணங்களில், வாக்கிய அமைப்பிலிருந்தே, சொற்கள் உடன் பாடாயிருப்பதும் எதிர் மறையாயிருப்பதும் தெரியவரும். ஆங்கிலத்தில், உடன்பாட்டை Affirmative என்றும், எதிர்மறையை Negative என்றும் அழைப்பர்.

"நல்லிசை கேளா மகிழ்ந்தான்," என்பது, "நல்லிசை கேட்டு மகிழ்ந்தான்" என்ற பொருளையும், "நல்லுரை கேளாக் கெட்டான்" என்பது "நல்லுரை கேளாமல் கெட்டான்," என்ற பொருளையுந் தந்து, கேளா என்னும் வினையெச்சம் முன்னதில் உடன் பாட்டுப் பொருளையும், பின்னதில் எதிர்மறைப் பொருளையும் தருவதாகின்றது. கேளா, உண்ணு, ஊடா, காணு என்ற உருவத்தில் நிற்கும் வினையெச்சங்களே, இவ்வாறு உடன்பாடு, எதிர் மறையாகிய இருவிதப் பொருள்களையுந் தரக்கூடியன. இந்த உருவத்தினவான வினையெச்சங்கள் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் என்பதை முன்னரே கூறியுள்ளோம்.

"மக்களை முன்காணு மனம் நடுங்கா
வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப்புயத்து அணையா..."

என்பது புகழேந்தியார் பாடிய செய்யுளடிகள். இவ்வடிகளில் வந்துள்ள காணு, நடுங்கா, உயிரா, அணையா என்னும் வினையெச்சங்கள் கண்டு, நடுங்கி, உயிர்த்து,

அணைத்து என்று பொருள் பட்டு, உடன்பாடாவதைக் காண்க. இவை, செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களாகும். இவை பெரும்பாலும் உடன்பாட்டுப் பொருளில் வருவதே வழக்காயிருக்கின்றது.

ஆனால் செய்யா என்னும் உருவத்திலுள்ள எச்ச வினைகள் பெயரெச்சமாயின், எதிர்மறைப் பொருளைத் தான் தரும். கேளாச் செவி என்ற தொடரை எடுத்துக் கொள்வோம். கேளா என்பது செவியைக் கொண்டு முடிவதால் பெயரெச்சம். கேளாத என்பது பொருள். கேளாத என்ற சொல்லின் ஈறுகெட்டுக் கேளா என்று நிற்கின்றது. எனவே, இச்சொல் ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம் ஆகும். செய்யா என்னும் உரு வத்தில் நிற்கும் பெயரெச்சங்கள் உடன்பாட்டுப் பொருளில் வாரா.

ஆனால், இவ்வுருவத்திலுள்ள, உண்ணு, தின்னு, காணு என்பன போன்ற சொற்கள் வினைமுற்றாயின் எதிர்மறைப் பொருளைத்தான் தரும்.

உதாரணம்:—

புலிகள் புல் உண்ணு,

ஆடுகள் ஊன் தின்னு,

குருட்டுக்கண் காணு—என்பவை உதாரணங்கள். உண்ணு, தின்னு, காணு என்பவை முற்றிய வினைகள். எதிர்மறையே அவைகளுக்குரிய பொருள்.

செய்யா என்னும் உருவத்திலுள்ள சொல், வினை யெச்சமாயின் பெரும்பான்மை அது உடன்பாட்டுப் பொருளிலும், சிறுபான்மை எதிர்மறைப் பொருளிலும் வரும். பெயரெச்சமாயினும் சரி, வினைமுற்ருயினும் சரி, எதிர்மறைப் பொருள் ஒன்றில் தான் வரும். செய்யா என்னும் வாய்பாட்டிற்குரிய இலக்கணம் இது.

ஆனுல், வேறு உருவத்தில் இருக்கின்ற, சில முற்றிய வினைகள், உடன்பாடாக ஒருபோதும், எதிர்மறை யாக மறுபோதும் வரக்கூடும்.

இப்பொழிலின் எழிலைக் காணுய்,
இவ்வினிய உணவை உண்ணுய்,
நல்ல இக்கதையைக் கேளாய், - இவை உடன்பாட்டு வினைமுற்றுக்கள். காணுய், உண்ணுய், கேளாய் என்பவை, காண், உண், கேள் என்ற பொருளுடையவை.

கண்ணிலா நீ இதைக் காணுய்,
நோயுற்ற நீ இதை உண்ணுய்,
பயனிலாச் சொல் கேளாய்—என்பவை, எதிர் மறை வினைமுற்றுக்கள். காணமாட்டாய் உண்ணமாட்டாய், கேளாதே என்னும் பொருள் கொண்டவை.

எனவே, ஆய் என்ற விகுதியேற்று, வாராய், காணுய், பாராய், கேளாய் என்ற உருவத்திலுள்ள பொருள் முற்றிய வினைச்சொற்கள் மட்டுமே இவ்வாறு இருவிதப் பொருள்களிலும் வரும்.

செய்யிய என்ற உருவத்திலும் வினையெச்சங்கள் இருக்கின்றன. அவை செய்யிய என்னும் வாய்பாட்டு

வினையெச்சங்கள் என்று முன்னரே கூறியுள்ளோம். காணிய, தேடிய, கூடிய என்பவை, செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களுக்கு உதாரணம்.

காதலியைக் கூடிய வந்தேன்,
இழந்தபொருள் தேடிய வந்தேன்,
பொருட்காட்சி காணிய வந்தேன்—இவ்வுதாரணங்களிலுள்ள கூடிய, தேடிய, காணிய என்ற எச்சவினைகள், கூட, தேட, காண என்ற பொருளுடைய உடன் பாட்டு வினையெச்சங்கள்.

ஆனால், தேடிய பொருள், கூடிய காதலி என்று தொடர் அமையுமானால், அப்பொழுது அவை உடன் பாட்டுப் பெயரெச்சமாகின்றன. ஆகவே, ஒரே உருவத்தில் இருக்கின்ற சொற்கள், சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி, உடன்பாட்டுப் பொருளிலேயே, வினையெச்சமாகவும், பெயரெச்சமாகவும் வரக்கூடும் என்பது காண்க.

சாவான், வேவான் என்பன போன்ற சிலவினைச் சொற்கள் உடன்பாடு, எதிர்மறை ஆகிய இருவிதப் பொருள்களிலும் வருவதுண்டு. அதாவது, செத்துப் போவான், வெந்து போவான் என்று உடன்பாட்டுப் பொருளிலும், சாகமாட்டான், வேகமாட்டான் என்று எதிர்மறைப் பொருளிலும் இலக்கியங்களில் வழங்கி வரக் காண்கின்றோம்.

தன்வினை - பிறவினை

வினைச் சொற்கள் உடன்பாடு, எதிர்மறை என்ற வகையில் பிரிவதைக் கண்டோம். அவை, தன்வினை

என்றும் பிறவினை என்றும் மற்றோர் வகையிலும் பிரியலாம்.

வினை குறிக்கும் ஒரு காரியத்தை எழுவாயே செய்யுமானால், அப்பொழுது அது தன்வினையாகும்.

"இராமன் காட்டிற்குப் போனான்,
மாணவர் நாடகம் ஆடினர்,
மகன் வீட்டிற்கு வந்தான்."

இவ்வுதாரணங்களில் போனான், ஆடினர், வந்தான் என்ற வினைச்சொற்களில் அடங்கிய போதல், ஆடல், வருதல் ஆகிய காரியங்களைச் செய்தவர், அவைகளுக்கு எழுவாயாகிய, இராமன், மாணவர், மகன் ஆவர். ஆகவே, அவை தன்வினைச் சொற்கள்.

"பையன் பறவைகளை ஓட்டினான்,
குறவன் குரங்கை ஆட்டினான்,
தந்தை மகனை வருவித்தான்,"

இவ்வுதாரணங்களில், ஓடுதல், ஆடுதல், வருதல் ஆகிய காரியங்களைப் பையனும், குறவனும், மகனும் செய்யவில்லை. மற்று, அவர்கள், பறவை, குரங்கு, மகன் ஆகிய பிறரையே அக்காரியங்களைச் செய்யும்படி செய்தனர். எழுவாய், தானே காரியத்தைச் செய்யாமல், செய்விக்கின்றதைக் குறிக்கும் வினைகளுக்குப் பிறவினை என்று பெயர்.

"தசரதன் மகனைக் காடு போக்கினான்." என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இதில், காடு போகின்ற காரியம் எழுவாயாகிய தசரதன் செய்யவில்லை. மற்று, அக்காரியம் மகனால் செய்யப்பட்டது

தசரதன் மகனைப் போகும்படி செய்தான். எனவே, போக்கினான் என்பதுபிறவினை. இச்சொல்லிற்குத் தன்வினை, போனான் என்பது.

வா, போ, நட, உண், சொல், ஆடு முதலிய சொற்கள் தன்வினைக்கு உதாரணம். இவைகளுக்குப் பிறவினை வருமாறு:—

தன்வினை	பிறவினை
வா	வருவி
போ	போக்கு
நட	நடத்து
உண்	உண்பி
சொல்	சொல்வி
ஆடு	ஆட்டு

உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் பொதுவாய்ச் சில சொற்கள் வருதுவண்டு என்று கூறினோம். அவ் விதமே, தன்வினை பிறவினைகளுக்கும் பொதுவாக வரக் கூடிய சொற்கள் சிலவுள.

வானம் வெளுத்தது—வெளுத்தது என்பது தன் வினை. வெண்மை அடைதலாகிய காரி யத்தைச் செய்தது எழுவாயாகிய வானம். எனவே தன்வினை ஆகின்றது.

வண்ணான் துணியை வெளுத்தான்—இது பிற வினைக்கு உதாரணம். வெண்மை அடை வது வண்ணான் அல்லன். துணிவெண்மை யடையும்படி எழுவாயாகிய வண்ணான்

செய்தான். வெளுப்பு அடைவதாகிய காரியத்தைச் செய்தது பிறிதொன்று ஆதலின் பிறவினை வெளுத்தான் என்பது, இங்கே வெளுக்கும்படி செய்தான் என்ற பொருள் தந்து பிறவினை ஆகின்றது.

தன்வினையைப்போல் பிறவினையும் வினைமுற்றாக வேனும், வினையெச்சமாகவேனும், அல்லது பெயரெச்சமாகவேனும் இருக்கலாம்.

உதாரணம்:—

வினைமுற்று:—

சிறுவன் நடந்தான் - தன்வினை.
சிறுவன் குதிரையை
நடத்தினான்—பிறவினை.

வினையெச்சம்:—

அவன் ஓடிவந்தான் தன்வினை.
அவன் குதிரையை
ஓட்டிவந்தான்—பிறவினை.

பெயரெச்சம்:—

ஓடிய குதிரை—தன்வினை.
அவன் ஓட்டிய
குதிரை—பிறவினை.

செய்வினை—செயப்பாட்டு வினை

ஒரு காரியத்தை எழுவாய் தானே செய்வதானால் **செய்வினை** என்றும், பிறரைச் செய்விப்பதானால் **பிற**

வினை என்றும் கூறினோம். இன்னொரு விதத்திலும் காரியம் நிகழலாம். அதாவது ஒரு காரியத்தை எழுவாய் செய்யலாம். அல்லது அக்காரியம் எழுவாயின் பால் செய்யப்படலாம். ஒரு காரியத்தை எழுவாய் செய்யின் செய்வினை. எழுவாயின் பால் அக்காரியம் செய்யப்படின் செயப்பாட்டுவினை. செய்வினையை Active Voice என்றும், செயப்பாட்டு வினையை Passive Voice என்றும் ஆங்கிலத்தில் கூறுவர்,

"வேடன் புலியைக் கொன்றான்,"

இந்த வாக்கியத்தில் கொல்வதாகிய காரியத்தைச் செய்தவன் எழுவாயாகிய வேடன். எனவே, கொன்றான் என்பது செய்வினை.

"புலி வேடனால் கொல்லப்பட்டது" இது வாக்கியமானால், கொல்லுங் காரியம் வேடனால் புலியின் பால் இழைக்கப்பட்டது என்பது பொருளாகும். எழுவாயாகிய புலி அக்காரியத்தைச் செய்யவில்லை. எனவே, கொல்லப் பட்டது என்பது செயப்பாட்டுவினை ஆகின்றது. செயப் பாட்டுவினையானது, செய்யப்பட்டது, எழுதப்பட்டது, அடிக்கப்பட்டது, காணப்பட்டது, என்பனபோல் நிற்கும்.

செய்வினையைப்போல், செயப்பாட்டு வினைகளும் வினைமுற்றாக வேனும், அல்லது வினையெச்சமாக வேனும், பெயரெச்சமாக வேனும் இருக்கலாம்.

உதாரணம் :—

வினைமுற்று:—

கண்ணன் பாம்பைக் கொன்றான்—செய்வினை.
கண்ணனால் பாம்பு கொல்லப்பட்டது—
செயப்பாட்டுவினை

வினையெச்சம்:—

கண்ணன் பாம்பை அடித்துக் கொன்றான்—
செய்வினை.

கண்ணனால் பாம்பு அடித்துக் கொல்லப்பட்டது—
செயப்பாட்டுவினை.

பெயரெச்சம்:—

கண்ணன் அடித்த பாம்பு—செய்வினை.

கண்ணனால் அடிக்கப்பட்ட பாம்பு—செயப்பாட்டுவினை.

சாவான், வேவான் என்பன போன்ற சொற்கள் உடன்பாடு, எதிர்மறையாகிய இருவிதப் பொருள்களிலும் வருவதைக் கண்டோம். வெளுத்தான் என்பது போன்ற சொல், தன்வினை, பிறவினை இரண்டிற்கும் பொதுவாய் வருவதையும் பார்த்தோம். அவ்வாறே, செய்வினைக்கும், செயப்பாட்டுவினைக்கும் பொதுவாக வரக்கூடிய வினைகளும் சில உள.

உதாரணம்:—

புத்தகம் திருடிய பையன்—திருடுவதாகிய காரியத்தைச் செய்தவன் பையன். ஆதலால் செய்வினை.

பையன் திருடிய புத்தகம்—இவ்வாறு வாக்கியம் அமையின், செயப்பாட்டுவினையாய்விடும். திருடிய காரியத்தைப் புத்தகம் செய்யவில்லை. அக்காரியம் புத்தகத்தின்பால் இழைக்கப்பட்டது. திருடப்பட்ட புத்தகம் என்று வாக்கியம் பொருள் தருவதால் செயப்பாட்டுவினை.

சோறு உண்டபையன்—உண்ணுதலைச் செய்தவன் பையனுதலால் செய்வினை.

பையன் உண்ட சோறு—பையனால் உண்ணப் பட்ட சோறு என்று பொருள் படுவதால் செயப்பாட்டுவினை.

எழுதிய, படித்த, கொன்ற என்பன போன்ற பெயரெச்சங்கள், இவ்வாறு செய்வினையாகவும் செயப்பாட்டு வினையாகவும் வரக்காணலாம்.

இதுவரை, வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், எதிர்மறை உடன்பாடு, தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை ஆகியவைகளைப் பற்றி அறிந்தோம். தன் வினைகள் எல்லாம் செய்வினைகளே. ஆனால், பிறவினை வேறு; செயப்பாட்டுவினை வேறு. எழுவாய் ஒரு காரியத்தைத் தானே செய்யாமல் பிறரைச் செய்விப்பது (பிறர் செய்யுமாறு செய்வது) பிறவினை என்று கூறினோம். ஆனால், எழுவாய் காரியத்தைத் தானே செய்யாமல், அதைத் தன்மேல் செய்வித்துக் கொள்வது செயப்பாட்டுவினை. பிறவினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் இடையுள்ள இந்த வித்தியாசத்தை நேயர்கள் மறத்தலாகாது.

வேடன் யானையைக் கொன்றான்—கொல்கின்ற காரியத்தை எழுவாயாகிய வேடன் செய்தான்—தன்வினை.

வேடன் யானையைக் கொல்வித்தான்—வேடன் தானே யானையைக் கொல்லாமல் பிறரைக் கொண்டு அக்காரியத்தை நடத்திக் கொண்டான்—பிறவினை.

யானை வேடனால் கொல்லப்பட்டது இந்த வாக்கியத்தில் யானை எழுவாய். எழுவாய் எதையும் கொல்லவில்லை. கொல்லுங் காரியம் எழுவாயின்மேல் இழைக்கப் பட்டது. அதாவது கொல்லுதலாகிய காரியத்தை எழுவாய் தன்மேல் செய்வித்துக் கொண்டது. எனவே செயப்பாட்டு வினை.

பிறவினையோடு செயப்பாட்டு வினையும் சேர்ந்து வரும்படி வாக்கியங்கள் அபூர்வமாய் அமைக்கப்படுவதும் உண்டு.

"யானை அரசனால் கொல்விக்கப் பட்டது.
கோவில் அரசனால் கட்டுவிக்கப் பட்டது."

என்பவை அதற்கு உதாரணங்கள். இந்த வாக்கியங்களில் எழுவாய் யானையும் கோவிலும் ஆகும். யானையைக் கொல்லுதலையும், கோவிலைக் கட்டுதலையும் அரசன் செய்யவில்லை. மற்றவர்களைக்கொண்டு அக்காரியங்களை அவன் செய்வித்துக் கொண்டான். பிறவினையோடு செயப்பாட்டு வினையும் இவ்வுதாரணங்களில் இணைந்திருப்பது காண்க.

செயப்படுபொருள் குன்றியவினை

வினைச் சொற்கள் முற்று, எச்சம் என்றும், தன்வினை, பிறவினை என்றும், செய்வினை, செயப்பாட்டு வினை என்றும் பலவிதப் படுதலைக் கண்டோம். அவை, தெரிநிலை வினை, குறிப்பு வினை என்று வேறோர் விதத்திலும் வேறுபடும் என்றும் முன்னரே கூறியுள்ளோம்.

உண்டான், பாடினான், ஆக்கினான், என்பனபோல் எழுவாய், செய்தொழில், காலம், இடம், கருவி முதலிய

வைகளைக் காட்டி நிற்பது தெரிநிலை எச்சவினைகளைப் போலல்லாமல், முற்றிய பொருளைக் குறிப்பால் தெரிவிப்பவை குறிப்புவினை. "வலியது கோதண்டம், சிறியது அவன் கை, அவன் வாளன்," என்பவை உதாரணங்கள். இவைகளைப் பற்றி முன்னரே விரிவாகக் கூறியுள்ளோம். இனி, வினைச் சொற்கள், செயப்படுபொருள் குன்றிய வினை என்றும் செயப்படுபொருள் குன்றாதவினை என்றும் இரு வகைப் படுவதைப் பார்ப்போம்.

செயப்படு பொருள் குன்றிய வினையை ஆங்கிலத்தில் Intransitive Verb என்று அழைப்பர்.

" மரம் வளர்ந்தது,
கை ஒடிந்தது,
நீர் ஓடியது,"

என்பவை செயப்படுபொருள் குன்றிய வினைக்கு உதாரணங்கள். இவ்வினைகள் செயப்படு பொருளின் துணையில்லாமல் நிற்கவல்லவை. "எதை வளர்ந்தது? எதை ஒடிந்தது? எதை ஓடியது?" என்று கேட்க இயலாதபடி வினைச்சொற்கள் நிற்பதால், செயப்படுபொருள் குன்றிய வினைகள் ஆகின்றன.

செயப்படுபொருள் குன்றாத வினை

செயப்படுபொருள் குன்றாத வினையை ஆங்கிலத்தில் Transitive Verb என்று அழைப்பர்.

"மரம் பழங்களைத் தந்தது,
கை வாளை ஏந்தியது,
குயவன் சட்டியைச் செய்தான்,

என்பவை செயப்படுபொருள் குன்றாத வினைகளுக்கு உதாரணம். "மரம்எதைத் தந்தது? கை எதை ஏந்தியது? குயவன் எதைச் செய்தான்?" என்று கேட்டால், முறையே பழம், வாள், சட்டி என்ற விடை ஏற்படும். எனவே, தந்தது, ஏந்தியது, செய்யான் என்ற வினைகள் செயப்படு பொருள் குன்றாத வினைகள் ஆகின்றன.

முதல்வினை—சினைவினை

சினை என்றால் உறுப்பு. பலசினைகளை உடைய முழுப்பொருள் முதல் எனப்படும். இலை என்பது மரத்தின் ஓர் உறுப்பைக் குறிப்பதால் சினை ஆகின்றது. கிளை, இலை, மலர், காய், பழம் முதலிய சினைகளைக் கொண்ட மரம், முதல் பொருளாகின்றது.

"மரம் ஆடியது." என்னுங்கால், ஆடிய காரியத்தைச் செய்தது முதற் பொருளாகிய மரம். எனவே, ஆடியது என்பது முதல்வினை ஆகும்.

"இலை ஆடியது," என்போமாயின், ஆடிய காரியம் மரத்தின் சினையான இலையாற் செய்யப்பட்டதால், ஆடியது என்பது சினைவினை.

இராமன் நீரில் ஆடினான்—ஆடினான் என்னும் வினை முதல்வினை. கண் கை கால் முதலிய சினைகளை உடைய முழு மனிதனாகிய இராமன் நீராடியதைக் குறிப்பதால் முதல்வினை ஆகின்றது.

கண் அழுதது—அழுத காரியம் கண்ணாகிய உறுப்பால் செய்யப் பெற்றதால் இங்கே அழுதது என்பது சினைவினை.

புலி பாய்ந்தது—முதல்வினை
குழந்தை ஆடியது—முதல்வினை
கை ஒடிந்தது—சினைவினை
பூ அலர்ந்தது—சினைவினை

நடந்தது, அழுதது, சிரித்தது என்பன போன்ற வினைகள், கண், கால், வாய் போன்ற சினைகளால் செய்யக் கூடிய காரியத்தைக் குறித்தால் சினைவினை. அவன் அழுதான், அவள் சிரித்தாள், மரம்பூத்தது என்னுங் கால் சினைவினைகள் முதல்வினைகளாய்விடும்.

யாம் இதுவரை கூறியவை வினை முற்று, வினை யெச்சம், பெயரெச்சம், வினையாலணையும்பெயர் ஆகியவைகளுக்கெல்லாம் உரியவை. இனி, வினை முற்றிற்கு மாத்திரம் உரிய பிரிவுகள் சிலவுள.

இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற கால வேற்றுமையால் வினைமுற்றுக்கள் வேறுபடும். தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற இடவேற்றுமை யாலும் அவை வேறுபடும்.

இவைகளன்றி ஏவல் வினையென்றும், வியங்கோள் வினை என்றும் சிலவினைகள் இருக்கின்றன. வா, போ, உண், பேசு, நட என்பனபோல் முன்னிலையிடப் பெயரை நோக்கிக் கட்டளையிடல் ஏவல். இன்னது செய்ய வேண்டும் என்று விருப்பத்தை மரியாதையாகத் தெரி வித்தல் வியங்கோள். வாழ்க, உண்க, செல்க என்பவை வியங்கோள் வினைக்கு உதாரணம்.

இனி, முற்றிய வினைவகைகளுக் குரிய விகுதிகளைத் தருவோம்.

வினைமுற்று விகுதிகள்

தன்மை ஒருமை:—

அன், என், ஏன், அல் என்பவை தன்மை ஒருமை விகுதிகள்.

இவற்றில், அல் விகுதி எதிர்காலத்திற்கு உரியது. அன், என், ஏன் என்பவை முக்காலத்திற்கும் பொது.

கு, டு, து, று என்பவைகளும் தன்மை ஒருமை விகுதியாதல் உண்டு. உண்கு, உண்டு, வந்து, வருது, சென்று, சேறு என்பவை உதாரணங்கள். (உண்பேன், உண்டேன், வந்தேன் வருவேன், சென்றேன், செல்வேன் என்னும் பொருளன அவை.)

தன்மைப் பன்மை:—

அம், ஆம், எம், ஏம், ஓம். என்பவை தன்மைப் பன்மை விகுதிகள்.

கும், டும், தும், றும் என்பவைகளும் தன்மைப் பன்மை விகுதியாதல் உண்டு.

உண்கும், உண்டும், வந்தும், வருதும், சென்றும், சேறும் என்பவை உதாரணங்கள்.

முன்னிலை ஒருமை:—

ஐ, ஆய், இ என்பவை முன்னிலை ஒருமை விகுதிகள். இவைகளில் இகர விகுதி எதிர்காலத்திற்கு உரியது.

முன்னிலைப் பன்மை:—

இர், ஈர் என்பவை முன்னிலைப் பன்மை விகுதிகள். கள் என்பதையும், வந்தீர்கள் என்பதுபோல் விகுதிமேல் விகுதியாய்ச் சேர்ப்பதுண்டு.

படர்க்கை—ஆண்பால்:—

அன், ஆன் என்ற இரண்டும் ஆண்பால் படர்க்கை விகுதிகள். இவை முக்காலத்திற்கும் உரியவை.

படர்க்கை—பெண்பால்:—

அள், ஆள் என்ற இரண்டும் பெண்பால் படர்க்கை விகுதிகள். முக்காலத்திற்கும் உரியவை.

படர்க்கை—பலர்பால்:—

அர், ஆர், ப, மார் என்பவை பலர்பால் படர்க்கை விகுதிகள். நடப்ப என்பது பகர விகுதியேற்ற பலர் பால் படர்க்கைக்கு உதாரணம். கொண்மார் என்பது, மார் விகுதியேற்ற பலர்பால் படர்க்கைக்கு உதாரணம் கொள்வார் என்பது பொருள்.

ஒன்றன்பால் படர்க்கை:—

து, று என்ற இரண்டும் ஒன்றன்பால் விகுதிகள். து விகுதி முக்காலத்திற்கும், று விகுதி இறந்த காலத்திற்கும் உரியன.

பலவின்பால் படர்க்கை:—

அ, ஆ என்ற இரண்டும் பலவின்பால் விகுதிகள். ஆ விகுதி எதிர்மறையிலேதான் வரும்.

ஏவல் ஒருமை:—

ஆய், இ என்பவை ஏவலொருமை விகுதிகள், விகுதி பெருமல், உண், வா, செய் என்றும் நிற்கலாம்.

ஏவல் பன்மை:—

மின், ஈர், உம் என்பவை ஏவல் பன்மை விகுதிகள். உம் விகுதியோடு கள் என்பதும் விகுதிமேல் விகுதி

யாய்ச் சேர்ந்து, செய்யுங்கள், உண்ணுங்கள் என்று நிற்பதுமுண்டு.

இ, ஏ, அல், ஏல், என்பவை எதிர்மறை ஏவல் ஒருமை விகுதிகள். மின், இர், ஈர், என்பவை எதிர்மறை ஏவல் பன்மை விகுதிகள். செய்யன்மின், செய்யாதீர் என்பவைகளில், அல், ஆ என்பவை எதிர்மறை இடைநிலைகளாகும். கள் என்பதும், கொள்ளாதீர்கள் என்பது போல் விகுதிமேல் விகுதியாக வருவதுண்டு.

வியங்கோள்:—

க, ய, ர், அ, அல் என்பவை வியங்கோள் விகுதிகள். மரியாதையாக ஏவல், வேண்டிக்கொள்ளல், வாழ்த்தல் முதலியன வியங்கோளுக்குரிய பொருள். வாழ்க, வாழியர், உண்க, வெல்க, சிறக்க, வாழியர் முதலியன உதாரணங்கள்.

அல் விகுதி எதிர்மறைப் பொருளை உணர்த்தும்.

உண்ணல், செல்லல் என்பவை உதாரணங்கள். உண்ணற்க, செல்லற்க என்பவைகளில், அல் என்பது எதிர்மறை இடைநிலையாய் நிற்கின்றது.

வரவும், எழுதவும், சொல்லவும் என்பவை உலக வழக்கிலுள்ள வியங்கோள் வினைமுற்றுக்கள். உம் என்பதை விகுதியாக அவை பெற்றுள்ளன.

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் வேறுபாடு உளது. ஏவல், முன்னிலையிடத்தில் கட்டளைப்பொருளில் வரும். வியங்கோள், வாழ்த்தல், பிரார்த்தித்தல் முதலிய பொருள்களில் ஐம்பால் மூவிடங்களிலும் வரும். ஏவலில், ஒருமை பன்மை என்ற வேறுபாடு உண்டு. அவ்வேறுபாடு வியங்கோளில் இலது.

யாம் மேலே கூறியவைகள் எல்லாம் நேயர்கள் அறிந்தவையே. ஆதலால், உதாரணங்கள் காட்டல் மிகை என்று எண்ணுகின்றோம். நேயர்களே உதாரணங் களை அமைத்துக்கொள்ளல் நல்ல பயிற்சி தரும். வினையைப் பற்றி அறியவேண்டிய அளவு கூறி விட்டோம். இடைச்சொல் உரிச்சொற்களை இனிப் பார்ப்போம்.

4. இடைச் சொல்

தமிழ் இலக்கணத்தில் சொற்கள் நான்கு வகைப் படும். அவை, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல், என்பவை ஆகும். எழுத்துக்கள், தீ, பூ, வா, போ, தா, என்பனபோல் தனியாக நின்றோ, அல்லது புலி,கரடி, கம்பம், பேசினன் என்பனபோல் இரண்டும், மூன்றும், நான்கும் அதற்கு அதிகமான எழுத்துக்களும் தொடர்ந்தோ பொருள் தருமானல், அது *சொல்அல்லது பதம் ஆகும் என்று முன்னரே கூறியுள்ளோம்.

ஒரு எழுத்து, தீ, கோ, என்பனபோல் தனித்து நின்று பொருள் தருமானல், அப்பொழுது அதை ஓரெழுத்து ஒருமொழி என்று அழைப்பர். ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து பொருள் தருமானல், அப்பொழுது அது எழுத்துத் தொடர்மொழி என்று அழைக்கப்படும்.

சொல்லென்று ஒன்று இருந்தால், அதற்கு ஒரு பொருள் இருத்தல் அவசியம். இராமன், சோலை, கிளி நகரம், அழகு, சிவப்பு, என்று ஒரு சொல் ஒன்றின் பெயரைக் குறிக்குமானல் பெயர்ச்சொல். வா, போ, நின்றுன், அடிப்பான், என்று தொழிலைக் குறிக்குமானல் வினைச்சொல். இவைகளைப் பற்றி முன்னரே கூறி யுள்ளோம்.

பெயர்ச் சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் தமக்கென்ற ஒரு பொருள் உண்டு. தமிழ் இலக்கணத்தில்

இடைச்சொல் என்ற ஒருவகைச் சொற்கள் இருக்கின்றன. கு, த், ஓ, ஏ, உம், அன், அர், மன், இன், கொல் என்பன போன்ற சொற்கள் இடைச்சொற்கள். இவைகளுக்கும் பொருள் உண்டு. பொருள் இல்லையேல், இவை சொல் என்ற பெயர் பெறுவதற்கு இல்லை. ஆனல், பெயர் வினைச் சொற்களுக்கும் இவ்விடைச் சொற்களுக்கும் வித்தியாசம் உண்டு. பெயர்ச்சொல்லும், வினைச் சொல்லும் தனியே நின்று பொருள் தரும் இயல்பின. இடைச்சொல்லிற்கோ, தனியே நின்று பொருள் தரும் சக்தி இல்லை. அது ஒரு பெயர் அல்லது வினையைச் சார்ந்து நின்றே பொருள் உணர்த்த வேண்டியதா கின்றது, எனவே, அதற்குத் தனியிடம் இல்லை. ஒரு பெயர் அல்லது வினையின் அகத்திலாவது புறத்திலாவது இடங்கொண்டு பொருள் உணர்த்துகின்றபடியால், அது இடைச்சொல் என்ற பெயர் பெறுவதாயிற்று. இடை என்பதற்கு நடுவு என்பதோடு இடம் என்ற பொருளும் உண்டு. 'அவ்விடை ஓடினன்' என்ருல், 'அவ்விடம் ஓடினன்' என்பது பொருள்.

தமிழில் அனேக இடைச் சொற்கள் இருக்கின்றன. வேற்றுமை உருபுகள், விகுதி, இடைநிலை, சாரியை, உவம உருபுகள், ஏ, ஓ, மன், உம் முதலியன இடைச்சொற்கள். அவை அசை நிலையாகவும், இசை நிறைக்கவும், அச்சம், விரைவு, இரக்கம், வியப்பு, தெரிநிலை, தேற்றம், ஐயம் முதலிய பொருள்களை உணர்த்தவும் வரும். இனி, அச் சொற் களில் சிலவற்றை எடுத்துக்கொண்டு, அவை உணர்த் தும் பொருள்களை அறிவோம்.

ஓகார இடைச் சொல்.

ஓ என்பது ஓர் இடைச் சொல். அதற்குத் தனியே ஒரு பொருளும் இல்லை. ஆனல், அது பெயர் வினை

களோடு சேர்ந்து பல பொருள்களைத் தரவல்லது. அவைகளைப் பார்ப்போம்.

உனக்கு மகன் உண்டோ.

இராமனே இதைக் கொடுத்தான்—இவ்வாக்கியங்களிலுள்ள ஓகாரம் ஒரு விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு உதவுகின்றது—எனவே, இதன் பொருள் வினா.

உனக்குச் சம்பளம் தூங்குவதற்கோ.

படிப்பதற்கோ அவன் வந்தான்—"தூங்குவதற்கு அன்று சம்பளம்; வேலை செய்வதற்காகக் கொடுக்கப்படுகின்றது," என்றும், "அவன் வந்தது படித்தற்கு அன்று, விளையாடுவதற்கு," என்றும் வாக்கியத்தில் இல்லாத கருத்துடைய சில சொற்களை ஓகாரம் தருகின்றது. இவ்வாறு ஒழிந்த சொற்களை இசைப்பதால் ஓகாரத்தின் பொருள் ஒழியிசை.

இது பொன்னே பித்தளையோ.

வந்தது இராமனே கிருஷ்ணனே—"பொன்னு பித்தளையா," என்றும் "வந்தவன் இராமனு கிருஷ்ணனு?" என்றும் சந்தேகத்தைத் தரலால் ஓகாரத்தின் பொருள் ஐயம் ஆகின்றது. ஐயம் என்றால் சந்தேகம்.

ஓஓ இது புண்ணியம்.

ஓஓ இவன் பெரியன்—"இது சிறந்த புண்ணியத்தைத்தருவது," என்றும் "இவன் மிகப்

பெரியவன்,'' என்றும் பொருள் தருவ வதால், இவ்வோகாரத்தின் பொருள் உயர்வு சிறப்பு ஆகின்றது. சிறப்புப் பொருள் என்றும் கூறுவதுண்டு.

ஓ ஓ இவன் பாதகன்

ஓ ஓ இது பாவம்—இழிவு சிறப்புப் பொருள். இழிவுப் பொருள் என்றும் இதை அழைப்பதுண்டு.

கர்ணனே கொண்டான்

அரிச்சந்திரனே பொய் சொல்வான்—''கர்ணன் கொள்ளான் ;அரிச்சந்திரன் பொய் சொல் வான்,'' என்ற பொருள் தருவதால், இவ் வோகாரத்தின் பொருள் எதிர்மறை.

ஆணே அன்று; பெண்ணே அதுவுமன்று

வீரமோ அன்று; விதியோ அதுவுமன்று—'ஆண் தன்மையும் பெண்தன்மையும் இல்லாத அலி'' என்றும், ''வீர மாகாததோடு முறை யான ஒழுக்கமும் அன்று.'' என்றும் பொருள் தருவதால் ஓகாரத்தின் பொருள் தெரிநிலை.

சொல்லுவன் கேண்மினோ—இங்கே ஓகாரத்திற்கு ஒரு பொருளும் இலது. பயனின்மைப் பொருளதான இவ்வோகாரம் அசைநிலை. ஓசை நயங்கருதி வரின் இசைநிறை எனப்படும்.

இப்படி ஓகாரத்திற்குப் பல பொருள்கள் உண்டு. நோயாளி ஒருவன், "இரவு விடியாதோ!" என்பானாயின், இரவின் கண் அவன் படும் துன்பத்தை ஓகாரம் தெரிவிப்பதாகும். எனவே இரக்கப் பொருளது ஆகின்றது. "இந்நால் வரில் இவனோ திருடினான்" என்ற வாக்கியத்தில், "திருடினவன் இவன்," என்று ஒருவனைப் பிரித்துக் குறிப்பதால் ஓகாரம் பிரிநிலைப் பொருளதாகின்றது.

ஏகார இடைச்சொல்

ஏகார இடைச்சொல், சொல்லோடு சேர்ந்து ஐந்து விதப்பொருள்களில் அதிகமாய் வரக் காண்கின்றோம்.

இவனே என்மகன்

திருடியவன் இவனே—இந்த உதாரணங்களில் ஏகாரம் மற்றவர்களிலிருந்து ஒருவனைப் பிரித்துக் காட்டுவதால் பிரிநிலை ஏகாரம் ஆகும்.

வந்தவன் இராமனே—வந்தவன் இராமனா? என்ற பொருளைத் தருங்கால் வினாப் பொருளதாகின்றது. சாதாரணமாய், இராமனோ? என்று வினவுவதுதான் வழக்கம். செய்யுள்களில் ஏகாரம் வினாவைக் குறித்து நிற்பதுண்டு.

நாலேகால் ரூபாய்—நாலு ரூபாயும் கால் ரூபாயும் என்று கணக்கிடுவதற்கு ஏகாரம் உதவுவதால், இதன் பொருள் எண்ணுப் பொருள்.

பொய் புகலின் புழுக்குமே வாய்.

தூயவர்க்கு உண்டே மறுமை—"பொய் புகலின் வாய் புழுப்பது நிச்சயம்," என்றும், "தூயவர்க்கு மறுமை நிச்சயம்" என்றும் ஏகாரம் வற்புறுத்தும் கருத்தினது. ஆதலால், தேற்றம் இதன் பொருளாகின்றது.

விழித்தாமரைபூத்த மண்டபத்தே—இதனிலுள்ள ஏகாரம், யாம் மேலே கூறிய எப்பொருளிலும் வரவில்லை. செய்யுள் இசையை நிறைக்க வந்த ஏகாரம் இது. இதன் பொருள் இசை நிறை.

இலக்கியங்களில் வேறுசில பொருள்களிலும் ஏகாரம் வரக்காண்கின்றோம். "நானே கொண்டேன்?" என்பது சில விடங்களில் "நான் கொண்டிலன்," என்ற எதிர்மறைப்பொருளை உணர்த்தி நிற்பதும் உண்டு. "ஏ ஏ பேதை!" என்னுங்கால் ஏகாரம் இகழ்ச்சிப் பொருளதாகின்றது.

உம்மை இடைச்சொல்

உம்மை ஓர் இடைச் சொல். இதை ஆங்கிலத்தில் Conjunction என்பர். இது பெயர் வினையோடு சேர்ந்து பலபொருள்களை உணர்த்த வல்லது. அவைகளைப் பார்ப்போம்.

சேரனும் சோழனும் வந்தனர்—யார் வந்தவர் என்று எண்ணிக் கணக்கிடுவதற்கு உபயோகப் படுவதால் இது எண் உம்மை.

கலைமகளை வழிபடின் கல்லும் கவிபாடும்—இது கலைமகள் வழிபாட்டின் உயர்வைச் சிறப்பித்துச் சொல்லுவதால், உயர்வு சிறப்பு உம்மை ஆகின்றது. "கழுதும் வழிதேடும் கங்குல்," என்பதிலுள்ள உம்மையும் உயர்வு சிறப்பினதே. எப்படிப் பட்ட இருட்டிலும் சஞ்சரிக் கும் பேய்களும் வழிதேடிய தென்றால், அவ்விருள் எவ்வளவு அதிகமாய் இருக்கவேண்டும் என்பதை உம்மை காட்டுகின்றது.

என்கையில் ஒரு காசும் இல்லை.

புலையனும் விரும்பாத யாக்கை,—இவைகளிலுள்ள உம்மை இழிவு சிறப்பு உம்மை. "மிகக் குறைவான மதிப்புடையது காசு. அதுவும் என்கையில் இல்லை," என்று இன்மையாகிய குறைவின் சிறப்பை முன்னது காட்டுகின்றது. யாக்கை யின் இழிவைப் பின்னது காட்டு கின்றது. "முகங்கடுத்து இடுஞ் சோற்றை நாயும் தின்னாது," என் பதும் இழிவு சிறப்பிற்கு உதாரண மாகும்.

இந்த உம்மை எச்சப் பொருளிலும் வரும். எச்சம் என்றால் குறைவு. ஒரு குறைவு நிறைவதைக் குறிக்க வரும்போது, உம்மை எச்ச உம்மை என்ற பெயர் பெறு கின்றது. இந்த எச்சவும்மை, இறந்தது தழுவிய எச்ச வும்மை என்றும், எதிரெதிர் தழுவிய எச்சவும்மை என்றும் இருவிதப்படும்.

இராமனும் வந்து விட்டான்—இந்த உம்மை எச்சவும்மை. "வரவேண்டியவர்களில் இராமன் தவிர மற்றவர்கள் எல்லோரும் வந்து விட்டனர். இராமன் வாராமை குறையாய் இருந்தது. இதோ அவனும் வந்துவிட்ட படியால் அக்குறை நிறைந்தது," என்று தெரிவிப்பதால் உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை ஆகின்றது.

பொறுங்கள் கிருஷ்ணனும் வருவான்—கிருஷ்ணன் வாராத குறை எதிர் காலத்தில் நிறைந்துவிடும் என்று குறிப்பதால், உம்மை, எதிரெதிர் தழுவிய எச்சவும்மை ஆகின்றது.

இவைகள் அல்லாமல், எதிர்மறை, ஐயம், முற்று, ஆக்கம் முதலிய பொருள்களும் உம்மைக்கு உண்டு. இப்பொருள்களுக்கு இடையுள்ள வித்தியாசம் மிகமிக நுண்ணியது. "மூவேந்தரும் வந்தனர்," என்பதை முற்றும்மைக்கு உதாரணமாகக் காட்டுவர். இதை எச்சவும்மை யாகக் கொள்ளுதலுங் கூடும், "பாலும் மருந்தாயிற்று" என்பதிலுள்ள உம்மை ஆக்கத்திற்கு உதாரணமாகும். பால், உணவாவதோடு, மருந்துமாகும் என்ற பொருட் குறிப்பினை உடையது உம்மை. "கிருஷ்ணன் வருவதற்கும் உரியன்," என்பதிலுள்ள உம்மை வாராமைக்கும் உரியன் என்று பொருள் தரக்கூடுமாதலால், எதிர்மறைப் பொருளுக்கு உதாரணமாகின்றது. "ரூபாய் ஐந்தாயினும், பத்தாயினும் கொடு," என்பது ஐயத்திற்கு உதாரணமாகக் காட்டப்படுகின்றது. இவைகளெல்லாம் அவ்வளவு முக்கியமானவை அல்ல. நாம் மேலே கூறிய எண், சிறப்பு, எச்சவும்மைகளைப் பற்றி நேயர்கள் தெரிந்துகொண்டால் போதும்.

"வெங்கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை
மங்கலநாள் காண வருவான்போல்......
ஏறினன்தேர்."

என்பது ஒரு வெண்பாச் செய்யுள். "வெங்கதிரோன் தானும்" என்பதிலுள்ள உம்மை எப்பொருளது என்று பார்ப்போம். "வரவேண்டியவர் எல்லோரும் வந்து விட்டனர். சூரியன் வருகையே குறையாக இருந்தது. அவனும் வரவே, அக்குறை தீர்ந்து விட்டது" என்று பொருள் கொள்ளின், அது இறந்தது தழுவிய எச்சவும்மை ஆகும். "அந்த மங்கல நாளைக் காணத் தேவர் கணத்தைச் சேர்ந்தவனை சூரியன்கூட வந்து விட்டான்," என்று பொருள் கொள்ளின், அது உயர்வு சிறப்பு உம்மை ஆகும். இலக்கியங்களை ஓதி அனுபவிப்பதற்கு உம்மை முதலிய இடைச் சொற்களின் இலக்கண அறிவு மிக மிக அவசியமாகும்.

"குதிரை ஓடும், கிளிபேசும், பேசும்கிளி, படிக்கும் பையன்," என்பன போன்ற இடங்களில் உம்மை வினை முற்றாகவும், பெயரெச்சமாகவும் வந்துளது. விகுதிகளாய் அமைந்து வினையை நடத்திச்செல்லும் இவ்வும்மைகளுக்கு நேயர்கள் பொருள்தேடி மயங்கலாகாது.

ஒலி, அச்சம், விரைவு, முதலியவைகளைக் குறிப்பால் உணர்த்தும் இடைச்சொற்கள் சிலவுள.

கோவென, சோவென, படபடவென, சளசளவென, என்பனபோன்றவை, ஒலியைக் குறிப்பால் உணர்த்தும் இடைச்சொற்கள்.

துண்ணென, திடுக்கென, துணுக்கென, என்பன போன்றவை, அச்சத்தைக் குறிக்கும் இடைச்சொற்கள்.

பொள்ளென, பொருக்கென, ஞரேலென என்பன போன்றவை, விரைவினை உணர்த்தும் இடைச்சொற்கள்.

அம்ம என்பது, வியப்பொடு, இரக்கத்தையும் உணர்த்த வல்லது.

கொல், என்பது வினாப்பொருளைத் தரும் இடைச் சொல், "உண்டனைகொல்? மீன்பொதிந்த விசும்பு என்பது என்கொலோ?" என்பவை உதாரணம். "உண்டாயா? நட்சத்திரங்கள் அடர்ந்து இருக்கின்ற ஆகாயம் என்று சொல்வது என்ன காரணத்தாலோ?" என்ற பொருளை அது முறையே தரும். கொல்லுந் தொழிலைக் குறித்து நிற்கும்போது அது வினைச்சொல்லாகும். "இப்பாம்பைக் கொல்" என்னும்போது வினை முற்றாகின்றது.

மன் என்பது ஓரிடைச்சொல். பொருள் ஒன்று மின்றி அசை நிலையாய்ச் செய்யுள்களில் வரும் என்ற அளவு தெரிந்து கொண்டால் போதும். இதற்கு ஒழியிசை, ஆக்கம், மிகுதி, நிலைபேறு முதலிய பொருள்கள் உண்டு என்பர்.

கூறியதோர் வாள்மன்—ஒரு காலத்தில் கூராயிருந்த வாள் இப்பொழுது கூர்மை மழுங்கியதாயிற்று என்ற பொருளை, மன் என்பது குறிப்பதால் அதன் பொருள் ஒழியிசை ஆகின்றது.

பண்டு காடுமன்—இது ஆக்கத்திற்கு உதாரணம். காடாயிருந்தது இப்பொழுது நாடாய் இருக்கின்றது என்ற பொருளை மன் குறிப்பதால் ஆக்கம்,

எந்தை அருளும்மன்—"என் தந்தை எனக்கு வேண்டியதை வேண்டியபடி உபகரிப்பான்," என்னும் பொருளது மன். எனவே மிகுதிப் பொருளதாகின்றது.

மன்னியது புரிமோ—"நிலையில்லா இவ்வுலகத்தில் நிலையுடைய நல்ல கருமங்களைச் செய்யுங்கள்" என்பது பொருள். எனவே இதன் பொருள் நிலைபேறு. இப் பொருள் வேறுபாடுகளை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. அசை என்ற வரையில் தெரிந்து கொண்டால் போதும்.

தில் என்பதும் ஓரிடைச் சொல். சங்கநூல்களில் இது அதிகம் பயின்று வரக்காணலாம். விழைவு, காலம், ஒழியிசை இதன் பொருள் என்பர். "பெறுகதில்—பெற விரும்புவாய், அறிகதில் அறிக; வருகதில்—வந்தால்." என்று சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி தில் என்பது பொருள் உணர்த்தி நிற்கும்.

முன், பின்—இடம், காலமாகிய பொருள்களை இவ் விடைச்சொற்கள் தரும்.

இனி—இடம் காலம் ஆகியவற்றின் எல்லையைக் குறிக்க வரும்.

தொறும், தோறும்—தொழில் இடங்களின் பன்மைப் பொருளைத் தருபவை. "ஊர் தொறும், மனை தோறும்," என்பவை உதாரணம்.

ஆவது, ஆதல், ஆயினும்—விகற்பப் பொருளைத் தரும் இடைச்சொற்கள் இவை. "ஆறுவது ஐந்தாவது அல்லது ஆறுதல், ஐந்தாதல் அல்லது ஆறாயினும் ஐந்தாயினும் கொடு," என்பது உதாரணம்.

அந்தோ, ஐயோ, ஆ—இரக்கப் பொருளன.

அம்மா, ஆ, ஓ—வியப்பு.

வாளா, சும்மா, கொன்னே—பயனின்மைப் பொருளைத் தருபவை.

சீ, சீச்சீ—இகழ்ச்சி.

ந—உயர்வுப்பொருளைத் தரும் இடைச்சொல். "நப்பின்னை, நக்கீரன்," என்பவை உதாரணம்.

மற்று—அசைநிலை. வினைமாற்றுப் பொருளையும் தரும்.

மற்றை—இனப்பொருள். ஓரினமான இரண்டு பொருள்களில், "ஒன்றை வேண்டாம் என்று கூறி, மற்றையதைக் கொண்டுவா" என்னுங் கால், மற்றை என்பது இனத்தைக் குறிப்பது வெளிப்படை. அதுவும் மற்று என்பதைப்போல், ஒருதனிச் சொல்லே.

ஒடு, தெய்ய—இசைநிறை ஓசை நயங்கருதி இடம் பெறும் இடைச்சொற்கள்.

அந்தில், ஆங்கு—அசைநிலையொடு, இடமும் அதன் பொருள்.

மா—வியங்கோளிடத்து வரும் அசைச் சொல். இதை உண்மா (உண்க), என்பது உதாரணம்.

மியா, மதி, அத்தை போன்ற சில இடைச்சொற்கள் இருக்கின்றன. முன்னிலையிடத்து வரும் அசைகள் அவை. கேண்மியா (கேள்), அருள்மதி (அருள்), சொல்லியரத்தை (சொல்), என்பன உதாரணம்.

இடைச்சொல் பற்றி இவ்வளவு தெரிந்து கொண்டால் போதும். இனி உரிச்சொல்லைப் பார்ப்போம்.

5. உரிச்சொல்

உரிச்சொல் என்பது பண்பு, சிறப்புக்களை உணர்த்தும் ஒரு சொல். அதற்கென்று ஒரு தனியான நிலை இல்லை. பெயர் வினைகளுடன் விட்டுநீங்கா உரிமை கொண்டு, அவைகளின் குணம் தொழிலாகிய பண்பினை உயர்த்தியும் சிறப்பித்தும் நிற்கும் தன்மையது. அது பெயர் வினைகளுடன் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பு கருதியே ஆன்றோர் அதை உரிச்சொல் என்று அழைத்தனர் போலும்.

அது, பெயரொடு உறவு கொண்டு, அதன் பண்பினைச் சிறப்பிக்குங்கால், பெயர் உரிச்சொல் எனப்படும். ஆங்கிலத்தில் Adjective என்று அழைக்கப்படுவதும் இப்பெயர் உரிச்சொல் என்பதும் ஒரு தன்மையது என்று கூறலாம். வினையொடு அது உறவு கொண்டு அதன் பண்பைச் சிறப்பிக்குங்கால் வினை உரிச்சொல் ஆகும். வினையுரிச்சொல்லை Adverb என்று கூறலாம்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பவை உரிச்சொற்கள். இவை ஆறும், மிகுதி என்னும் பண்பினை உணர்த்தும் பல சொற்கள்.

உதாரணம்:—

சால—சாலப் பலர்—மிகவும் அதிகமானவர்.
உறு—உறுபுகழ்—மிகுந்த புகழ்.
தவ—தவவேள்வி—சிறந்த வேள்வி.
நனி—நனிபேதை—பெரிய முட்டாள்.
,, —நனிபேசினான்—நன்றாகப் பேசினான்.

கூர்—களிகூர் மனம்—அதிகக் களிப்புடை மனம்.
கழி—கழிபேருவகை—அதிகமான சந்தோஷம்.

"சால உறுதவ நனிகூர் கழி மிகல்."

என்பது நன்னூல் சூத்திரம்.

கடி என்பதோர் உரிச்சொல். இது சொல்லொடு சேர்ந்து பலகுணங்களை உணர்த்தும் ஒருசொல். அதாவது, காவல், கூர்மை, வாசனை, பிரகாசம், அச்சம், சிறப்பு, விரைவு மிகுதி, புதுமை, ஒலித்தல், விலக்கல், மங்கலம், கரிப்பு ஆகிய பண்புகளை உணர்த்தி நிற்கும் இயல் பினது. எனவே இது பல பொருள் உணர்த்தும் ஓருரிச்சொல்.

உதாரணம்—

கடி நகர்—காவலுடைய நகர்.
கடி வேல்—கூர்மையுடைய வேல்.
கடி மாலை—வாசனையுடைய மாலை.
கடி மார்பன்—வீரம் விளங்கும் மார்பை உடையவன்.
கடி கா—அச்சத்தைத் தருங் காடு.
கடி மனை—சிறந்த, அல்லது வசதி மிகுந்த வீடு.
கடி சென்றான்—விரைந்து சென்றான்.
கடி காற்று—அதிகமான காற்று.
கடி மணம்—புதிய மணம்.
கடி முரசு—மிகுதியாக ஒலித்தலையுடைய முரசு.
கடி நறா—விலக்குதற்குறிய கள்.
கடி வினை—மங்கலத்தையுடைய வினை (சுபகாரியம்).
கடி மிளகு—கரிப்புச் சுவையுடைய மிளகு.

ஒலிப்பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள் சிலவுள. துவை, கலை, பிளிறு, இசை, சிலை, ஒலி, கலி, இரங்கு,

இமிழ், குளிறு, அதிர், அரவம், ஆர்ப்பு, முழக்கு முதலியன. ஒலித்தல் என்பதைப் பொருளாக உடையவை.

உதாரணம்:—

குரை கழல்—ஒலிக்குங் கழல்
கனை கடல்—ஒலிக்குங் கடல்
பிளிறு வார்முரசு—ஒலிக்கும் வார் முரசு
பறை இசை அருவி—பறையைப் போல்
ஒலிசெய்து கொண்டு ஓடும் அருவி.
சிலையுறு தடாரி—ஓசை மிகுந்த தடாரி
என்னும் பறை
ஒலி புனல் ஊரன்—ஓசையுடன்
பாய்ந்தோடும் நீர்நிலையை உடைய ஊரன்
கலி கெழு மூதூர்—ஆரவாரத்தை
உடைய பழமையான ஊர்
இரங்கு முரசினம்—சப்திக்கும் முரசு
களின் கூட்டம்
இமிழ் திரை—ஒலிக்கும் அலை
குளிறு முரசம்—ஒலிக்கும் முரசம்
அதிர் கழல்—பெரிய ஓசையை உடைய கழல்
அரவத் தானை—ஆரவாரம் செய்யும் படை
ஆர்த்த பல்லியம்—சப்தித்த பல வாத்தியங்கள்.

ஒலிப்பொருளைத் தருவனவான இவ்வுரிச் சொற்கள் பெயர் வினைகளைச் சாராமலும் தனித்து நின்று பொருள் தரவல்லவை.

சொல் அல்லது பேசல் என்ற ஒரு பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள் சில உள. மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல்,

மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல் என்பவை அவை. இவற்றை ஒரு குணந்தழுவிய பல உரிச்சொல் என்பர். இவைகளும் தனித்து நின்று பொருள் தரவல்லவை.

அமலே, துழனி, ஓசை, கரை முதலிய சொற்களும் ஒலியை உணர்த்தும் உரிச்சொற்களே.

கேழ் என்பது நிறத்தை உணர்த்தும் ஓர் உரிச்சொல். "செங் கேழ் மென் தளிர்" என்பது உதாரணம். "சிவந்த நிற முடைய மென்மையான தளிர்" என்பது அவ்வாக்கியத்தின் பொருள்.

"குருவும் கெழுவும் நிறனாகும்மே"

என்பது தொல்காப்பியம்.

மல்லல் என்பது வளமையைக் குறிக்கும் இடைச் சொல். "மல்லல் மறுகில் ..." என்பது உதாரணம். "வளமுடைய வீதியில்" என்பது பொருள்.

"மல்லல் வளனே"

என்பது தொல்காப்பியம்.

தட என்பது, பெருமையாகிய பண்பினை உணர்த்தும் உரிச்சொல். இதற்கு வளைந்த என்ற பொருளும் உண்டு.

தடக்கை—பெரியகை

தடமருப்பு—வளைந்த மருப்பு, (மருப்பு—கொம்பு).

"தடவும் கயவும் நளியும் பெருமை
தடவென்கிளவி கோட்டமும் செப்பும்"

என்பது தொல்காப்பியம்.

வை என்னும் உரிச்சொல் கூர்மைப் பொருளது, வைவேல் என்பது உதாரணம். கூர்மையுடைய வேல் என்பது பொருள்.

உரிச்சொல்லைப் பற்றி அறியவேண்டியன இவ்வளவே.

இத்துடன் சொல் இலக்கணம் முடிவு பெறுகின்றது. நூலில் சொல்லாதன சிலவற்றை அனுபந்தத்தில் கூறியுள்ளோம்.

அநுபந்தம்

1. ஆகு பெயர்

ஒருசொல் தனக்குரிய பொருளைக் குறிக்காமல், அதனோடு சம்பந்தங் கொண்ட வேறொன்றைக் குறிக்கு மானால் அப்பொழுது அது ஆகுபெயர் ஆகும்.

உதாரணமாக, "குளத்தில் தாமரை உண்டா" என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். தாமரை என்ற சொல், வேர், கொடி, இலை, பூ முதலியவைகளை யுடைய முதற்பொருளைக் குறிக்குமானால், அது இயற் பெயர் ஆகும். மற்று, அது மலரைக் குறிக்குமானால் ஆகுபெயர் ஆகும்.

காரிகை என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். அது அழகு என்னும் பொருளுடையது. அது அழகைக் குறித்து நின்றால் இயற்பெயர். மற்று, அழகு என்னும் தன்மையை உடைய பெண்ணைக் குறிக்குமானால் ஆகுபெயர் ஆகிவிடும்.

"கரு முகிலை மான் பிடிக்கச் சொன்ன மயிலே போல்..." என்பது ஒரு செய்யுளடி. இதிலுள்ள முகில் 'இராமனையும்' மயில் சீதையையும் குறிப்பதால் ஆகு பெயர்கள் ஆகின்றன.

ஆகுபெயரை வடநூலார் லக்ஷணை என்று அழைக் கின்றனர். ஆங்கிலத்தில் இவ்வாகுபெயர் Synecdoche, Metonymy என்னும் அணிகளில் அடங்கக் காண் கின்றோம்.

தமிழர் இதை அணியாகக் கொள்ளவில்லை. இவ்வாகு பெயர் பதினாறு வகைப்படும், அவையாவன:—

1. பொருளாகு பெயர், அல்லது முதலாகு பெயர்.
2. இடவாகு பெயர், அல்லது தானவாகு பெயர்.
3. காலவாகு பெயர்.
4. சினையாகு பெயர்.
5. குணவாகு பெயர், அல்லது பண்பாகு பெயர்.
6. தொழிலாகு பெயர்.
7. எண்ணலளவை ஆகுப்பெயர்.
8. எடுத்தலளவை ஆகுபெயர், அல்லது நிறுத்தலளவை ஆகுபெயர்.
9. முகத்தலளவை ஆகுபெயர்.
10. நீட்டலளவை ஆகுபெயர்.
11. சொல்லாகு பெயர்.
12. தானியாகு பெயர்.
13. கருவியாகு பெயர்.
14. காரியவாகு பெயர்.
15. கர்த்தாவாகு பெயர்.
16. உவமையாகு பெயர்.

இப்பதினாறில், பொருள், இடம், சினை, குணம் உவமை ஆகுபெயர்களை நேயர்கள் அறிந்தால் போதும். எனினும், பதினாறு ஆகுபெயர்களையும் ஒவ்வொன்றாய் எடுத்துக்கொண்டு உதாரணங்களுடன் விளக்கி வைப்போம்.

1. பொருளாகுபெயர்:—

ரோஜா மாலை கட்டு:—இவ்வாக்கியத்தில் ரோஜா என்பது செடியாகிய முதற் பொருளைக் குறிக்காமல், அதன் சினையாகிய மலரைத்

குறிப்பதால் பொருளாகு பெயர், (சினை என்றால் உறுப்பு) இதை முதலாகு பெயர் என்றும் அழைக்கலாம்.

2. இடவாகு பெயர் :—

ஊர் சிரிக்கும்,

உலகம் விழித்துக் கொண்டது,—"ஊர், உலகம்," என்ற சொற்கள் இடத்தைக் குறிக்காமல், அங்கே வாழும் மக்களைக் குறிப்பதால் இடவாகு பெயர். இதைத் தானவாகு பெயர் என்றும் அழைப்பதுண்டு. ஸ்தானம் என்ற வடமொழிச் சொல் தானம் என்று திரிந்துளது. தானம் என்றால் இடம்.

3. காலவாகு பெயர் —

கார்த்திகை பூத்தது.

கார் அறுத்தான்,—கார்த்திகை என்பது மாதத்தையும், கார் என்பது கார்காலத்தையும் குறிக்கும் பெயர்கள். அவை, கார்த்திகையில் பூக்கும் மலரையும், கார்காலத்தில் அறுக்கும் பயிரையும் குறிப்பின் கால ஆகு பெயர் ஆகும். (கார்த்திகையில் பூக்கும் ஒருவகை மலரைக் கார்த்திகைப்பூ என்பர். அதைத் தோன்றிப்பூ என்றும் சொல்வதுண்டு.)

4. சினையாகுபெயர் :—

முழு நீலக் கோதை,

வெற்றிலை நட்டான்—சினையாகு பெயருக்கு உதாரணம், கோதை என்றால் கூந்தல்.

கூந்தல் என்பது ஓருறுப்பு அல்லது சினை. இங்கே சினையாகிய கூந்தல், அதையுடை பெண்ணைக் குறிப்பதால் சினையாகு பெயர். "வெற்றிலை நட்டான்" என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். அவன் நட்டது வெற்றிலை அன்று; வெற்றிலையைச் சினையாகவுடைய கொடியாகிய முதற் பொருளை. எனவே, சினையாகு பெயர். சினை முதற்பொருளைக் குறித்து நிற்பதை நோக்குக.

"வாய் துடித்தது" என்பது வாக்கியமாயின், பொருள் அல்லது முதலாகு பெயராய் விடும். உதடு, பல், நாக்கு முதலிய உறுப்புகளை யுடையது வாய். துடித்தலைச் செய்தது வாயின் சினையாகிய உதடு. முதற் பொருளாகிய வாய் சினையாகிய உதட்டைக் குறிப்பதால், முதலாகு பெயராய் விடும். இந்த வித்தியாசத்தை நேயர்கள் மறத்தலாகாது.

5. குணவாகு பெயர் :—

காரிகை வந்தாள்,

நீலம் சூடினாள்,

வெள்ளை அடித்தான்,—காரிகை என்னும் சொல், அழகு என்னும் தன்மையைக் குறிக்காமல் அத்தன்மையை உடைய பெண்ணைக் குறிக்கின்றது.

நீலம் என்பது நிறத்தைக் குறிக்காமல், குவளை மலரைக் குறிக்கின்றது.

வெள்ளை என்பது நிறத்தைக் குறிக்காமல் சுண்ணும்பைக் குறிக்கின்றது. எனவே, அவை குணவாகு பெயருக்கு உதாரணம். பண்பாகு பெயர் என்றும் அழைப்பதுண்டு.

6. தொழிலாகு பெயர் :—

வற்றல் உண்டேன்—வற்றுதல் என்னும் தொழிலின் பெயர், அத்தொழிலால் ஆகிய உணவுப் பொருளைக் குறிப்பதால் தொழிலாகு பெயர். ''எழுத்து எழுதினேன்'' என்பதில் எழுத்தானது தொழிலாகு பெயர் ஆகும். எழுதுதல் என்னும் தொழிலால் உருப்பெற்ற ஒலியின் வரிவடிவத்தை எழுத்து என்னும் சொல் குறிப்பதால் தொழிலாகு பெயராகிறது.

7. எண்ணலளவை ஆகுபெயர் :—

அரை ஞாண்—அரை என்னும் எண்ணலளவைச் சொல், அளவைக் குறிக்காமல் இடுப்பைக் குறிப்பதால் எண்ணலளவை ஆகுபெயர் ''ஒன்று கொடு'' என்பதில், ஒன்று என்னும் சொல்லும் ஒரு பொருளைக் குறிப்பதால் எண்ணலளவை ஆகுபெயர் ஆகின்றது.

8. எடுத்தலளவை ஆகுபெயர் .—

ஒரு **வீசை** வாங்கு,
ஒரு **சேர்** எடு,
ஒரு **மணங்கு** கொடு—நிறுத்து அளக்கும் அளவை எடுத்தலளவை. இதை நிறுத்த

லளவை என்றும் அழைப்பதுண்டு. வீசை, சேர் அல்லது மணங்கின் அளவைக் கொண்ட பொருள்களைக் குறிப்பதால் எடுத்தலளவை ஆகு பெயர்.

9. முகத்தலளவை ஆகுபெயர் :—

உண்பது நாழி,

குறுணி கொடு—மொண்டு அளக்கின்ற அளவை முகத்தலளவை. நாழி, குறுணி என்னும் முகத்தலளவைப் பெயர்கள், அவ் வளவைக்கொண்ட பொருள்களுக்கு ஆவதால், முகத்தலளவை ஆகுபெயர்.

10. நீட்டலளவை ஆகுபெயர் :—

உடுப்பது நான்கு முழம்.

ஒரு கெஜம் வாங்கு,—நீட்டியளக்கும் அளவை நீட்டலளவை. முழம், கஜம் என்னும் சொற்கள், அவ்வளவைக் கொண்ட துணியைக் குறிப்பதால் நீட்டலளவை ஆகுபெயர்.

11. சொல்லாகு பெயர்:—

நூலுக்கு உரை கண்டான்—உரை என்ற சொல், நூலுக்கு எழுதப்பட்ட பொருளைக் குறிப்பதால், சொல்லாகு பெயர்.

12. தானியாகு பெயர்:—

விளக்கு முறிந்தது,—விளக்கு என்றால் எரியும் தீச் சுடர். அச்சுடருக்கு ஆதாரமாய் இருப்பது தண்டு. இங்கே முறிந்தது சுடர் அன்று. அதற்கு இடமாகிய

தண்டு, தானம் (ஸ்தானம்): விளக்கு, தானி (ஸ்தானி). தானி (விளக்கு), தானத்தை (தண்டை)க் குறிப்பதால் தானியாகு பெயர்.

13. கருவியாகு பெயர் :—

திருவாய் மொழி ஓதினுன்,

திருவாசகம் படித்தான்,—மொழி, வாசகம் என்னுங் கருவி அதனுலான பக்தி நூல்களைக் குறிப்பதனுல் கருவியாகு பெயர் ஆகின்றது.

14. காரியவாகு பெயர்:—

இலக்கணம் வாங்கினேன்—இலக்கணம் என்பது விதி கூறும் காரியத்தினது. அக் காரியத்தின் பெயர், அதை அறிவிக்கும் நூலைக் குறித்தலால் காரியவாகு பெயர். "அலங்காரம் படித்தேன்." என்பதும் காரியவாகு பெயருக்கு உதாரணமாகும்.

15. கர்த்தாவாகு பெயர் :—

திருவள்ளுவர் படித்தேன்—திருவள்ளுவர் என்னும் கர்த்தாவின் பெயர், அவராக்கிய நூலாகிய திருக்குறளைக் குறித்து நிற்பதால் கர்த்தாவாகு பெயர்.

16. உவமையாகு பெயர்:—

கம்பன்வாய் தேன் பொழியும்—தேன் என்ற சொல், தேனைக் குறிக்காமல் தேன் போன்ற இனிய சொற்களை உணர்த்தி நிற்பதால் உவமைஆகு பெயர் ஆகின்றது.

மான் பிடிக்கச் சொன்ன மயில்—மயில் என்னும் சொல் ஒருவகைப் பறவையைக் குறிக்காமல் மயில் போன்ற சாயலை உடைய சீதையைக் குறிப்பதால் உவமை ஆகுபெயர்.

பாவை வந்தாள்—பாவை என்ற சொல் பதுமை போன்ற தோற்றமுடைய பெண்ணை உணர்த்துவதால் உவமை ஆகுபெயர். தேன், மயில், பாவை போன்ற உபமானப் பெயர்கள், உபமேயமாகிய சொல், சீதை பெண்ணை முறையே உணர்த்துகின்றன. உபமானம் உபமேயத்தைக் குறித்து நிற்குமானல் உவமையாகு பெயர் ஆகும்.

மேலே கூறிய ஆகு பெயர்களில் முதலாகுபெயரும், சினையாகு பெயரும் ஆங்கிலத்தில் ஒரு அணியாகக் கருதப்பட்டு, Synecdoche, என்னும் அணியில் அடங்கக் காண்கின்ருேம். மற்ற ஆகுபெயர்கள் Metonymy என்னும் அணியில் அடங்கும்.

ஒரு சொல், தனக்குரிய பொருளைக் குறிக்காமல், தோற்றம், தொழில், குணம் முதலியவைகளால் சம்பந்தங்கொண்ட பிறிதொன்றை உணர்த்தி நிற்குமானல், அது, ஆகுபெயர் ஆகும் என்று உதாரணங்களுடன் விளக்கினேம். அவ்வாருன ஆகுபெயர் மீண்டும் மடிந்து வேருென்றைக் குறிக்குமாயின், அதை இருமடி ஆகுபெயர் என்பர். அந்த இருமடியாகுபெயர் மறுபடியும் மடிந்து பிறிதொன்றைக் குறிக்குமானல், அப்பொழுது அது மும்மடி ஆகுபெயர் ஆகும். உதாரணங்களுடன் இவற்றை விளக்குவோம்,

"...கெண்டைக் கடை சிவப்ப நின்றாள்..."

என்னும் செய்யுளடியை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்,

கெண்டை என்பது ஒரு ஜாதி மீனின் பெயர். அது, இங்கே மீனைக் குறிக்காமல், உவமையால் கண்ணைக் குறிக்கின்றது. எனவே, கெண்டை என்பது உவமை ஆகுபெயர்.

"முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த
செழுநீலம் மாறாச் சிவப்பு"

என்பது ஒரு செய்யுளடி. செய்யுளின் ஈற்றடியிலுள்ள செழுநீலம் என்ற தொடரின் வருமொழியான நீலம் என்ற சொல், நீலநிறத்தை உணர்த்தாமல், பண்பாகு பெயராய் நீலோற்பல மலரைக் குறிக்கின்றது. அம்மலர் மீண்டும் மடிந்து, உவமையால் தமயந்தியின் கண்ணைக் குறிக்கின்றது. எனவே, நீலம் என்பது இருமடியாகு பெயர் ஆகின்றது.

இருமடி ஆகுபெயரைப் பார்த்தோம். இனி மும்மடி ஆகுபெயரைப் பார்ப்போம்.

"கார் அறுத்தான்"

என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இதை முன்னர் காலவாகு பெயருக்கு உதாரணமாகக் காட்டியுள்ளோம். கார் என்பது கார்காலத்தைக் குறிப்ப தாக அங்கே கொள்ளப்பட்டது. அது, கரியமேகம் என்ற பொருளையும் தரவல்லது. எனவே, கார் என்பது கரியமேகத்தையும், அம்மேகம் மடிந்து கார்காலத்தையும், அக்கார் காலம் மறுபடியும் மடிந்து அக்காலத்தில் விளையும் பயிரையும் குறிக்கலாம். அவ்வாறு கொள்ளின் கார் என்பது மும்மடி ஆகுபெயர் ஆகின்றது.

2. வேற்றுமையில் வேறுபாடு

யான், நான், யாம், நாம், யாங்கள், நாங்கள் என்னும் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கையில் ஏற்படும் வேறுபாடு வருமாறு :—

யான் - ஐ - என்னை
நான் - ஐ - என்னை
யாம் - ஐ - எம்மை
நாம் - ஐ - எம்மை
யாங்கள் - ஐ - எங்களை
நாங்கள் - ஐ - எங்களை

இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்கையில் ஏற்பட்ட வேறுபாடுகள் இவை. மற்ற வேற்றுமை உருபுகள் ஏற்கும் போதும் இத்தன்மைப் பெயர்கள் வேறுபாடு அடையும்.

யான் - வீடு - என் வீடு
நான் - கை - என் கை
யான் - நண்பர் - என் நண்பர்
நாம் - நாடு - நம் நாடு
யாங்கள் - தொழில் - எங்கள் தொழில்
நாங்கள் - புத்தகம் - எங்கள் புத்தகம்

தன்மைப் பெயர்கள் அடையும் வேறுபாட்டைப் பார்த்தோம். இனி முன்னிலைப் பெயரைப் பார்ப்போம்.

நீ - ஐ - நின்னை, உன்னை
நீ - வீடு - நின்வீடு, உன்வீடு
நீயிர் - ஐ - நும்மை, உம்மை
நீவிர் - ஐ - நும்மை, உம்மை
நீர் - ஐ - நும்மை, உம்மை
நீர் - அன்னை - நும்அன்னை, உம்அன்னை

நீங்கள் - ஐ - நுங்களை, உங்களை.
நீங்கள் - ஊர் - நுங்கள் ஊர், உங்கள் ஊர்,

படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போது அடையும் வேறுபாடு :—

தான் - ஐ - தன்னை
தான் - பசு - தன்பசு
தாம் - ஆல் - தம்மால்
தாம் - வீடு - தம்வீடு
தாங்கள் - கு - தங்கட்கு
தாங்கள் - பெயர் - தங்கள் பெயர்.

3. பொது வினைகள்

இல்லை, உண்டு, வேறு என்ற இம் மூன்று குறிப்பு வினைகளும், இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான வினைகளாகும்.

உதாரணம் :—

ஆண்பால் படர்க்கை—அவன் இல்லை
அவன் உண்டு
அவன் வேறு.

பெண்பால் படர்க்கை—அவள் இல்லை
அவள் உண்டு
அவள் வேறு.

பலர்பால் படர்க்கை—அவர்கள் இல்லை
அவர்கள் உண்டு
அவர்கள் வேறு.

ஒன்றன்பால் படர்க்கை—அது இல்லை
அது உண்டு
அது வேறு.

பலவின்பால் படர்க்கை—அவை இல்லை
அவை உண்டு
அவைவேறு.

தன்மை ஒருமை—நான் இல்லை
நான் உண்டு
நான் வேறு.

தன்மைப் பன்மை—நாங்கள் இல்லை
நாங்கள் உண்டு
நாங்கள் வேறு.

முன்னிலை ஒருமை—நீ இல்லை
நீ உண்டு
நீ வேறு.

முன்னிலைப் பன்மை—நீங்கள் இல்லை
நீங்கள் உண்டு
நீங்கள் வேறு.

யார் என்னும் வினைப் பொருளை உணர்த்தும் குறிப்பு வினை முப்பாலுக்கும் பொதுவான வினையாகும்.

உதாரணம்:—

அவன் யார்?
அவள் யார்?
அவர்கள் யார்?

எவன் என்னும் வினைப் பொருளை உணர்த்தும் குறிப்புவினை, அஃறிணை இருபாலுக்கும் பொதுவினையாகும்.

அது எவன்?
அவை எவன்?

4. உறுப்பு இலக்கணம்

சொற்களின் உறுப்புக்களாகிய பகுதி, விகுதி, சாரியை, சந்தி, விகாரம் ஆகியவற்றின் இலக்கணங் கூறல் உறுப்பிலக்கணத்தின் காரியம். இவ்வுறுப்பிலக் கணத்தை நன்னூலார் எழுத்திலக்கணப் பகுதியில், பதவியல் என்னுந் தலைப்பில் விளக்கியுள்ளார். இவ்விய லுக்கு ஆதாரம் பெரும்பாலும் வடமொழியாதலால், அது தோன்ற ஆசிரியர், மொழிஇயல் என்னுமல், பதவியல் என்று பெயரிட்டனர் போலும். மொழி என்பது தமிழ்ச் சொல். அதற்கு நேரான வடமொழிச் சொல் பதம்.

இலக்கிய அனுபவத்திற்கு, உறுப்பிலக்கணப் பயிற்சி அவசியமற்றது என்பதே எமது கருத்து. இப் பயிற்சி, அனுபவத்திற்குத் துணை புரியாததோடு, இடையூருகவும் அமையவல்லது. புலமை வளத்தோடு செல்வச் செழிப்பும் வாய்க்கப் பெற்ற ஒரு நேயர், பகுதி விகுதிச் சர்ச்சையில் காலத்தைக் கழித்ததோடு, பலரது பகையை வளர்த்துக் கொண்டதையும் யாம் அறிவோம். ஆகவே, மாணவர் மனம் உறுப்பிலக்கணத்தின்பால் நாட்டங் கொள்ளுதலை யாம் விரும்புவதில்லை.

அலையடங்கிய நல்வாழ்க்கைக்குத் துணை செய்ய வல்ல இலக்கியங்களை ஓதி மகிழ்வதற்குக் கருவியாகும் வகையில் இலக்கணப் பயிற்சி இன்றியமையாததே. ஆனால், வியவகார நசையை வளர்த்து வைக்கும் இயல் பினதான உறுப்பிலக்கணத்தை யாம் புலமையின் இன்றியமையா அங்கமாக நினைக்கவில்லை. எனினும்

அது இலக்கணத்தின் ஒரு பகுதியாதலால், அதைச் சுருக்கமாகத் தருகின்றோம்.

எழுத்துக்கள் தனித்து நின்றோ, அல்லது தொடர்ந்தோ பொருள் தருமாயின், சொல் அல்லது பதம் ஆகும். அப்பதம், பகாப்பதம் என்றும் பகுபதம் என்றும் இருவகைப்படும். பிரித்தால் பொருட் பயன் கெடாதபடி நிற்கக்கூடிய பதம் பகுபதம் பிரித்தால் பயனற்றுப் போவதும், காரணமின்றி இட்டபெயராய் அநாதிகால மாய் வழங்கிவரும் பெயர், வினை, இடை, உரியாகிய சொற்களும் பகாப்பதங்கள் ஆகும்.

ஆ, ஈ, ஏ, ஐ, மா, மீ, மை, தா, தீ, தூ, பா, பூ, மை, நா, நை, கா, கூ, கோ, சா, சீ, சே, வா, வீ, வை, யா, முதலிய ஓரெழுத்தொரு மொழிகள் எல்லாம் பகாப் பதங்கள்.

எழுத்துத் தொடர் மொழிகளான, அணி, கலம், இரும்பூது, குங்கியம், உத்திரட்டாதி, முதலியன, இரண்டும், இரண்டிற்கும் அதிகமான எழுத்துக்களாலான பகாப் பதங்களுக்கு உதாரணம்.

கூனி, கூனன், அறிஞன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் முதலியன பகுபதங்களுக்கு உதாரணம்.

பகாப்பதம், பெயர்ப் பகாப்பதம், வினைப் பகாப்பதம், இடைப் பகாப்பதம், உரிப் பகாப்பதம் என்று நான்கு வகைப் படும்.

நிலம், நீர், கண், கலம்—பெயர்ப் பகாப்பதம்.
நட, வா, உண், பார்—வினைப் பகாப்பதம்.
மன், கொல், மற்று, போல்—இடைப் பகாப்பதம்.
உறு, தவ, நனி, கழி—உரிப் பகாப்பதம்.

பிரிக்கக் கூடியதும், பிரிந்த நிலையிலும் பொருள் தரக்கூடியதுமான சொல் பகுபதம் என்று கூறினேம். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், என்று அறுவகைப்பட்ட பெயர்களின் அடியாகப் பிறக்கும் பெயர்ச் சொற்களும், காலங் கொள்ளும் தெரிநிலை, குறிப்பு வினைகளும் பகுபதங்கள் ஆகும்.

பொன்னன்—பொன் என்ற பொருளடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதம்.

நாடன்—இடத்தினடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதம்.

கண்ணன்—கண் என்ற உறுப்பு, அல்லது சினையின் அடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதம்.

நல்லன்—நன்மை என்னும் குணத்தி னடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதம்.

நடையன்—நடை என்னும் தொழிலின் அடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதம்.

நடந்தான், நடக்கிருன், நடப்பான் - தெரிநிலை வினைப் பகுபதங்கள்.

(இவன்) பகைவன், இனி நண்பன் அல்லன் —காலத்தைக் குறிப்பால் கொள்ளும் குறிப்புவினைப் பகுபதங்கள். (பகைவன் ஆனுன் என்றும், நண்பன் ஆகான் என்றும் பொருள்படுவதால் குறிப்பு வினைகள்.)

பகுபத உறுப்பு

உடலுக்குக் கை, கால், கண், தலை முதலிய உறுப்புக்கள் இருத்தல் போல், பகுபதங்களுக்கும் உறுப்புக்கள்

இருக்கின்றன. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை சந்தி, விகாரம் என்பவை பகுபத உறுப்புக்கள். இவ்வுறுப்புக்களைப் பொருள் அமைதிக்கு ஏற்றபடி பெறும் பதங்கள் பகுபதங்கள் ஆகின்றன.

உதாரணம் :—

கூனி—கூன் - இ—என்று பகுதி விகுதிகளால் முடிந்த பகுபதம்.

வலைஞன்—வலை - ஞ் - அன்—என்று பகுதி விகுதி, இடை நிலைகளான பகுபதம்.

உண்டனன்—உண்-ட்-அன்-அன்—என்று பகுதி விகுதி, இடைநிலை, சாரியை களாலான பகுபதம்.

படித்தனன்—படி - த் - த் - அன்—என்று பகுதி விகுதி, சந்தி இடைநிலை சாரியை களாலான பகுபதம்.

நடந்தனன்—நட-த்-த்-அன்-அன்—என்று பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை, சாரியை களாலான இப்பதத்தில், சந்தியால் வந்த தகர மெய், அதன் இனமான நகர மெய்யாக விகாரப் பட்டுளது. எனவே, இது எல்லா வுறுப்புக்களும் சேர்ந்து ஆன பகுபதம்.

பகுபதங்களின் முதலில் நிற்பது பகுதி, அதாவது பதத்தின் முதல் உறுப்பு. இறுதி உறுப்பு விகுதி, பகுதியும் விகுதியும், பிரக்ருதி, விக்ருதி என்ற வடமொழிச் சொற்களின் விகாரங்களாகும்.

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் உறுப்பு இடைநிலை.

இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் இடம் பெறுவது சாரியை.

பகுதிக்கும் இடைநிலைக்கும் மத்தியில் வருவது சந்தி. இடைநிலை எழுத்து இரட்டியே பெரும்பாலும் சந்தியாக வரும்.

சந்தியால் தோன்றிய எழுத்து, அதன் இனமாக வேறுபட்டு நிற்பது விகாரம்.

பகுதி

சொல் முதலான பகாப்பதங்களே பகுதி. பெயர், வினை, இடை, உரியாகிய நான்கு சொற்களும் பகுதிகளாக வரும்.

பொன்னன், கண்ணன், கூத்தன், செய்யன், ஓணத்தான் முதலியன பெயர்ப் பகுபதங்களுக்கு உதாரணம். சொற்களின் முதல் நிலையான, பொன், கண்...முதலிய பகாப் பதங்கள் பகுதியாகின்றன.

அவன், எவன், பிறன், என்ற சொற்களில் அ, எ, பிற, என்ற இடைச் சொற்கள் பகுதிகளாக வந்தன.

சால்பு, கடியன என்பவைகளில், சால், கடி என்ற உரிச் சொற்கள் பகுதியாகும்.

நடந்தான், பிடித்தான் என்பவைகளில், நட, பிடி என்னும் வினைச் சொற்கள் பகுதியாகும்.

பண்புப் பகுதிகள்

குணத்தை உணர்த்தும் பகுதிகள் பண்புப் பகுதிகள் ஆகும். அளவு, அறிவு, அழகு, நிறம், பிறப்பு, குடிச் சிறப்பு முதலியன பண்பாகும்.

செம்மை, வெண்மை, கருமை, பசுமை, சிறுமை, பெருமை, சேய்மை, அணிமை, தீமை, நன்மை, புதுமை, பழமை, மேன்மை, தாழ்மை, கீழ்மை, மென்மை, வன்மை, உண்மை, இன்மை, நுண்மை, பருமை முதலியவைகளும் இவைபோன்ற பிறவும், பண்புப் பகாப்பதங்களாகும், இவை எல்லாம் சொல் நிலையால் பகுபதமாயினும் பொருள் நிலையால் பகாப்பதங்களாகவே கொள்ளப் படுகின்றன.

இப்பண்புப் பெயர்கள் ஏனை மொழிகளோடு சேருங்கால் அடையும் விகாரங்களைப்பற்றிப் புணரியலில் விளக்கியுள்ளோம்.

வினைப் பகுதிகள்

நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நோ, போ, வௌ, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு முதலிய வாய்பாடுகளுக்கு உரியவை வினைப் பகுதிகள் ஆகும். இவற்றினின்று, ஏவல் தெரிநிலை வினைகளும், பெயர் வினை எச்சங்களும் வினையாலணையும் பெயர், தொழிற் பெயர்களும் பிறக்கின்றன.

நட, பற முதலிய வினைப் பகுதிகள், நட என்ற வாய் பாட்டிற் குரியவை.

வா, தா, சா முதலிய வினைப்பகுதிகள் வா என்ற வாய் பாட்டிற் குரியவை.

படி, தவி, எறி, குறி முதலிய வினைப் பகுதிகள் மடி என்ற வாய் பாட்டிற் குரியவை.

சீ, வீ, ஈ முதலிய வினைப் பகுதிகள், சீ என்ற வாய் பாட்டிற்குரியவை.

எடு, கொடு, விடு, விழு, உழு, நெருடு, வருடு முதலிய வினைப் பகுதிகள் விடு என்ற வாய்பாட்டிற்கு உரியவை.

கூ, பூ முதலிய வினைப் பகுதிகள் கூ என்ற வாய் பாட்டிற் குரியவை.

பதை, புதை, உதை முதலிய வினைப்பகுதிகள் வை என்ற வாய் பாட்டிற் குரியவை.

போ மோ முதலிய வினைப் பகுதிகள் போ என்ற வாய்பாட்டிற் குரியவை.

வெள, கெள, என்ற வினைப்பகுதிகள் வெள என்ற வாய் பாட்டிற் குரியவை.

ஞகர மெய்யை ஈற்றிலுடைய வினைப் பகுதிகள் உரிஞ் என்ற வாய் பாட்டிற்குரியவை.

பண், எண் முதலிய வினைப்பகுதிகள் உண் என்ற வாய் பாட்டிற்குரியவை.

நகர மெய்யை ஈற்றிலுடைய வினைப்பகுதிகள் பொருந் என்ற வாய்பாட்டிற்குரியவை.

மகர மெய்யை ஈற்றிலுடைய வினைப்பகுதிகள் திரும் என்ற வாய் பாட்டிற்குரியவை.

தின், பன், ஈன் முதலிய வினைப்பகுதிகள் தின் என்ற வாய் பாட்டிற்குரியவை.

காய், சாய், ஆய், ஏய், முதலிய வினைப்பகுதிகள் தேய் என்ற வாய் பாட்டிற் குரியவை.

பார், வளர், சேர் முதலிய வினைப் பகுதிகள் பார் என்ற வாய்பாட்டிற் குரியவை.

வெல், கொல், கோல், அகல் முதலிய வினைப் பகுதிகள் செல், என்ற வாய்பாட்டிற்குரியவை.

வகர மெய்யை ஈற்றிலுடைய வினைப்பகுதிகள், வவ் என்ற வாய்பாட்டிற்குரியவை.

போழ், தாழ், வாழ், தவழ என்ற வினைப்பகுதிகள் வாழ் என்ற வாய்பாட்டிற்குரியவை.

கேள், ஆள், முதலிய வினைப்பகுதிகள், கேள் என்ற வாய்பாட்டிற்குரியவை.

நாடு, பாடு, அஃகு முதலிய குற்றியலுகரத்தை ஈற்றிலுடைய வினைப்பகுதிகள் அஃகு என்ற வாய் பாட்டிற்குரியவை.

வே, நோ என்ற வினைப்பகுதிகள் வெ, நொ என்ற வாய்பாடுகளுக்கு உரியவை.

இவ்வாய்பாட்டு வினைப் பகுதிகளினடியாகவே எல்லா வினைகளும், எச்சங்களும் பிறக்கும் என்பது அறிக.

விகுதி

"அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார்
அ, ஆ, கு, டு, து, று, என், ஏன், அல், அன்
அம், ஆம், எம், ஓம், ஊர், கும், டும்
க, ட, த, ற, ஐ, ஆய், இ, மின், இர், ஈர்
ஈ, யர், க, ய, உம் என்பனவும், (இவை போன்ற)
பிறவும் வினைவிகுதிகள்."

இவைகளில் சில பெயர்ப் பகுபதங்களின் விகுதியும் ஆகும். இருதிணை ஐம்பால்களுக்கும் உரிய விகுதிகளைப் பற்றி உதாரணங்களுடன் முன்னரே கூறியுள்ளோம்.

தொழிற் பெயர் விகுதி

தல், அல், அம், ஐ, வை, கு, பு, உ, தி, சி, வி, உ, ள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல், இல் என்பவை தொழிற் பெயர் விகுதிகள்.

நடத்தல்—தல்	ஆடல்—அல்
வாட்டம்—அம்	கொலை—ஐ
செய்கை—கை	பார்வை—வை
போக்கு—கு	நடப்பு—பு
வரவு—உ	மறதி—தி
உணர்ச்சி—சி	புலவி—வி
விக்குள்—உள்	சாக்காடு—காடு
கோட்பாடு—பாடு	தேற்றரவு—அரவு
வாரானை—ஆனை	நடவாமை—மை
பாய்த்து—து	தழால்—ஆல்

என்பவை உதாரணங்கள். (விக்குள்-விக்குதல், தேற்றரவு-தேற்றுதல். பாய்த்து-பாய்தல். தழால்-தழுவல், எழில்-எழுதல்) இவை விகுதி பெற்ற தொழிற் பெயர்கள்.

தொழிற் பெயர் முதல்நிலைத் தொழிற் பெயர், என்றும் முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் என்றும் இருவகைப்படும்.

அடித்தல் என்ற பெயர், விகுதி கெட்டு அடி என்று நிற்பின் முதல் நிலைத் தொழிற் பெயராகும். உரை, கெடு என்பவை உதாரணம்.

கொள்ளல் என்ற பெயர் விகுதி கெட்டு, அதன் பகுதியாகிய கொள் என்பது கோள் என்று விகாரப்

பட்டு நிற்பின், முதனிலை திரிந்த தொழிற் பெயராகும். கேடு, இடையீடு என்பவை உதாரணம்.

பண்புப் பெயர் விகுதி

மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், பம் என்பவை பண்புப்பெயர் விகுதிகள்.

நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர், திட்பம்—என்பவை உதாரணம்.

இடை நிலை

பகுதிக்கும் விகுதிக்கும் நடுவில் நிற்பது இடை நிலை என்பதை முன்னரே கூறியுள்ளோம். இவ்விடை நிலை, காலங்காட்டா இடைநிலை என்றும், காலங்காட்டும் இடைநிலை என்றும் இருவகைப்படும். பெயர்ப் பகுபதங்களின் பின் வரும் இடைநிலை காலங்காட்டாது. வலைச்சி, வண்ணுத்தி என்பவைகளிலுள்ள ச், த் என்ற இடை நிலைகள் காலங்காட்டா இடைநிலைகள். தெரிநிலை வினைகளில் வரும் இடைநிலை காலங்காட்டும்.

த், ட், ற், இன் என்பவை இறந்த கால இடை நிலைகளாகும். இவற்றில், த் என்னும் இடைநிலை, குற்றியலுகரம் ஒழிந்த ஏனைய உயிர்களையும், ய், ர், ழ் என்ற மெய்களையும் ஈற்றிலுடைய பகுதிகளின் பின் வரும். நடந்தான், எழுந்தான், நேர்ந்தான் என்பவை உதாரணம்.

ற், ட் என்பவை ல், ண் என்ற மெய்களை ஈற்றிலுடைய சில பகுதிகளின் பின்வரும் கற்றான் (கல்-ற்-ஆன்), கண்டான் (கண்-ட்-ஆன்) என்பவை உதாரணம்.

இன் என்பது, ய், ர், ழ் என்ற மெய்கள் ஒழிந்த ஏனைய மெய்களையும், உயிர்களையும் ஈற்றிலுடைய பகுதி

களின் பின்வரும். உரிஞினன், வவ்வினன், அஃகினன், புல்லினன், ஊட்டினன் என்பவை உதாரணம்.

ஆநின்று, கின்று, கிறு என்பவை நிகழ்கால இடைநிலை. நடவாநின்ருன், நடக்கின்ருன், நடக்கிருன் என்பவை உதாரணங்கள்.

ப், வ் என்பவை எதிர்கால இடைநிலை. நடப்பான் வருவான் என்பவை உதாரணங்கள்.

தமிழ்ச் சொற்களுக்குரிய உறுப்பிலக்கணம் இவ்வளவே. இவ்விலக்கணத்தைப் பற்றி இவ்வளவு அறிந்து கொண்டால் போதும்.

5. வழுவமைதி

சொற்கள் தொடருமிடத்து, முடிக்கப்படும் சொற்களும், முடிக்கும் சொற்களும் திணை, பால், இடம் காலம் வழுவாது நிற்றலும், ஆன்ருேரது சொற்பிரயோக மரபு கடவாதிருத்தலும் வழா நிலை எனப்படும்.

திணை, பால், இடம், காலம் முதலியவைகளை உணர்த்தும் சொற்களின் முடிவுகள் ஒன்றற்கொன்று ஒவ்வாதிருத்தல் வழு ஆகும். அதாவது இலக்கணமும், மரபும் பிறழ்ந்து வருவது வழு.

இலக்கணக் குற்றம் உடையதாகக் காணப்பட்டாலும், ஆன்ருேரால் அவ்வாறு இருக்கலாம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவை வழுவமைதி ஆகும்.

இம்மூன்றனுள் வழு தள்ளப்படும். வழாநிலையும், வழுவமைதியும் கொள்ளப்படும்.

இராமன் வந்தது—திணைவழு.
கிருஷ்ணன் வந்தாள்—பால்வழு.

யான் வந்தான்—இடவழு.
நாளை வந்தான்—காலவழு.

கம்பன் கவிப் பெரியன்—இவ்வாக்கியத்தில் கம்பன் உயர்திணை, கவி அஃறிணை. பெரியன் என்பது உயர்திணைக்குரியப் பயனிலை. எனவே, இது வழுவுடையது. ஆனால், ஆன்றோரால் இது ஏற்றுக் கொள்ளப் பட்டது. எனவே வழுவமைதி ஆகின்றது.

முருகன் குறிஞ்சி நாயகன்—முருகன் உயர்திணை. குறிஞ்சி அஃறிணை. நாயகன் என்னும் குறிப்பு வினை உயர்திணைப் பயனிலை வழுவுடையதேனும், ஆன்றோரால் ஒப்புக் கொள்ளப் பட்டதால் வழுவமைதி.

பாஞ்சாலி கண் அழகி—வழுவமைதி.
இந்திரனும் ஐராவதமும் வந்தார்கள்—இதில் இந்திரன் உயர்திணை. ஐராவதம் அஃறிணை. வந்தார்கள் உயர்திணைப் பயனிலை. இரு திணையும் கலந்து சிறப்பினால் உயர்திணை முடிவைப் பெற்றது. இம்முடிவு ஐராவதத்திற்குச் சிறப்பைத் தருகின்றது, வழுவமைதி.

மூர்க்கனும் முதலையும் விடா — இருதிணையுங் கலந்து இழிவினால் அஃறிணை முடிவு வந்துளது. (விடா-அஃறிணைப் பயனிலை) வழுவமைதி.

மாலையும் முடியும் கவித்தான் - சூடுதல் என்னும் வினைக்குரிய மாலையினும், கவித்தல்

என்னும் வினைக்குரிய முடி சிறந்ததாதலால், அச் சிறப்புத் தோன்ற கவித்தான் என்று முடிந்து வழுவமைதி ஆகின்றது.

இரு செவியும் செவிடாயிற்று—பன்மை ஒருமை மயக்கம் என்னும் வழுவமைதி.

தம்மக்கள் தம் பொருள்—உவப்பினால் உயர்திணை மக்கள் அஃறிணைப் பொருளாயினர். திணை வழுவமைதி,

இவன் என் அம்மை—தனது ஆண் குழந்தையை அன்பின் மிகுதியால் அம்மை என்று பெண்பாலாக்கியது பால் வழுவமைதி.

மலை நிற்கின்றது;
கடவுள் இருக்கின்றான்—எக்காலத்திலும் இடையீடின்றி நிகழ்ந்து கொண்டிருப்பவற்றை நிகழ் காலத்தினால் கூறல் காலவழுவமைதி ஆகும்.

விரைவு, மிகுதி, தெளிவு, பற்றியும் காலங்கள், ஒன்று மற்றொன்றாக மயங்கி வருவதுண்டு; அவ்வாறு வரின், அதைக் காலவழுவமைதி என்பர்.

உண்ண வந்தவனை, 'உண்டிலையோ,' என்று கேட்டால், அவன், "உண்டேன், உண்டேன்," என்பானாயின், அது விரைவு பற்றி எதிர்காலம் இறந்த காலமாயிற்று.

உண்கின்றவன், 'உண்டேன்' என்பானாயின், அதுவும் விரைவு பற்றி நிகழ்காலச் செய்தி, இறந்த காலமானதாகும்.

அறம் செய்தான் சுவர்க்கம் புகுந்தான்—தர்மம் செய்தவன் நிச்சயம் சுவர்க்கம் போவான்

என்ற தெளிவு பற்றி எதிர் காலம்
இறந்த காலம் ஆயிற்று.

இவ்வழுக்கள் எல்லாம் ஆன்ருேர் ஏற்ற காரணத்தால் இலக்கண அமைதியுடையவை ஆகின்றன.

6. அடைமொழி

ஒரு பொருளேச் சிறப்பிக்கவோ, அல்லது அதன் இயற்கைத் தன்மையை எடுத்து இயம்பவோ, அல்லது அதன் தகுதி நோக்கியோ சொல்லொடு சேர்ந்து வரும் மொழியை அடைமொழி என்பர். இந்த அடையை ஏற்கும் அல்லது கொள்ளும் மொழியை முதல் மொழி, அல்லது அடைகொளி என்பர். அடைமொழியை வடநூலார் விசேஷணம் என்றும், அடைகொளியை விசேஷ்யம் என்றும் அழைப்பார்.

அடை மொழிகளில் சில, பொருளின் இயற்கையைக் கூறவும், சில பொருளினது தனிச்சிறப்பை எடுத்துக் காட்டவும் வரும். சந்திரன், வெண்மை நிறத்தை இயற்கை யாகப் பெற்றிருக்கும் ஓரழகிய கோள். அதை வெண்மதி என்று அடை கொடுத்து அழைப்பதில், அதற்கு எவ்விதச் சிறப்பும் ஏற்படுவதற்கில்லே. எனவே, வெண் என்னும் அடை இயற்கை அடைமொழி ஆகும்.

ஆனல், தாமரையை வெண்தாமரை என்போமாயின், அப்பொழுது, வெண் என்னும் அடைமொழி சிறப்பு அடைமொழி ஆகின்றது, ஏனெனில், இவ்வடைமொழி செந்தாமரையை விலக்கி, வெண்ணிறமாகிய சிறப்பை அதற்குக் கொடுக்கின்றது.

பச்சைப்புடவை, என்னுங்கால், கருப்பு, சிவப்பு, மஞ்சள் முதலிய நிறங்களை விலக்கி, அதற்குப் பச்சை நிறமாகிய ஒரு சிறப்பை அடை மொழி தருகின்றது.

இவ்விதம் பலவற்றினின்று ஒன்றைப் பிரித்துக் காட்டவரும் அடைமொழியைச் சிறப்பு அடைமொழி என்பர். இச்சிறப்பு அடையை ஆங்கிலத்தில் Restrictive Epithet என்பர். இயற்கை அடைமொழி Descriptive Epithet என்ற பெயர் பெறும்.

எல்லாம் வல்ல கடவுள்—ஒன்றும் இயலாத கடவுள் இல்லையாதலின், 'எல்லாம் வல்ல' என்பது இயற்கை அடை.

அறிவுடைய மனிதன்—அறிவில்லாத மனிதரும் உலகில் இருக்கின்றனர். அத்தகையாரை விலக்கி, அறிவுடையவன் என்று ஒருவனைச் சிறப்பிக்க வருவதால் அறிவு என்பது சிறப்படை மொழி.

ஊர்மன்று (சபை)—சபை ஊரில்தான் இருக்கும். ஜனசஞ்சாரமற்ற காட்டில் அது இராது, எனவே இயற்கை அடைமொழி.

அறப் பெண்டிர்—பொருட்பெண்டிரான வேசையரை விலக்கி, அறநிலை நிற்கும் சிறப்பைப் பெண்ணுக்குத் தருவதால், சிறப்படை மொழி.

வெண் முத்து—இயற்கை அடைமொழி.
நீல மணி—சிறப்பு அடை மொழி.
செம் புவளம்—இயற்கை அடைமொழி.

பால்குடம்—சிறப்பு அடைமொழி. ஏனெனில் நெய்க் குடம், தேன் குடம், தயிர்க்குடம் முதலியவை விலக்கப்படுகின்றன.

இவையல்லாத அடைமொழி ஒன்றும் தமிழில் பயின்று வரக்காண்கின்றோம். அதை ஜாதி அல்லது தகுதி நோக்கி வரும் அடைமொழி என்னலாம். அரச மாதர்களையோ, உத்தம ஜாதிப் பெண்களையோ பற்றிப் பேசுங்கால், தர்மம் சேர் ஓதி என்று அவர்கள் கூந்தலைப் பாராட்டுவது உண்டு. இப்படிப் பாராட்டுவது ஒரு கவிசமயம்.

கணவனால் கைவிடப் பெற்று, அற்ற துகிலும் அரு தொழுகு கண்ணீருமாய்க் கானில் வழி நடக்குந் தமயந்தியைப் பற்றிப் பேசுங்கால் "சந்த விரைத் தார் குன்ரு மெல்லோதி," என்று புகழேந்திப் புலவர் அவரது நளகாவியத்தில் கூறக்காண்கின்றோம். இது கூந்தலின் மலர் அணிந்த ஒரு நிலையை வருணிக்க வரவில்லை. மற்று, நங்கையின் கூந்தலுக்கு எப்போதும் மலர் அணிந்திருக்கும் தன்மையும், தகுதியும் உண்டு என்பதை இவ்வுர்ணனை காட்டுவதாகும். தன்மை, தகுதி நோக்கிக் கொடுக்கப்பெற்ற அடையாதலால், இது சாதி அடை யாகும். நாடிழந்து காட்டில் திரியும் நளனை, முடி மன்னன், தேர்வேந்தன் என்றும் கவிவரர் அழைப்பதில், தேரும், முடியும் ஜாதி பற்றி வந்த அடைகளாகும்.

அடைமொழி பற்றி இவ்வளவு தெரிந்து கொண்டால் போதும்.

இலக்கண நூல்கள்

சாதாரணமாகத் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும், மற்றவர்களும், தமிழ் இலக்கணத்தைச் சிறிதும் சிரமமின்றி, மிக எளிதாகப் படித்துப் புரிந்துகொள்ளும் விதத்தில், தக்க மேற்கோள்களுடனும், இனிய நடையிலும், மிகத் திறம்பட எழுதியுள்ளார் பழுத்த தமிழறிஞராகிய கலாநிலையம் திரு. கே. ராஜ கோபாலாச்சாரியார் அவர்கள். தமிழ் அன்பர்கள் அனைவரையும் இந்நூல்களை வாங்கிப் பயன்பெறு மாறு வேண்டுகின்றோம்.

1.	எழுத்தியல்	...	2	00
2.	சொல்லியல்	...	2	50
3.	புணரியல்	...	3	50
4.	பொருளியல்	...	4	50
5.	யாப்பியல்	...	6	50
6.	அணியியல்	...	6	00

இலக்கண விளக்கம்

ஒரு செட்டின் விலை ரூ. 25-00

ஸ்டார் பிரசுரம்

66, பெரிய தெரு,

திருவல்லிக்கேணி :: சென்னை-5

இலக்கிய நூல்கள்

	ரூ.	பை.
சாமி சிதம்பரனர்		
திருக்குறள் பொருள் விளக்கம்	4	50
கம்பன் கண்ட தமிழகம்	2	50
தொல்காப்பியத் தமிழர்	2	50
பத்துப் பாட்டும் பண்டைத் தமிழரும்	3	50
எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும்	3	50
பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்	3	50
சிலப்பதிகாரத் தமிழகம்	4	50
மணிமேகலை காட்டும் மனித வாழ்வு	4	00
இலக்கியச் சோலை	3	50
வடலூரார் வாய்மொழி	3	50
பழந்தமிழர் அரசியல்	3	00
மயிலை சீனி வேங்கடசாமி		
அஞ்சிறைத்தும்பி	2	50
வித்துவான் விசு. திருநாவுக்கரசு		
சிலப்பதிகாரக் காட்சிகள்	2	50
பூச்சூட்டல்	2	00
வித்துவான் வே. துரைசாமி ஐயர்		
பாண்டிக்கோவை	4	00

விஞ்ஞான நூல்கள்

	ரூ.	பை.
எஸ். எஸ். இராமசாமி பிள்ளை B.Sc., B.L.		
வான மண்டல யாத்திரை	3	00
வானத்தின் வண்ணக்கோலம்	3	00
டெலிவிஷன்	2	00
மெண்டலோவ் (வெற்றி கண்ட விஞ்ஞானி)	1	00
திரு. நாராயணன்		
உங்கள் ரேடியோ	1	25
ஏ. கந்தசாமி		
நிற ஜாலம்	2	50
உடலும் உணவும்	1	25
வித்யார்		
பாவ்லோவ் (வெற்றி கண்ட விஞ்ஞானி)	2	05
கு. ராஜாராம் B.Sc., B.L.		
கடல்	2	50
மீன்	0	75
விஞ்ஞானமும் நாமும்	1	20
எஸ். ஏ. தூசைராஜா		
உங்கள் கடிகாரம்	1	25
இளம் பாரதி		
வானத்தில் நாம்	1	25
தி. ஜானகிராமன்		
அணு உங்கள் ஊழியன்	3	00
அணுவின் விளக்கம்	4	00